

# ஞானச்சுடர்


## சந்நிதியான் ஆச்சிரமம்.

ஐப்பசி

2013




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



# குறள்வழி

**ஒழுக்க முடையார்க் கொல்லாவே தீய**
**வழுக்கியும் வாயாற் சொலல்.**

**பொருள் :** மறந்தும் தீமையுடைய சொற்களை வாயினால் சொல்லுதல் ஒழுக்கமுடையவர்களுக்கு ஆகாதவை.

(139)

**உலகத் தோடொட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்.**

**பொருள் :** அறிவு ஒழுக்கங்களாற் சிறந்தவர்களோடு ஒத்து நடத்தல் வேண்டும். அவ்வாறு நடக்காதவர்கள் பல நூல்களைக் கற்றாராயினும் அறிவில்லாதவர்களே யாவர்.

(140)

---

# நற்சிந்தனை



## மறப்பேனோ குருநாதன் தன்னை

**முத்தி நல்குமே**

### குறள் வெண்செந்துறை

அளவுக்கா காரம் அறிந்துண் ணாதான்
பிளவள வேனும் பேரின்ப மெய்தான் 21


உயிரெலாந் தன்னுயிர் போல வுணர்ந்தோன்
பயிலு மிடமது பரகதி யாமே

ஒடுங்கு மனத்தி லுண்மை புலப்படும்
படும்பய னதுவே பற்றற் றோர்க்கே 23

தமஞ்சம மிரண்டின் தன்மையை யறிந்தோன்
அமரர்நா டாளு மாணை நமதே 24

எவரேனு மீசனை யிடைவிடா தெண்ணில்
அவரே நமக்குநல் லன்பராங் கண்டீர் 25

# ஞானச்சுடர்



26 OCT 2013
மாநகரசபை யாழ்ப்பாணம்

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை



# ஞானச்சுடர்

வெளியீடு– 2 ஓம் சுடர்– 190



2013 **பொருளடக்கம்** ஐப்பசி


| | | |
|---|---|---|
| முருக நாம மகத்துவம் | கு. சோமசுந்தரம் | 01 –02 |
| துயர் துடைக்கும்... | இரா. செல்வவடிவேல் | 03 –07 |
| திருவண்டப்பகுதி | சு. அருளம்பலவனார் | 08 –11 |
| ஓங்கார ஒலி | செல்வி செ. ஜடா | 12 –13 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 14 –17 |
| பிரார்த்தனை தினமும்... | ஐ.கோ. சந்திரசேகரம் | 18 –20 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | – | 21 –23 |
| அன்னதானக் கந்தனும்... | Dr V. பாலகிருஷ்ணன் | 24 –25 |
| தமிழினத்திற்கு ஏற்பட்ட... | சிவ. சண்முகவடிவேல் | 26 –27 |
| ஏகாதசி விரத மகிமை | இராசையா ஸ்ரீதரன் | 28 –31 |
| திருமந்திரக் கதைகள் | கே.வி. குணசேகரம் | 32 –33 |
| வீபூதியின் மகிமை | காரை எம்.பி. அருளானந்தன் | 34 –35 |
| வட இந்திய தல யாத்திரை | செ. மோகனதாஸ் சுவாமிகள் | 36 –38 |
| சிறுவர் கதைகள் | – | 39 –42 |
| நித்திய அன்னப்பணி | – | 43 –44 |
| படங்கள் தரும் பதிவுகள் | – | 45 –48 |
| காளமேகம் பாடல்கள் | – | 49 –51 |
| ஊழ்வினை ஒழிய | செல்வி பா. வேலுப்பிள்ளை | 52 –53 |
| கண்டோம் கதிர்காமம் | கவிமணி அன்னைதாசன் | 54 –56 |
| சைவத் திருக்கோயிற்... | கா. கைலாசநாதக்குருக்கள் | 57 –60 |
| சைவ சமய வினாவிடை | ஆறுமுகநாவலர் | 61 –62 |
| தமிழகத் திருக்கோயில்... | வல்வையூர் அப்பாண்ணா | 63 –68 |



**அன்பளிப்பு: மலர் ஒன்று 30/= ரூபா**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர் புரட்டாதிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:**

புரட்டாதிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை திரு சிவ ஆறுமுகசாமி J.P அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில் ஆற்றங்கரை வேலவனின் அருள் நிறைந்திருக்கும் இவ்வாச்சிரமம் கந்தப் பெருமானின் அருளோடு பல்வேறுபட்ட சமய, சமூகப் பணிகளை ஆற்றிவருகின்றது. இப்பணிகள் சிறப்பாக நடைபெறுகின்றது என்பதை ஆச்சிரம மண்டபச் சுவரில் மாட்டப்பட்டுள்ள படங்களே எடுத்துக் காட்டுகின்றது என்றும், வாராந்த வெள்ளி நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்விற்கு ஓரிடத்தைக் கொடுத்து சமய ரீதியாக மாணவ சமுதாயத்தை வளர்க்கும் பணி மகத்தானது. மேலும், இம்மலர் தொடர்ந்து வெளிவருவது சைவ மக்களுக்கு அரிய பொக்கிஷமாக அமைந்துள்ளது என்று கூறித் தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:**

189ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை திரு துரை. கணேசமூர்த்தி ஆசிரியர் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது மதிப்பீட்டுரையின்போது சந்நிதியான் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தினது செயற்பாடுகள் யாவும் மேலைத்தேசக் கலாச்சாரம், நடை, உடை, பாவனைகள் யாவும் மேலோங்கி நிற்கின்ற தற்காலச் சூழ்நிலையிலும் கூட உலக மனித விழுமியங்களைக் கட்டிக்காத்து வருவதோடு கடமை உணர்வு, ஒழுக்கங்கள், சைவ சமயப் பண்புகள் போன்றவற்றை நன்நெறிப்படுத்துவதாகவே காணப்படுகின்றது என்றார்.

மேலும் இம்மலரில் நல்லவர்களாக ஆசைகளை அடக்கி அமைதியாக வாழ்ந்து வாழ்க்கையில் வெற்றிகொள்ள முடியும் என்பதற்கு பல்வேறு ஒழுக்க விதிகளை எளிய மொழி நடையில் இலகுவில் வாசித்து விளங்கிக்கொள்ளக் கூடியவாறு கட்டுரைகள், நற்சிந்தனைகள், சுடர்தரும் தகவல், பொன்மொழிகள் போன்றன அமைந்துள்ளது என்பதை சபையில் கூடியிருந்த அடியார்களுக்கு இரத்தினச் சுருக்கமாகக் கூறித் தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

நாம் வாழுங் காலங்களில் வாழ்க்கையை எப்படி நோக்குகிறோம் என்று சிந்திப்போமானால் நாம் நோக்கும் நோக்கில்தான் நம் வாழ்க்கையே அமைந்திருக்கிறது. நாம் எதைப் பார்க்கின்றோம் எப்படிப் பார்க்கின்றோம் என்பதைப் பொறுத்தே நம்முடைய வளர்ச்சியும், வெற்றியும் அமைகின்றன. எப்படிப்பட்ட சூழலிலும் தன்னுடைய நிலையிலிருந்து கீழிறங்காமல் தனது ஆளுமையை உயர்த்தித் தன் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ள நல்ல வழிகள் இல்லாமலில்லை. அதனை நாம் அறிந்தும் அறியாதவர்கள்போல் நடிக்கின்றோம்.

நம் ஒவ்வொருவருடைய மனதிலும் நல்ல இயல்புகளும் உண்டு. தீய இயல்புகளும் உண்டு. நல்ல இயல்புகளின் வழியே செயற்படுபவரை நல்லவர் என்றும் தீய இயல்புகளுக்கு ஆட்பட்டு செயற்படுபவரை தீயவர் என்கிறோம். நாம் விழித்திருக்கும்போது நமது மனதில் பலவிதமான எண்ணங்கள் தோன்றி மறைவதை நாம் உணர்ந்திருக்கின்றோம். அந்த எண்ணங்களில் நல்லனவும் இருக்கும் தீயனவும் இருக்கும். எது நல்ல எண்ணம், எது தீய எண்ணம் என்பதை உணர்ந்து கொள்ள எல்லோராலும் முடியும். இதற்கு பெரிய ஆராய்ச்சி தேவையில்லை. மனித வாழ்வியலில் இதனை நாம் நன்குணரலாம். நல்ல எண்ணங்கள் தோன்றும்போது முடிந்தால் அவற்றை உடனே செயற்படுத்தி விடவேண்டும். தீய எண்ணங்கள் தோன்றும்போது உடனே அவற்றைச் செயற்படுத்தாமல் தள்ளிப்போடப் பழகிக்கொண்டால்கூடப் போதும் தீய எண்ணங்கள் நம்மை ஆட்படுத்த முடியாது.

நமது மனதைப் புரிந்துகொண்டு மனம் போன போக்கில் போகாமல் எது சரி எது தவறு என்பதையும் அதனடிப்படையில் வரும் நன்மை தீமைகளையும் பகுத்தறிந்து உணர்ந்து நல்லதன் பக்கமும் சரியானதன் பக்கமும் சார்ந்து நிற்க நாம் பழகிக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு நிமிடமும் விழிப்பாக இருந்து நல்ல மனதின் செயற்பாட்டுக்கே நாம் முதலிடம் கொடுத்து வாழப் பழகிவிட்டால் நம்முடைய ஆளுமையும் உயரும். வாழ்வும் மேம்படும். இச்செயற்பாடு தற்காலச் சமூக வாழ்விற்கு மிகவும் அத்தியாவசியமாகக் காணப்படுகின்றது.

இந்த நேரத்தில் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு ஒன்று நமக்கு நினைவுக்கு வருகிறது.

“சென்றவிடத்து செலவிடா தீதொரீஇ
நன்றின் பால் உய்ப்பதறிவு”

இக்குறளுக்கு அமைவாக நாம் அனைவரும் செயற்படுவோமானால் எல்லா நலமும் பெறுவோம் என்பது திண்ணம்.

# ஞானச் சுடர் வேல் வீரனே



-முதுபெரும் புலவர் வை. க. சிற்றம்பலம்-

பாட வேண்டும்யான்
பாடி யுன்றன்முன்
ஆட வேண்டும் முருகா
பன்னிரண்டு கை
ஆறும் திருமுகமும்
பரித்த வேலுடன் முன்வா
நாடு மடியவர்கள்
ஓடியுனைத் தொடர
நலம்புரிந்து காக்கும்
நல்ல ஆற்றங்கரை
செல்வச்சந் நிதிக்கோயில்
நன்று நின்ற முருகா
வாடுந் தமிழரிடர்
ஓடவரம் நல்கி
வாய்த்த அவர் வீட்டையடைய
வைத்த குகனே கந்தா
வள்ளி தெய்வ யானையின்
மணவாள வள்ள ல்நாத
ஆடல் பாடல் நிறை
ஆற்றங் கரைவாழும்
ஐய குமரேச குகனே
ஆச்சிரமத் தடியார்
போற்று ஞானச்சுடர் வேல்
அமர்ந்த திருக்கர வீரனே

# ஐப்பசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

A. சண்முகராஜா
(லண்டன்)

M. சதாசிவமூர்த்தி
(கனடா)

கனகராசா ஸ்ரீமோகனன்
(பிரதேச செயலர், தெல்லிப்பழை)

செ. ஞானசபேசன்
(கிராம அலுவலர், ஏழாலை)

மா. பாலேந்திரம்
(ஆசிரியர், வதிரி)

சி. மகேஸ்வரன்
(பிரதிக் கல்விப்பணிப்பாளர்)

சி. உதயகுமார்
(கிராம அலுவலர், கைதடி)

தலைவர்
(ப.நோ.கூ. சங்கம், கட்டைவேலி)

தி. இரவீந்திரநாதன்
(ஆசிரியர், கலைமணி வீதி, கட்டைப்பிராய்)

ஆ. வடிவேலு
(இளைப்பாறிய அதிபர், தும்பளை)

ச. நாராயணன்
(கிராம அலுவலர், வடலியடைப்பு)

து. பத்மராஜன்
(பலாலிவீதி, திருநெல்வேலி)

சி. ஜெயபரன்
(மானிப்பாய்)

உரிமையாளர்

(நந்தினி என்ரபிரஸ், யாழ்ப்பாணம்)

சி. துளசிங்கம்

(தொண்டைமானாறு)

ச. இராசசேகரம்

(இளைப்பாறிய பொது முகாமையாளர், நீர்வேலி)

இ. சண்முகசுந்தரம்

(ஆசிரியர், மந்திகை)

S. செல்வராசா (செல்வி)

(சேவிஸ்ரேஷன், புலோலி)

மு. அப்புலிங்கம்

(கோண்டாவில் கிழக்கு)

S. தங்கசிவம்

(நல்லூர் யாழ்ப்பாணம்)

ந. சிவக்குமார்

(ராஜன் எலக்ரோணிக், அச்சுவேலி)

திருமதி ஜெயராஜன் சசிலேகா

(ஆசிரியர், தோப்பு, அச்சுவேலி)

ப. தியாகராஜசர்மா

(திருமகள் வாசா, ஆவரங்கால்)

மகாலிங்கம் செல்வமணி

(ஊரெழு மேற்கு, சுன்னாகம்)

K. முகுந்தன்

(ஞானபண்டிதர் பாடசாலை அருகில், கொக்குவில்)

நா. நாகராசா

(பக்கிஸ்லேன், மானிப்பாய்)

ந. மணிவண்ணன்

(இரும்புமதவடி, வதிரி)

திருமதி தர்மகுலராஜா சுகிர்தராணி

(விஷ்ணுபவனம், மானிப்பாய்)

இராதாகிருஷ்ணன் கிரிதரன்

(தம்பலடி, பொலிகண்டி)

**ஆ. யோகதாசன்**

(பூதவராயர் கோவிலடி, உரும்பராய்)

**செ. இராசநாயகம்**

(காப்பாளர், இ.போ.ச, அல்வாய்)

**K. சீவரெட்ணம்**

(கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்)

**வைரவன் கனகன்**

(சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி)

**வே. முருகவேள்**

(நெடியகாடு, வல்வெட்டித்துறை)

**க. சத்தியதாஸ்**

(வில்லிசைக் கலைஞர், சிறுப்பிட்டி)

**வ. இராசநாயகம்**

(கவிதா பொடி பில்லேர்ஸ், கரவெட்டி)

**க. வசந்தகுமார்**

(ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்)

**சி. திருவருட்செல்வி**

(அந்தோனியார் வீதி, மாதகல்)

**P. ரமணகுமார்**

(சங்கரத்தை)

**உரிமையாளர்**

(ஸ்ரீதேவி தொலைத்தொடர்பகம், அச்சுவேலி)

**கதிர்காமு கணேசநாதன்**

(வேளாங்கண்ணி, ஏழாலை)

**சி. பத்மராசா**

(நவிண்டில், கரணவாய்)

**T.R. இரத்தினவேல்**

(அரசவீதி, உரும்பராய்)

**கா. குணவதி**

(நேசபவனம், உடுப்பிட்டி)

**பொ. பத்மநாதன்**

(மானார் வளவு, கைதடி தெற்கு)

**பா. இந்துராணி**

(மல்ரி ஓயில், இணுவில்)

**N. இராஜகோபால்**

(துன்னாலை, கரவெட்டி)

**சு. சுந்தரலிங்கம்**

(வேவில் லேன், வல்வெட்டி)

**இ. பொன்னம்பலம்**

(செட்டிவளவு ஒழுங்கை, இணுவில்)

**தங்கராசா அழகேஸ்வரி**

(வட்டுவடக்கு, சித்தங்கேணி)

**வீ. வடிவேலு**

(தும்பளை தெற்கு, பருத்தித்துறை)

**பொ. கணேசபிள்ளை**

(பாடசாலைவீதி, கோண்டாவில்)

**சிவலிங்கம் சுகந்திகா**

(ஆதியாமலை, உடுப்பிட்டி)

**த. கனகம்**

(பன்னாலை, நீர்வேலி வடக்கு)

**சி. சுப்பிரமணியம்**

(வத்தனை, புலோலி மேற்கு)

**நவரத்தினம் இந்திரமோகன்**

(சண்டிலிப்பாய் மேற்கு)

**திருமதி சிவநிதி முருகானந்தன்**

(கட்டுடை, மானிப்பாய்)

**இராசரத்தினம் வேல்குமார்**

(இணுவில்வீதி, மானிப்பாய்)

**இ. அழகராசா**

(கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு)

# முருக நாம மகத்துவம்

திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்



வெள்ளிக்கிழமை, கார்த்திகை, கந்தசஷ்டி என்பன கந்த விரதங்கள் ஆகும். இவை முறையே, நாள், நட்சத்திரம், திதி என்பவற்றுடன் தொடர்புபட்டுக் காணப்படுகின்றன. இன்று கந்தசஷ்டி விரதநாள். கந்தனின் நாம மகிமை பற்றியும், மாண்புபற்றியும் சிந்திப்பதால், நாம் தூய்மைபெற ஏதுவாகும்.

தமிழ் மக்களால் தொன்றுதொட்டு, மிகுதியாக வழிபாடு செய்யப்பட்டுவரும் தெய்வம் முருகக்கடவுள். பண்டைத் தமிழ்ச் சங்க நூல்களில், குறிப்பாக நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப் படையிலும், பரிபாடல் போன்ற நூல்களிலும் முருக வழிபாடு பற்றிக் கூறப்பட்டுள்ளது. திருமுருகாற்றுப்படை, சைவசமயத்தவர்க் குரிய பன்னிரு திருமுறைகளுள், பதினோராந் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளது. முருகன் திருவருள் பெற்ற ஒருவர், திருவருள் பெறுவதற்கு விரும்பி வழியறியாது நிற்பவர்க்கு வழிகாட்டியாய், அவர்களை முருகனிடம் ஆற்றுப்படுத்துவதாய் அமைந்தது இந்நூல். செந்தமிழ்த் தெய்வம் ஆன செவ்வேள் முருகன், தென்னாடுடைய சிவனே என்பது தெரியவருகிறது. முருகன் எந்நாட்டவர்க்கும் இறைவன் ஆகின்றான். தென்னாடுடைய சிவன், எந்நாட்டவர்க்கும் இறைவன் என்கிறார் மாணிக்கவாசகப் பெருமான். சிவனும் முருகனும் ஒருவரே என்று கொள்வது சைவம்.

முருகு என்றால் அழகு எனப் பொருள்படும். முருகு உடைய வன் முருகன். அழகு குறிப்பது ஒழுங்கினையாகும். எங்கே ஒழுங்கு உண்டோ அங்கே அழகு, செம்மை, நன்மை யாவும் உண்டு. அதாவது அங்கு முருகு, அதை உடைய முருகன் வீற்றிருப்பான். பொருள் ஒழுங்கு, வாழ்க்கை ஒழுங்கு, குணப்பண்பு ஒழுங்கு, வீட்டொழுங்கு, நாட்டின் ஒழுங்கு, உலக ஒழுங்கு என எத்தனையோ ஒழுங்குகள் உண்டு. இவையனைத்திலும் முருகு, அழகு, செம்மை செறிந்திருக்க வேண்டும். இவை முருக வழிபாடு ஆகவேண்டும். இதனையே சைவம், முருக சாந்நித்தியம் எனக் கொள்கிறது. முருக பக்தன் யார், என்றால் மனித வாழ்க்கை ஒழுங்கில், மனித நடத்தை ஒழுங்கில், அகப்புறத் தூய்மையில் செம்மை சேர்ப்பவன், அவற்றில் பயபக்தி கொள்பவன், அவற்றை நிலைநிறுத்துபவன். வாழ்க்கையும் முருகும் இணைவதே முருக வழிபாடு ஆகும்.

முருகக் கடவுளின் நாமங்கள் பல. அவற்றை நாள்தோறும் மனத்தினுள் தியானிப்பது; நாவால் உச்சரித்து அர்ச்சிப்பது; நாம சங்கீர்த்தனம் செய்வது; மந்திரங்களாக உச்சாடனஞ் செய்வது; அவற்றின் பொருள் அறிவது; பிறருக்கு எடுத்துக்கூறுவது என்பன முருகனின் திருவருட்பேற்றினை அடைவதற்குரிய வழிகளாகும். அவற்றால் எமது மனம், மொழி, செயல் என்பன தூய்மையும் அழகும் பெறுகின்றன. சுப்பிரமணியன், கந்தன், கார்த்திகேயன்,

கடம்பன், சண்முகன், சரவணன், செவ்வேள், வேலன், சேயோன், மயில்வாகனன், விசாகன், குகன், சேந்தன், குமரன், வள்ளிகாந்தன், வேள் என்பன அந்நாமங்களில் சில.

சுப்பிரமணியன் என்பதால் ஆதியாய், அநாதியாய், மூலமாய், முதலாய் உள்ள பரம்பொருள் என்று பொருள்படுகிறது. கந்தன் என்று கூறுவதால், சேர்க்கப்பட்டவன் என்னும் கருத்து தொனிக்கிறது. சரவணப் பொய்கையில் வளர்ந்த ஆறு குழந்தைகளையும் உமாதேவியார் ஒன்றாக அணைத்து, ஒரு திருமுருகன் ஆக இணைத்ததன் காரணத்தால் கந்தன், கந்தசாமி எனப் பெயர் பெற்றான். கார்த்திகைப் பெண்களால் சரவணத்தில் வளர்க்கப்பட்டமையினால் கார்த்திகேயன் ஆயினன். முருகப் பெருமான் அணிவது கடப்பமலர் மாலை; ஆகையால் கடம்பன் என்னும் பெயரினால் அழைக்கப்படுகிறான். ஆறு முகங்களை உடையவன் ஆதலால்; ஆறுமுகன், சண்முகன் எனப் பெயர் பெறுகிறான். (சுப்பிரமணியன் என்னும் பெயரின் பொருள் சிவனும் விஷ்ணுவும் ஐக்கியமான நிலை என்றும் நூல்கள் கூறும்) இருவரும் சேர்ந்ததே சுப்பிரமணிய மூர்த்தம் எனப்படுகிறது. சரவணபவ என்னும் மந்திரம் இப்பொருளையே குறிக்கிறது என்று திருச்செந்தூர்ப் புராணம் கூறும். சரவணன்- நாராயணனையும்; பவன்- சிவபெருமானையும் குறிப்பன. சரவணபவன் முருகனின் மற்றொரு பெயர். சைவ வைணவத்தின் இணைப்பினதும், இணக்கத்தினதும் பிரதிபலிப்பாகவும் இதனைக் கொள்ளலாம். வேறொரு விதத்தில் நின்றுபார்க்கும்போது சிவ சக்தி சங்கமமாகவும் எடுத்துக் கொள்ளலாம். சிவனின் நெற்றிக்கண்ணிலிருந்து புறப்பட்டு, சரவணப் பொய்கையைச் சென்றடைந்த ஆறு தீப்பொறிகளும் ஆங்கு ஆறு குழந்தைகளாக உருவெடுத்தமை பற்றி, சரவணபவன் என்னும் பெயருக்கு உரித்தானார் என்றும் விளக்கம் கூறப்படுகிறது. சிவப்பு நிறமுடையவன் என்பதால் செவ்வேள், சேயோன் என்றும்; வேலாயுதத்தைக் கையில் ஏந்தியுள்ளமையால் வேலாயுதன், வேலன், வேலவன் என்றும்; மயிலை வாகனமாகக் கொண்டமையால் மயில்வாகனன் என்றும்; விசாகம் ஜென்ம நட்சத்திரம் ஆனமை பற்றி விசாகன், விசாகப் பெருமாள் என்றும்; சகலராலும் விரும்பப்படுபவன் என்பதால் வேள் என்றும்; பக்தர்களின் இதய குகையில் உறைபவன் என்பதாலும், எல்லோரையும் காப்பவன் என்பதாலும் குகன் என்றும் பல நாமங்களை முருகன் பெறுகின்றான்.

சேந்தன், திருச்செந்தூரை உடையவன்; குமரன் என்றும் இளமையுடன் விளங்குபவன் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. ஆதியில் குறுமுனிக்குத் தமிழ் உரைத்தமையாலும், சிவனுக்கு உபதேசம் செய்தமை பற்றியும் சுவாமிநாதன், ஞானபண்டிதன் எனப்படுகிறான். தெய்வயானையை மணம் முடித்தமையால் தெய்வயானை காந்தன் எனவும்; வள்ளியை மணந்தமையால் வள்ளிமணாளன் எனவும் முருகக் கடவுள் அழைக்கப்படுகிறான். தேவர்களின் சேனைக்குத் தலைமை தாங்கியமையினால் தேவசேனாதிபதி ஆயினன். குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வம் என்ற வகையில் குறிஞ்சிவேந்தன், சிலம்பன் என்னும் நாமங்களுக்கு உரித்தாகின்றான்.

“சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ்நூல் விரித்தோனை விளங்கு வள்ளி
காந்தனை கந்தக் கடம்பனைக் கார் மயில்வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவாதவர்க்கு ஒரு தாழ்வில்லையே”

என்கிறது கந்தரலங்காரம். முருக நாமங்களைச் சொல்லி முருகன் அருள் பெற்று நல்வாழ்வு வாழ்வோமாக.

அருளின் மிக உயர்ந்த வடிவம் மௌனம்.

# துயர் துடைக்கும் அருள் நூல்கள்

இரா. செல்வவடிவேல் அவர்கள்

அருள் என்ற பதத்திற்கு கொடை, சக்தி, சாத்வீகம் என்ற பல பொருள்கள் உண்டு. அருள் என்பது அன்பின் முதிர்ச்சியில் உண்டாவது. அதனால்த்தான் "அருள்ளென்னும் அன்பீன் குழவி" என்றார் வள்ளுவப் பெருந்தகை. அன்பு என்பது தொடர்புடையாரிடத்தும், அருள் என்பது தொடர்பில்லாதாரிடத்தும் தோன்றும் ஒருவகை உள்ள நெகிழ்ச்சியாகும். இத்தகைய அருள் உள்ளம் படைத்த பெரியோர்களால் எழுதப்பட்ட நூல்கள் "அருள் நூல்கள்" எனப்படும். இவற்றை இறையருளைப் பெறுவதற்குக் காரணமாக அமைந்த நூல்கள் என்றும் கூறலாம். அல்லது அருளாகிய சாத்துவீக குணத்தை உண்டாக்குவதற்கு ஏதுவான நூல்கள் என்றும் கூறலாம்.

அருள் நூல்களைப் பலமுறை கற்பதனால் அவற்றிலுள்ள சிறந்த கருத்துக்களைப் பிறருக்கு எடுத்துச் சொல்லுவதாலும் ஏற்படக்கூடிய பயனை அரும்பயன் எனலாம். ஏனெனில் அ∴து இம்மைக்கும் மறுமைக்கும் பயனளிக்க வல்லது.

அருள் வள்ளல்களும் சமய குரவர்களும் நமக்கு அளித்துச் சென்ற அழியாக் கருவூலமாகிய நூல்களே அருள்நூல்கள் எனப்படும். அவை சமய நூல்களும், திருக்குறள் போன்ற நீதி நூல்களுமாகும். சமய நூல்களுள், வேதங்கள், ஆகமங்கள், பன்னிரு திருமுறைகள், பதினான்கு சாஸ்திரங்கள், பற்பல புராணங்கள் முதலியவை சைவ சமய நூல்களென்று கூறப்படும். அவ்வாறே இராமாயணம், பாரதம், நாலாயிர திவ்விய பிரபந்தம், பாகவதம், ஸ்ரீ வசனபூஷணம், பலவித வியாக்கியானங்கள் போன்றவை வைணவ நூல்கள் எனப்படும். பஞ்ச சீலத்தை அடிப்படையாகக் கொண்ட புத்தபிரானின் உபதேச மொழிகளும் ஜாதகம், பீதகம் போன்ற கதைக்கோவைகளும் பௌத்த சமய நூல்கள் ஆகும். மகாவீரர் முதலிய இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களின் உபதேச மொழிகளை சமணர், அருள்நூல் என்பர். விவிலிய நூலாகிய கிறிஸ்தவ வேதம், அருள்நூல் என்று அழைக்கப்படுகிறது. அதில் மலைப்பொழிவைச் சிறந்த பகுதியாகக் கருதுகின்றனர். இஸ்லாமியர் தமது குரான் இம்மைக்கும் மறுமைக்கும் வழிகாட்டும் தூயநூல்கள் என்பர். சீனப் பெருமக்களோ, மகான் கன்பூஷியசைக் காட்டிலும் சிறந்த அருள் வாக்குடையார் வேறு யாருமில்லை என்று கூறுவர். எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து, சிறந்தது பகவத்கீதையே என்பர். காந்தியடிகளும், அவர் சீடர்களும், உலகப் பெரியார்கள் அனைவரும் தத்தம் அருள் நூல்களில் உயர்ந்த கருத்துக்களைப் புகுத்தியுள்ளனர் என்பது புலனாகின்றது.

எல்லாத் துறையிலும் முன்னேறும் மனிதன், ஆற்றல் மிக்கவனாக இருக்கிறான். ஆனால், அணுகுண்டைக் கண்டுபிடித்த அவனது அறிவு ஆன்மாவைப் பற்றி மட்டும் அறியாமலே இருக்கிறது. உயிர் என்பது என்ன? அ∴து எப்படியிருக்கும்? அ∴து எங்கிருந்து வருகிறது? அது தன் வினை முடிந்தபின் எங்கே செல்கிறது? என்பன போன்ற விடயங்கள்

மாத்திரம் தெரியவில்லை. அவை எக்காலத்தும் யாருக்கும் தெரியலாகாது என்று எந்தச் சக்தி மறைத்து வைத்திருக்கிறதோ, அந்தச் சக்தியையே நாம் அருள் என்றும் கடவுள் என்றும் கூறுகிறோம். அச்சக்திக்கு மிக அண்மையில் நம்மைக் கொண்டு சேர்த்து, அதன் அருளுக்கு பாத்திரமாவதற்கு வழிகாட்டுவது தான் அருள் நூல்களின் பயன். அவை, கடவுளது பெருமையையும், புகழையும் விரித்துக்கூறும். மனம் என்னும் குரங்கைத் தன் விருப்பம்போல் செல்லவிடாது ஒரு நிலைப்படுத்துவது எல்லோருக்கும் இயலாது. அத்தகையோர், அருள் நூல்களைப் பயின்று வந்தால் சிந்தைக்கும் மனதுக்கும் நல்ல பயிற்சி ஏற்படும். ஒருமைப்பாடுள்ள மனத்தின் துணையால் அரிய காரியங்களையும் சாதிக்க முடியும்.

மனமானது தான் சார்ந்ததன் வண்ணமாதலைப் போலவே நாவும் பயின்றதன் வண்ணமாகவே பேசும். அதனால் தான் "செந் தமிழிமும் நாப்பழக்கம்" என்று சொல்லப் படுகிறது. சிறந்த நாமா வளிகளையும், நூல்களையும் ஓதிப் பழக்கப்படுத்திக் கொண்டால், நம்மையும் அறியாது நமது நாவானது இறைவனது பெருமையையும், அரும்பெரும் செயல்களையும் பற்றியே பேசும். அதனாலேயே, "நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" என்றும் "நாராயணாவென்னா நாவென்ன நாவே" என்றும் ஆன்றோர் கூறியுள்ளனர்.

ஒரு தொழிலைத் திறம்படச் செய்து முடிக்க நல்ல பயிற்சி இன்றியமையாதது. அதைப்போலவே, ஒருவருடைய ஆன்மசக்தி வளர்வதற்கு அருள் நூல்களின் அறிவு இன்றியமையாதது. அருள் நூல்களின் அறிவு உடல் நலத்திற்கும் அறிவின் தெளிவுக்கும் உகந்ததாகும். மேலும், நமது அமைதியான வாழ்வுக்கும் சமூக ஒற்றுமைக்கும் இவ்வறிவு அவசியமாகும்.

சிறிது காலத்துக்கு முன் வாழ்ந்து வந்த பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் வாழ்வில் நடந்த உண்மைச் சம்பவம் ஒன்று உண்டு. அவரது வயதான காலத்தில் ஒருநாள் வழுக்கி விழுந்ததனால் கால் எலும்பு முறிந்தது. சென்னை வைத்தியசாலையில் முறிந்த எலும்பு ஒன்றுசேராது என்று மருத்துவர்களால் கைவிடப்பட்டது. ஒருநாள் முருகப் பெருமான் அவரது கனவில் தோன்றித் தன் வேலாயுதத்தினால் அவரது எலும்பைக் கட்டியது கண்டு மகிழ்ந்தார். மறுநாள் விழித்தெழுந்தபோது தன்னுடைய கால் எலும்பு உண்மையாகவே கூடியிருந்ததைக் கண்டு மகிழ்ந்தார். இறைவனை மனமார வாழ்த்தினார். இதைக் கண்ணால் கண்டவர்களும் உள்ளனர். இதற்கெல்லாம் காரணம் அருள் நூல்களைப் படித்து இறையருள் பெற்றதாகும்.

அருள்நூல்கள் மருந்தாக உதவுவதுடன் பொன்னும், போகமும் தரவல்லமையுமாகும். எப்படியெனில், வன்றொண்டர் பெருமான், தமிழால் பாட்டிசைத்தே இறைவனிடம் பொன்னும் பொருளும் வேண்டப் பெற்றார் என்பது தேவாரத்தினின்றும் புலனாகிறது. அருணகிரிநாதர் தொழுநோயினின்றும் விடுபட்டு, முருகனது புகழ் மாலையைப் பாடக் காரணமாக இருந்தவையும் அருள் நூல்களாகும்.

துறைமங்கலம், சிவப்பிரகாச சுவாமிகள், நால்வர் நூல்களிலும், ஏனைய அருள் நூல்களினாலும் ஊறித்திளைத்த காரணத்தினாலேயே நால்வர் நான்மணிமாலை போன்றவற்றை இயற்றிப் புகழுடல் பெற்றார். அவ்வாறே இராமலிங்க சுவாமிகளும்

சமயகுரவரது நூல்களில் திளைத்து, அவற்றிலுள்ள அரிய கருத்துக்களை தம் அருட்பாக்களாக வடித்துக் கொடுத்தார்.

இக்காலத்தில் ஆண்கள் அருள் நூல்களை ஓதுகையில் தமது பதவி உயர்ந்து, வாணிகம் பெருகி, வருவாய் மிக வேண்டுமென்று கருதலாம். பெண்களோ, தமக்கும் தமது குடும்பத்தினருக்கும், நண்பர்கட்கும் அரிய காரியங்கள் யாவும் கைகூடி நலம்பெற வேண்டுமென விரும்புவர். மேலும், அவர்களது கணவன்மார் தம் வாழ்க்கை சிறந்து விளங்கவேண்டும் என்பதும் அவர்களது பெருவிருப்பமாகும். மணமாகாத பெண்கள், திருப்பாவை, திருவெம்பாவை போன்ற நூல்களை ஓதி, இம்மையின்பத்தையும் நல்ல கணவரையும் பெற வேண்டுமென்று விரதமும் அனுட்டிப்பர்.

தமிழ்நாட்டில் பெண்கள் ஔவையார் நோன்பு என்ற நோன்பினை இன்றும் கடைப்பிடித்து வருகிறார்கள். இவ்விரதம் இராக்காலத்தில் ஆண்கள் இல்லாத இடத்தில், பல பெண்கள் ஒரு இடத்தில் கூடியிருந்து கடைப்பிடிக்கிறார்கள். இவ்விரதத்தில் அரிய பாடல்கள் பாடப்படுகின்றன. இவ்விரதத்தின்போது விஷேடமான உணவும் தயாரிக்கப்படுகிறது. இவ்வுணவை விரதம் பூர்த்தி செய்து அதிகாலையில் பெண்கள் மட்டுமே உண்கிறார்கள். இவ்விரதம் பெண்கள் அனுட்டிக்கும்போது ஆண்கள் மறந்தும் அந்த இடத்திற்குப் போகமாட்டார்கள். பெண்களின் திண்ணிய எண்ணத்தின் பயனாகவும், தூய விருப்பத்தின் காரணமாகவும் நிறைந்த வாழ்வு வாழ்கிறார்கள்.

பூசையின் அங்கமாக நாம் பாடுகின்ற பாடல்களை கூச்சமின்றி நமக்குத் தெரிந்த இசையில் பாடிப் பழக்கப்படுத்திக் கொண்டால் அவை எளிதில் மனப்பாடமாகும். சில பாடல்களைத் தாலாட்டாகவும், அபிநயப் பாட்டாகவும் பாடலாம். இராகம், தாளம் முதலியவை சாஸ்திரப்படி சரியாக அமையவேண்டும் என்னும் நியதியும் இல்லை. உள்ளத்தை உருக்கும்படியும் பொருள் விளங்கும்படியும் பாடுதல் வேண்டும். புத்தகத்தைப் படிக்கத் தெரியாது கேள்வி வாயிலாகவே பல பாடல்களைக் கேட்டு மனப்பாடம் செய்தவர்கள் உண்டு. இப்படிப்பட்ட நல்ல பக்தியான சூழ்நிலை அமைந்த வீடுகளில் வீண்சண்டை, பூசல், மனப்போராட்டம் முதலியவை இருக்காது.

ஔவையாரிடம் ஒருவர் படிக்க வேண்டிய அருள்நூல்கள் எவை? என்று வினாத் தொடுத்தார். அதற்கு தமிழ் மூதாட்டி கூறிய விடையை இங்கு காண்பது சிறப்பாக அமையும் எனக் கருதுகிறேன்.

"மூவர் தமிழும் முனி மொழியும் கோவைத் திருவாசகமும் திருமூலர் சொல்லும் ஒருவாசகம் எனக்கொள்" குழந்தைகளுக்கு பக்திச் சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அவசியமானதும், அவசரமானதுமான காலத்தில் வாழ்கிறோம். சிறு குழந்தைகளுக்குத் தங்களைப் போன்ற குழந்தையாகிய முருகனது கதையைக் கூறி அவனது புகழைச் சொல்லும் பாடல்களைக் கற்பிக்கலாம். வைஷ்ணவர்களானால் கண்ணனைப் பற்றி எடுத்துரைக்கலாம். சிறுவயதில் இப்பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் மனதில் தெளிவும், வாக்கினில் ஒளியும் ஏற்படும். அப்படிப் பழகியவருடைய வாக்கு, செல்லும் வாக்கு அல்லது எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் வாக்காக அமையும். அத்தகையோர் வாக்குகளுக்கு வியாதிகளும், விட தோஷமும் அடங்கும். அதனையே மந்திரம் என்றும் கூறுவார்கள். இக்கருத்தினை உணர்த்தவே,

"நிறைமொழிமாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"

என்று தொல்காப்பியனார் விளக்கம் கொடுத்தார்.

நமது அருட்பாக்கள் துயர் துடைக்கும் மந்திரங்களாகத் திகழ்கின்றன. தேவாரப் பதிகங்கள் என்றால், முதற்பாட்டில் தொடங்கிப் பத்து அல்லது பதினோராம் பாட்டு முடியப் படித்தால் பயன் உண்டு என்றதொரு பழைய நம்பிக்கையும் மரபும் உண்டு. அக்காலச் சூழ்நிலையில் இது உகந்ததாக இருந்திருக்கலாம். மன இறுக்கமும், காலக் கெடுபிடியும் உள்ள இக்காலத்தில் பதிகம் முழுவதையும் படிக்க வேண்டும் என்று வற்புறுத்துவது தேவையா என்று நினைக்கத் தோன்றுகிறது. என்றாலும் ஒரு சில பதிகங்களைப் பொருத்தமட்டில் முழுமையாகத் தேவைப்படுகின்றன என்பதில் ஐயமில்லை. இம்முழுவடிவில் தான் இப்பதிகங்கள் மந்திர ஆற்றலைப் பெறுகின்றன.

ஒவ்வொரு பாடலும் ஒரு குறிப்பிட்ட வகைத் துன்பத்தை விரிவாக எடுத்துச் சொல்லுகிறது. அப்பாடலின் முடிவில் குறிப்பிட்ட அத்துன்பம் சாதாரண மக்களைப் பற்றி வாட்டலாம். ஆனால் அதே துன்பம் அடியார்களைப் பொறுத்தமட்டில் வாட்டாது என்று கூறுவதோடு, பிறருக்குத் துன்பம் செய்யும் இவை அடியார்களைப் பொறுத்தமட்டில் துன்பம் செய்யாமல் இருப்பதுடன், நன்மையே செய்யும் என்று அறுதியிட்டுக் கூறுகிறார் திருஞானசம்பந்தப் பெருமான்.

அப்பர் பெருமானின் பதிகங்களும் துன்பம் துடைக்கும் மந்திரங்களாகும். கோளறு பதிகம், விடம் தீர்த்த பதிகம், துயர் துடைக்கும் மறையுடையார் என்ற பதிகம், செல்வம் வேண்டி நிற்கும் இடரினும் தளரினும் என்னும் பதிகம், வயிற்றுவலி போக்கும் கூற்றாயினவாறு போன்ற பதிகங்களைப் பாடி துன்பம் நீங்கலாம் என்பது முற்றிலும் உண்மை.

இவற்றைப் படிப்பதற்குக் காலம், நேரம் குறித்து- மடியுடுத்திக் கிழக்கு முகமாக நிற்றல் ஆகிய எதுவும் தேவையில்லை. ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் எந்த நேரமாயினும் சரி, படுக்கையில் படுத்துக்கொண்டும் கூட இவற்றைப் படிக்கலாம். இவற்றைப் படிக்கத் தேவைப்படுவது இவை மந்திரங்கள் என்ற உறுதியான நம்பிக்கை ஒன்றுதான். தவறாமல் நாள்தோறும் மன உறுதியோடு கற்பார் விரைவில் அப்பயன் அடைவர் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. சந்தேகம் உடையவர்களை மனதிற் கொண்டுதான் "ஆணை நமதே" என்றும், திருவெண்காட்டுப் பதிகத்தில் "ஐயுற வேண்டா" என்றும், இறைவனின் "தலைமகனாகி நின்ற தமிழ் ஞானசம்பந்தன்" அறுதியிட்டுக் கூறியுள்ளார்.

மறை உடையாய் தோல் உடையாய்
வார் சடை மேல் வளரும்
பிறை உடையாய் பிஞ்ஞகனே
என்று உனைப் பேசின் அல்லால்
குறை உடையார் குற்றம் ஓராய்
கொள்கையினால் உயர்ந்த
நிறை உடையார் இடர்களையாய்
நெடுங்களம் மேயவனே.

அப்பாடலில் "உன்னைப் புகழ்ந்து பேசும் வேதங்களையும் புலியின் தோலையும் தவறு இழைத்த சந்திரனையும் ஒன்றாக மதிக்கும் நீண்ட சடையுடைய பெருமானே என்று உன்னைப் புகழ்ந்து பாடும் அடியவர்களுடைய குற்றங்களை ஆராயாமல், உயர்ந்த குறிக்கோளையும், கடைப்பிடிப்பையும் உடைய அடியவர்களது துயரத்தைப் போக்க வேண்டும் நெடுங்களத்துப் பெருமானே" எனும் கருத்து வெளிப்படுகிறது. இப்பதிகம் அனைத்து இடர்களும் நீக்கும் ஆற்றல் கொண்டது.

இவ்வாறே நமது நிறைமொழி மாந்தர்கள் அருளிய அருள்நூல்கள் பற்பல பயன்களை விளைவிக்கும். முதலில் கோயிலுக்குச் செல்ல வேண்டும். பின்னர் ஆலய அமைப்புப் பற்றியும் விதிமுறைகள் பற்றியும் தெரிந்து கொள்ளலாம் என்பது அடியேனின் கருத்தாகும். இன்றைய மாணவர்கள் இந்து சமயம், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களைப் பரீட்சைக்காகப் படிக்கிறார்கள், சித்தியுமடைகிறார்கள். ஆனால் இவர்களால் சமூகத்திற்கு விளைந்த நன்மை என்ன? எழுதிப் படித்ததோடு சமயம் முடிந்துவிட்டது. இவ்வாறு இல்லாமல்,

"கற்றதனால் ஆய பயனென்கொல்? வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"

எனும் நீதிக்கருத்தை மனதில் கொண்டு துன்பம் நீங்கி இன்பமாக வாழ்வதற்கு துயர் துடைக்கும் அருள் நூல்களைப் படிப்போம்; பயன் அடைவோமாக!

## நூறு நூறாண்டு

பாட்டி சொன்ன வாழ்த்திது அதை
பேணிப்பாதுகாத்து, பயபக்தியோடு
பெற்ற தாய்மாரும் "பேறான குழந்தைகள்
பெரிதாய் தும்மும்போது" வாழ்த்துவார்கள்.

ஆட்டிப் படைக்கும் துன்ப மெல்லாம்
அச்சொட்டாய் இதைச் சொல்லும் போது
அகன்றிடும்! கிட்டவும் அணுகாது உண்மை!
ஆயுள் கெட்டியாக அதிகரிக்குமே!

வீட்டிலே இதைச் சொல்வதற்கு யாருளர்?
வெறுமனே இதைக் கேட்பதற்கு யாருளர்?
வாயிலே சொல்வதற்கு வெட்கமாக்கினரோ?
வேஷங்கள் வாழ்க்கையாகாது இது மந்திரம்!

ஊட்டிய சோறு விக்கினால் அமுதம் என்று
ஒருமுறை சொன்னாலே விக்கல் நிற்கும்.
ஒட்டிய பண்பாட்டை ஒதுக்காதீர்கள்
ஒலிக்கட்டும் "நூறு நூற்றாண்டு" வீட்டில்.

கே.எஸ். சிவஞானராஜா.

கொடுக்கும்போது கனிவு இருத்தல் வேண்டும்.

(தொடர்ச்சி...)



# திருவண்டப்பகுதி

## சிவனது தூலசூக்குமத்தை வியந்தது

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

## இணைக்குறளாசிரியப்பா

சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
(யாழ்ப்பாணம் - காரைநகர்)

தன்னே ரில்லோன் றானேயான தன்மை
யென்னே ரனையோர் கேட்கவந் தியம்பி
அறைகூவி யாட்கொண் டருளி
மறையோர் கோலங் காட்டி யருளலும்
உளையா வன்பென் புருக வோலமிட்
டலைகடற் றிரையி னார்த்தார்த் தோங்கித்
தலைதடு மாறா வீழ்ந்துபுரண் டலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவுங் கேட்டவர் வியப்பவுங்
கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தின்
ஆற்றே னாக வவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்



**பதவுரை:**

தன் நேர் இல்லோன் தானே ஆன தன்மை- தனக்கு ஒப்பாவார் பிறர் எவரும் இல்லாதவன் தான் ஒருவனுமே ஆன தன்மையினை, என் நேர் அனையோர் கேட்க- என்னை ஒத்த தகுதி குறைந்த தன்மையுடையோரும் கேட்டு உணருமாறு, மறையோர் கோலம் காட்டி வந்து- அந்தணர் கோலத்தைக் காட்டிக் குருவடிவில் எழுந்தருளிவந்து, அறை கூவி ஆட்கொண்டருளி- போர் செய்தற்கு வலிய அழைத்தாற்போல என்னை வலிந்து அழைத்து என்னை ஆட்கொண்டருளி, இயம்பி அருளலும்- உபதேசஞ் செய்து அருள் செய்த அளவிலே உளையா- அருட் பெருக்கை தாங்கமுடியாமல் மனம் வருந்தி, அன்பு என்பு உருக ஓலம் இட்டு- அன்பினால் என்பும் உருகக் கூவியழைத்து, அலை கடல் திரையில் ஆர்த்து ஆர்த்து ஓங்கி- அசையா நின்ற கடலின் திரைகளைப்போல இடையறாது ஆரவாரித்து மேலெழுந்து, தலைதடு மாறா வீழ்ந்து புரண்டு அலறி- நிலை கலங்கி கீழே வீழ்ந்து புரண்டு கதறி, பித்தரின் மயங்கி- பித்தரைப்போல மயங்கி, நாட்டவர் மத்தரின் மதித்து மருளவும்- நாட்டிலுள்ளார் என்னை வெறிகொண்ட பிடித்தாரைப்

போலக் கருதி அச்சங் கொண்டு மருட்சியடையவும்; கேட்டவர் வியப்பவும்- என் தன்மையைக் கேள்விப்பட்டவர் வியப்படையவும், கட களிறு ஏற்றா தட பெருமதத்தின் ஆன்றேன் ஆக- ஆண் யானை பாகனைத் தன்மேல் ஏறவிடாமைக்குக் காரணமாகிய மிகப்பெரிய மதக் களிப்பினைத் தாங்கமாட்டாமை போல என்பாற் பெருகிய அருட் பெருக்கினைத் தாங்க இயலாதவனாகும்படி, அவயவம் சுவை தரு கோல் தேன் கொண்டு செய்தனன்- என் உறுப்புக்களை எல்லாம் தீஞ்சுவையினைத் தருகின்ற கொம்பிற்றேனைக் கொண்டு ஆக்கினன்.

தன் நேர் இல்லோன் தானேயான தன்மை என்றது தனக்கு ஒப்பாவார் பிறர் எவரும் இல்லாதவன் தான் ஒருவனேயான தன்மை என்றவாறு. "நின்னாவார் பிறரன்றி நீயேயானாய்" "இணையொருவர் தாமல்லால் யாருமில்லார்" (தே. 257:2, 296:7) எனத் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியமையுங் காண்க. நேர்- ஒப்பு.

என் நேர் அனையோர் கேட்க என்றது தன்னை அறியும் ஆற்றலில் மிகத்தாழ்ந்த நிலையிலுள்ள என்னை ஒத்த தன்மையுடையோர் கேட்க என்றவாறு. நேர் என்பது ஈண்டு வினைச் சொல்லாய் நின்று ஒத்த என்னும் பொருள்தந்தது. "நறுமுல்லை நேர்முகை யொப்ப" (கலி 21:9) என்புழிப்போல அனையோர்- அத்தன்மையையுடையோர்.

பலவகையான் முயன்றார்க்கெல்லாம் ஒளித்திருந்தும், அடிகளை ஆட்கொள்ள வேண்டி இறைவன் அந்தணப் பரமாசாரியனாய் வலிய வந்து வெளிப்பட்டமையின் "மறையோர் கோலம் காட்டி வந்து" என்றார்.

"அருவாய் மறைபயில் அந்தணனாய் ஆண்டுகொண்ட
திருவான தேவற்கே"
கோத் 14.

"திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநாம் அறியவோர் அந்தணனாய் ஆண்டுகொண்டான்"
தெள் 1.

"அந்தண னாகிவந் திங்கே அழகிய சேவடி காட்டி
எந்தமராம் இவனென்றிங்கென்னை யுமாட்கொண்டருளுஞ்
செந்தழல் போல்திரு மேனித் தேவர்பிரான்"
குயில்10.

"அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்"
பள்ளி 8.

"பத்தர் சூழச் பராபரன் பாரில்வந்து பார்ப்பானெனச்
சித்தர் சூழச் சிவபிரான் தில்லைமூதூர் நடஞ்செய்வான்
எத்தனாகிவந் தில்புகுந் தெமை ஆளுங்கொண்டு"
சென்னி 4.

என வருவன காண்க.

அறைகூவல்- போருக்கு அழைத்தல். "அருமுனையா னறைகூவின பின்" (பு.வெ.மா. 67) என்புழி. "அறைகூவின பின்- போருக்கு அழைத்த பின்" என அதன் உரையாசிரியர் உரைத்தமை காண்க. போருக்கு வலிந்து அழைத்தாற்போல இறைவனும் அடிகளை வலிந்தழைத்து ஆட்கொண்டருளினமையின் "அறைகூவி ஆட்கொண்டருளி" என்றார். இதனை,

காமம் ஒருவனைப் பிச்சைக்காரனாக்கிவிடும்.

"கள்ளேன் ஒழியவுங் கண்டுகொண் டாண்டதெக் காரணமே"
நீத் 2

"நம்மை யகப்படுத் தாட் கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை"
பொற் 12

"ஆவா அரியயன் இந்திரன் வானோர்க் கரியசிவன்
வாவா வென்றென்னையும் பூதலத்தே வலித் தாண்டு கொண்டான்"
தெள் 7

"தேடி நீ யாண்டாய் சிவபுரத் தரசே"
வாழாப்பத்து 3

"நாயிற் கடையாம் நாயேனை நயத்து நீயே ஆட்கொண்டாய்"
குழைத் 8

"தில்லைமூதூர் நடஞ்செய்வான், எத்தனாகிவந் தில் புகுந்தெமை
யாளுங் கொண்டு"
சென்னிப் 4

என அடிகள் அருளியவற்றானுமறிக.

உளையா- வருந்தி. "உளைவிலை- வருத்தமிலையாய்" கலி 83:5 நச். வருந்தியது அருட்பெருக்கைத் தாங்கமுடியாமை பற்றி. இனி உளையா அன்பு என்பதற்கு வெறுப்பில்லாத அன்பு எனினுமாம். அன்பு என்புருக என்றது அன்பினால் உடலின் வலிபாகமாகிய என்பும் உருகும்படி என்றவாறு. "அன்பினாலடியேன் ஆவியோ டாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருக" (கோயிற் 2) என வருதல் காண்க. ஓலமிட்டு- கூவியழைத்து. திருக்கோவையார் 179 உரை. ஓலமிட்டு (150) ஆர்த்து (151) என இயையும். அலைகடற் றிரையின் ஆர்த்தார்த்து ஓங்கி விழுந்து புரண்டு அலறி என இயையும். "ஓங்கணை மேவிப் புரண்டுவிழுந் தோலமிட்டுத், தீங்கணைந்தோரல்லுந் தேறாய் கலங்கிச் செறிகடலே" (திருக்கோவை 179) என அடிகள் அருளியமையுங் காண்க. ஆர்த்து ஆர்த்து என்னும் அடுக்கு விரைவு பற்றி வந்தது. தலைதடுமாறா- நிலைகலங்கி. இது செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். பித்தரின் மயங்கி- பித்தர் மயங்குவது போல மயங்கி என்றவாறு.

ஓலமிட்டதும் ஆர்த்தார்த்து ஓங்கியதும் தலைதடுமாறியதும் வீழ்ந்து புரண்டு அலறியதும் இறைவனது அருட்பெருக்கைத் தன் ஊனுடம்பில் தாங்கமுடியாமை பற்றி என்க.

மத்தர்- மனக்களிப்பினையுடையவர். மத்தம்- மனக்களிப்பு. "மத்த மனத்தொடு மாலிவனென்ன" (சதக 3) என வருதல் காண்க. மதித்தல்- கருதுதல். "மனங்கொ ளருள் நீர்மைதனின் ஆடலை மதித்தான்" (கந்த. திருவிளையாட்டு 1) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. மருளவும், வியப்பவும் ஆற்றேனாக என இயையும்.

கடக்களிறு ஏற்றாத் தடப்பெருமதத்தின் ஆற்றோனாக என்றது களிறு பாகனைத் தன்மீது ஏறவிடாமைக்கு காரணமாகிய மதத்தின் வழி திரிதல்போல என்பாற் பெருகிய அருட்பெருக்கினை ஊனுடம்பினையுடைய யான் தாங்கமாட்டேனாய் அவ்வருள்வழித் திரிதர என்றவாறு. கடக்களிறு என்பது இடுகுறி மாத்திரையாய் நின்றது. கருங்கண்ணன் என்பதுபோல.

துயரம் மனிதனைக் கிழவனாக்கிவிடுகிறது.

அவயவம் கோற்றேன் கொண்டு செய்தனன் என்றது இங்ஙனம் ஆற்றா நிலையைக் கண்ட இறைவன் தன்மாட்டு யான் கொண்ட பேரன்பாலும் அவ்வன்பினால் யான் பெற்ற பேரருளாலும் தூயதான என் இயல்புக்குத்தக என் உடம்பையும் நுண்ணிய தூய இன்பவடிவாகச் செய்தனன் என்றவாறு. இது அடிகள் இறைவனிடத்து நிருவாணதீக்கை பெற்றுக்கொண்டபின் தமது உடம்பில் உளதாகிய தூயதன்மையைக் கூறியவாறு. அவயவம்-உறுப்பு வடசொல். கோற்றேன்- கொம்புத்தேன். மிக்க தீஞ்சுவைத்தாதலின் அதனை எடுத்துக் கூறினார். "கோற்றேன் எனக்கென்கோ குரை கடல்வா யமுதென்கோ" (உயிருண் 8) "கோற்றேன் மொழிக் கிள்ளாய்" (தசாங்கம் 7) என அடிகள் பிறாண்டு கூறுதலும் காண்க.

கேட்க (147) மறையோர் கோலம் காட்டி (149) வந்து (147) அறைகூவி ஆட்கொண்டருளி (148) இயம்பி (147) அருளலும் (149) உளையா ஓலமிட்டு (150) ஆர்த்தார்த்து ஓங்கி (151) வீழ்ந்து புரண்டு அலறி (152) மயங்கி (153) மருளவும் வியப்பவும் (154) ஆற்றேனாக அவயவம் (151) கோற்றேன் கொண்டு செய்தனன் (157) என முடிக்க.

(தொடரும்...

# சந்நிதிக் கந்தன்

# கழற்கோர் கவிமாலை - 45

## "நெஞ்சிலுள தென்றுமருள்வான்"

துள்ளியலை பொங்கவுன துங்கமுகன் சந்நிதிமு
 னுள்ளகுளஞ் சென்றுநனி -நீராடி
துன்பவையொ டுங்கச்சிவ சந்நிதிமு னின்றநிலை
 யென்றுவுரை செய்மவுன -விழாமுடிய
வள்ளியொடி ருந்தநிலை கண்டவுன தெய்வியவள்
 தங்கிடமு னைந்துவர -முனிவோடு
வந்தடையு முன்கதவை நன்கடைசெ யிந்தநிலை
 கண்டுளமு டைந்துபின -ரதில்மோதி
பள்ளிகொள வென்றுமுனம் தெய்வியொ டிருந்துறையு
 மந்தஇட மென்றுபுகல் -மூலஸ்தானம்
பந்தமொடு சென்றிருந்து அங்கவள்து யர்களைந்து
 முந்தைஅயி லென்றெழுந்து -அருள்வேளே
வெள்ளிவடி வுள்ளவடி தஞ்சமெனக் கெஞ்சடியர்
 நெஞ்சிலுள தென்றுமருள் -முருகேசா
வெந்துயர ழிந்துநித மின்பினில முந்தவென
 நின்றருள்வ ழங்கிடுஞ்சந் -நிதியானே!

-இராலசையா குகதாசன்-


அறிவும் அறியாமையும் சேர்ந்ததே மனம்.

# ஓங்கார ஒலி

செல்வி செ. ஜடா அவர்கள்

"அ" என்பது முதல் ஒலி. வாயைத் திறந்தவுடன் எழும் ஒலி; ஒலிகட்கெல்லாம் தாயாகவும், தந்தையாகவும் உள்ள ஒலி. அடிப்படையான ஒலி.

உ என்பது அடுத்த ஒலி. இ்.து உயிர் ஒலி எல்லா மொழிகளிலும் உள்ள உயிர் ஒலி. அகர ஒலியும், உகர ஒலியும் இணையும் பொழுது ஓகார ஒலி பிறக்கிறது. அ+உ= ஓ, ஓகாரமும் ம் ஒலியும் சேர்ந்தே ஓங்கார ஒலி. ஓங்கார ஒலி உயர்த்துவதைக் குறிக்கும். ஓ... எனத் தொடர்ச்சியாகச் சொல்லிப் பாருங்கள். சிந்தனையில் தெளிவு ஏற்படும். உள்ளத்தில் அமைதி ஏற்படும்.



ஓங்காரத்தை உச்சரித்தால் உச்சரித்தவர் உயர்வுறுவார். உயர்ந்த கதியை அடைவர். ஓங்கார ஒலி உயிர்க் குற்றங்களை அகற்றுகிறது. இறை வனடியில் ஆன்மாவைச் சேர்ப்பிக்கின்றது.

ஓங்காரம் இறைவனை உணர்த்தும் ஒலி. ஓம் என்ற சொல் இறைவனை உணர்த்தும் சொல். ஓம் என்ற சொல்லைத் தியானித்தால் பேரின்ப நிலை எய்தலாம்.

ஓம் என்ற சொல்லில் அகர ஒலி உண்டு. உகர ஒலி உண்டு, மகர ஒலி உண்டு. ஓம் என்பது பிரணவம். இந்தப் பிரணவமே வேதத்தின் மூலம்.

ஓம் என்ற ஒலியின் வடிவமே பிள்ளையார். ஓங்கார வடிவானவர் பிள்ளையார். பிள்ளையார் குற்றங்களை நீக்குபவர். துன்பங்களை நீக்குபவர். இடையூறுகளைப் போக்குபவர். இவர் ஒப்பாரும், மிக்காரும் இல்லாதவர். தனக்கு மேல் தலைவன் இல்லாதவர். வடமொழியில் இவரின் பெயர் விநாயகன். வி + நாயகன் என்றால் வேறு தலைவர் இல்லாதவர் என்பது பொருள். நமது வாழ்க்கை மனித வாழ்க்கை. உயிரானது ஒருபுறம் இறைவனது தொடர்பை நாடுகிறது. இறைவனது திருவடிகளை அடைந்து பேரின்பப் பெருவாழ்வை அடைய முயல்கிறது.

மறுபுறத்தில் உயிரினை ஈர்த்து உலகாய வாழ்வில் ஈடுபடுத்துகின்றன. மலங்கள்- இதனால் துன்பங்கள் ஏற்படுகின்றன. குற்றங்கள் வருகின்றன. வினைக்கு உரியதாகின்றது உயிர்.

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களும் அறிவை மயக்குகின்றன. புத்தியைக் கலக்குகின்றன. புலன் ஐந்தின் வழி அறிவை மயங்க வைக்கின்றன. இந்த மயக்கத்தில் இருந்து விடுபடவேண்டும் இந்த மாயை நம்மைவிட்டு அகலவேண்டும். அறிவு தெளிவாக இருக்கவேண்டும். சிந்தனை இறைவன் பாற்பட்டதாக இருக்கவேண்டும். இறைவனால் நாம் ஆட்கொள்ளப்பட வேண்டும்.

பிள்ளையார் மலங்களின் பிடியில் இருந்து விடுவிப்பவர். வாழ்க்கையில் புலன்களினால் வரும் துன்பங்களில் இருந்து விடுவிப்பவர். பிள்ளையாரை வழிபட்டால் துன்பம் நீங்கும். ஓங்கார ஒலியுடன் இணைந்தவர் பிள்ளையார். ஓங்கார வடிவானவர் பிள்ளையார்.

துன்பங்கள், துயரங்கள், இடையூறுகள், வல்வினைகள், அச்சங்கள், அபாயங்கள், ஆபத்துக்கள் வரும்பொழுதே நாம் பிள்ளையாரை நினைக்கிறோம். ஓங்கார வடிவான வனையே நினைக்கின்றோம். வேதத்தின் முழுப்பொருளை உள்ளத்தில் இருத்துகிறோம். ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனை வாழ்த்துகிறோம்.

துன்பங்கள் வந்த பின்பு வழிபடுவதை விடத் துன்பங்கள் வருமுன்பும் வழிபட வேண்டும். வருமுன் காப்பவர் பிள்ளையார். இதனால் எந்தச் செயலில் ஈடுபட முன்பும் பிள்ளையாரை வணங்குகின்றோம். செய்யப்போகும் செயல் அறிவுத் தெளிவுடனும், சிந்தனைக் கூர்மையுடனும், மலங்களாலும், அதன்வழி புலன்களாலும், மயக்கப்படாமலும் இருக்கப் பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

நமது புலன்வழி நமக்குப் புதிய துன்பங்கள் வரக்கூடாது. நமது முன்வினைவழி, நமக்குத் துன்பங்கள் ஏற்படக்கூடாது.

நமது வினைகள் நல்வினைகளாக வேண்டும். நாம் செய்யும் செயல்கள் நற்செயல் களாக வேண்டும். தீவினைகள் நம்மை அணுகாதிருக்கப் பிள்ளையார் நமக்கு அருள்புரிகிறார். நம்மால் நமக்குத் துன்பம் ஏற்படக்கூடாது. பிறரால் நமக்குத் துன்பம் ஏற்படக்கூடாது. ஊழ் வலிவு பெற அதன்வழி நமக்குத் துன்பங்கள் வரக்கூடாது. இம் மூன்று வழிகளிலும் துன்பங்கள் வராமல் காப்பவர் பிள்ளையார். ஓங்கார ஒலியின் உண்மையான வடிவமான பிள்ளையார் உயிர் உயர்வுற உதவுகிறார்.

"ஓம்" என்ற சொல்லை உச்சரித்துத் தியானிக்க வேண்டும். பிரணவ மந்திரம் எனப்படுவது ஓம் என்னும் சொல்லே. பிரணவப் பொருள் என பிள்ளையாரை அழைக்கிறோம்.

ஓம் என எப்பொழுதும் ஒலித்து வழிபடவேண்டும். துன்பங்கள் போகும், துயரங்கள் நீங்கும். பேரின்பப் பெருவாழ்வு கிட்டும்.

## கந்தசஷ்டிகால விசேட நிகழ்வு

(04.11.2013 தொடக்கம் 07.11.2013 வரை)

**ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறவுள்ள கந்தசஷ்டி விழாவினையொட்டி வழமைபோன்று சந்நிதியான் ஆச்சிரமத்தில் இரா. செல்வவடிவேல் அவர்களது விசேட தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.**

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி

(தொடர்ச்சி...

—வாரியார் சுவாமிகள்—



32. கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையேபுரி வேடர் குலப்பிடி தோய்
மலையே! மலை கூறிடு வாகையனே.

## பதவுரை

கொலையே புரி- கொலைத் தொழிலையே செய்கின்ற, வேடர்குல பிடி தோய்- வேடர் குலத்தில் வளர்ந்த பெண் யானை போன்ற வள்ளி நாயகியார் தழுவி மகிழ்கின்ற, மலையே- மலைபோன்றவரே, மலை கூறு இடி வாகையனே- கிரவுஞ்சமலையைப் பிளந்து வெற்றி பெற்றவரே! தலை ஊடலையே படும் ஆறு- முதன்மையாகச் சமயவாதிகளுடன் வாதஞ் செய்து பிணங்குதலையே பொருந்து முறையில், கலையே பதறிகதறி- சாத்திர நூல்களை மனம்கலங்கிச் சத்தம் போட்டுப் பேசி, அதுவாய் விடவோ- அந்த வாதமயமாகவே அடியேன் ஆகி விடலாமோ? (ஆகக் கூடாது)

## பொழிப்புரை

கொலைத் தொழிலே செய்கின்ற வேடர் குலத்தில் வளர்ந்தவரும் பெண்யானை போன்றவரும் ஆகிய வள்ளி பிராட்டியார் மருவுகின்ற மலை போன்றவரே! கிரவுஞ்ச மலையைப் பிளந்த வெற்றி உடையவரே! சமயவாதிகளுடன் முதன்மையாக வாதிட்டுப் பிணங்கும் செயலைக் கொண்டு, சாத்திரங்களைக் கலக்கத்துடன் கத்திப் பேசி அந்த வாதத்தின் மயமாக அடியேன் ஆகலாமோ? (ஆகக் கூடாது)

## விரிவுரை

**கலையே பதறி கதறி:-**

கலை என்பது இங்கே கருவி நூல்களைக் குறிக்கும். இலக்கண இலக்கியங்களைக் கற்றும், தத்தம் சமய நூல்களைப் பயின்றும் வாது புரிவார்கள்.

நன்றியுணர்வுதான் நெருங்கிய உறவு.

கல்வியின் பயன் வாலறிவனை அடைவதாகும். கற்றவர்க்கு அழகு அடக்கமாகும். ஒருவரை ஒருவர் எதிர்த்திட்டு வாதிடுவதற்கன்று!

**தலை ஊடலையே படுமாறு:-**

ஊடல்- பிணக்கு. ஊடுவது- மனம், பதறுவது- உடம்பு. கதறுவது- வாய். மனம் வாக்கு காயம் என்ற மூன்றினாலும் அமைதியின்றி நலங்குன்றுவர்.

தலை- முதன்மை. முதன்மையான சண்டை. தலையூடு அலையே படுமாறு- தலையில் உள்ள மூளை கலங்குமாறு போர் புரிவர் என்றும் கூறலாம். அருணகிரிநாதர் சமயவாதங்களைப் பல இடங்களில் கண்டிக்கிறார்.

"சமய விரோத சாங்கலை வாரிதியை நீந்தவொணாது"

-(சாந்தமில்) திருப்புகழ்.

"கருங்கடலூடும் கதற்றுமநேகம்
கலைக்கடலூடும் கழலாதே"

-(பெருக்கவு) திருப்புகழ்.

"சிவகலை யலதினி
உலக கலைகளும் அலம் அலம்"

-(குருதிகிருமி) திருப்புகழ்.

"கலகக்கலை நூல்பல கொண்டெதிர்
கதறிப் பதறா"

-(உலகத்தினில்) திருப்புகழ்.

"பதறிய சமயிகள் எட்டாப் பேரொளி"

-(பதறிய) திருப்புகழ்.

"கலகல கலெனக் கண்ட பேரொடு
சிலுகிடு சமயப் பங்கவாதிகள்
கதறிய வெகுசொற் பங்கமாகிய பொங்களாகவும்
கலைகளு மொழிய"

-(அலகிலவுண) திருப்புகழ்.

அநுபூதி நிலை சமயவாதங் கடந்த மோன நிலையில் சித்திக்கும்.

"வாதமும் சமய பேதமுங் கடந்த
மனோலய இன்ப சாகரமே"

-பட்டினத்தார்.

"கற்றதுங் கேட்டதும்தானே ஏதுக் காகக்
கடபடம் என்றுருட்டுதற்கோ? கல்லால் எம்மான்
குற்றமறக் கைகாட்டும் கருத்தைக் கண்டு
குணங்குறியற்று இன்பநிட்டை கூட அன்றோ?"

-தாயுமானவர்.

"சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்"

-அப்பர்.

"சமயவாதிகள் தத்தம் மதத்தையே அமைவதாக அரற்றி மலைந்தனர்!"
கல்வியென்னும் பல்கடல் பிழைத்தும்"

-மணிவாசகர்.

"சாத்திரம் ஓதும் சதுர்களை விட்டுநீ
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்தவப் பார்வை பசுமரத் தாணிபோல்
ஆர்த்த பிறவி அகலவிட் டோடுமே.

-திருமந்திரம் (1631)

"திரமென்று தத்தம் மதத்தையே தாமதச்
செய்கையொடும் உளற அறிவார்"

என்று தாயுமானார் கூறியபடி சினத்தால் மனத்தில் அமைதியின்றித் தர்க்கமிட்டு வாழ்நாளை வீழ்நாள் ஆக்குதல் கூடாது.

**அதுவாய் விடவோ:-**

ஆன்மா சார்ந்ததன் வண்ணம் ஆகும் இயல்புடையது. ஆதலின் தர்க்க மயமாகவே ஆகிவிடுகின்றது.

ஓகாரம் எதிர்மறைப் பொருளில் வந்தது.

இதனால் அருணகிரிநாதர், வாதித்து அறியும், பாச ஞானமாகிய கருவியால் கந்தவேளின் திருவடி அநுபூதியை அடைய முடியாது என்பதை அநுபூதி அடைய விரும்புவோர்க்கு உபதேசிக்கின்றார்.

இனி இனம்பற்றி "நாம் பிரமம்" என்கின்ற பசு ஞானத்தாலும் அடைய முடியாதென உணர்க. அருட்குருநாதன் உணர்த்தும் பதஞானம் ஒன்றாலேயே அடையலாம் என்பதையும் உய்த்துணர வைத்தார்.

**கொலையேபுரி வேடர்:-**

கொலையே- ஏகாரம் பிரிநிலை.

வேடர்கள் கொலையே புரியும் கொடுந் தொழிலாளர்கள்.

**குலப்பிடி:-**

குலப்பிடி- வள்ளி, உவமை ஆகுபெயர்.

"யானை ஓசையின்றி நடக்கும். அதுபோல் பெண்களும் ஓசையின்றி நடக்கவேண்டும்" என்பது பொருளாகும்.

**குலப்பிடி தோய் மலையே:-**

ஆன்மாக்கள் தன்னையடையும் பக்குவம் வகுக்கும் பொருட்டு, உலக போக நுகர்வில், இச்சை உண்டாகும்படி, இச்சா சக்தியாகிய வள்ளியுடன் கூடி, போக வடிவினனான முருகவேள் இருப்பினும், யாதொரு மாறுபாடும் அடைகிலன் என்பதை உணர்த்தும் பொருட்டு, காற்றாலும் மழையாலும் மாறுபடாத "மலையே" என்றார்.

இறைவனை மலையென்று கூறுவது ஆன்றோர் மரபு.

**மலைகூறிடு வாகையனே:-**

மாயையாகிய கிரவுஞ்ச மலையைப் பிளந்தவன் ஆதலினால் மாயையைக் கடந்த அப்பெருமான், ஆன்மாக்களின் மாயைகளைப் போக்கவல்லவன்.

செல்வம் இழந்தவன் கருமியாவான்.

"அலைகொள் வார்புனல் அம்புலி
மத்தமும் ஆடரவுடன் வைத்த மலையை"

-சம்பந்தர்.

"காட்டூர் கடலே கடம்பூர் மலையே" -சுந்தரர்.

வள்ளியாகிய பெண் யானை தழுவுவதால் முருகன் மலை- கைம்மலை. ஆண் யானையாக ஞான வேழமாக விளங்குகின்றான். யானை மலையில் வாழ்வதையும் குறிக்கும்.

யானை கிரிசரம், நதிசரம், வனசரம் என்று மூவகையது. வள்ளி- கிரிசரப்பிடி. அதனால் "பிடி தோய்மலை" யென்றார்.

**கருத்துரை**

"வள்ளி மணவாளா! கலைகளைக் கற்று வாதிட்டு அலையாமல் திருவடியநுபூதியைத் தந்தருள்.

(தொடரும்...

**மாணவர்களின் கவனத்திற்கு:**

## திருவாசக விழா தொடர்பான பண்ணிசைப் போட்டிகள்

திருவெம்பாவை காலத்தில் இடம்பெறவுள்ள திருவாசக விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக மாணவர்களிடையேயான பண்ணிசைப் போட்டி இடம்பெறும் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

இப் போட்டியிற் பங்குபெறவிரும்பும் மாணவர்கள் தாங்கள் கல்வி கற்கும் தரம் (2013இல்), பாடசாலை, பிறந்ததேதி என்பவற்றைக் குறிப்பிட்டு, பாடசாலை அதிபர் அல்லது வகுப்பாசிரியரால் உறுதிப்படுத்தி 30.11.2013க்கு முன்னர் கீழ்க் காணும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும். அல்லது நேரிலும் கையளிக்கலாம்.

**திருவாசக போட்டி ஏற்பாட்டுக் குழு.**
**சந்நிதியான் ஆச்சிரமம்.**
**செல்வச்சந்நிதி.**
**தொண்டைமானாறு.**



**தரம் 5–6 சிவபுராணம்**
**தரம் 7–8 திருவெம்பாவை**
**தரம் 9–10 திருப்பள்ளியெழுச்சி**

எனும் விடயங்களில் இப்போட்டிகள் நடாத்தப்படவுள்ளது. நடுவர்கள் கேட்கும் பாடல்களை மோகன ராகத்தில் பாடிக்காட்டுதல் வேண்டும். அத்துடன் பண்ணிசைப் போட்டியில் பங்குபற்றும் ஒவ்வொரு பிரிவு மாணவர்களினதும் சமயபாடம் தொடர்பான பொது அறிவும் எழுத்துமூலம் பரீட்சிக்கப்படும். போட்டிகள் நடைபெறும் தினம் 08.12.2013 ஞாயிற்றுக்கிழமை.

இப்போட்டியில் வெற்றிபெறும் மாணவர்களுக்கான பரிசில்கள் 13.12. 2013 வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள திருவாசக விழாவில் வழங்கப்படும்.

# பிரார்த்தனை தினமும் அவசியமா?

திரு ஐ.கோ. சந்திரசேகரம் அவர்கள்

நாம் ஏன் தினமும் பிரார்த்தனை செய்ய வேண்டும்? நீண்ட காலம் குளிக்காமல் இருந்தால் புழு, பூச்சி முதலியவைகள் வந்து நம் உடலை அழித்துவிடும். இதை நம் கண்ணால் பார்க்க முடிகிறது.

ஆனால் மனதில் ஏற்படும் மாற்றங்கள் கண்ணுக்குப் புலப்படாதவை. பிரார்த்தனை என்ற சோப்பிட்டு தியானம் என்ற நீரினால் மனதைத் தினமும் கழுவ வேண்டும். இல்லாவிட்டால் உடல் சீரழிவது போல, மனதில் காமம், குரோதம், மோகம், லோபம், மதம், மாத்சர்யம் ஆகிய நோய்கள் பெருகி நம் ஆன்மீக வாழ்க்கையைச் சிறிது சிறிதாக அழித்துவிடும்.

## பிரார்த்தனையின் வலிமை

தினமும் பிரார்த்தனை செய்யும்போது நமக்கு ஒரு மிகப் பெரிய சக்தியுடன் தொடர்பு கிடைக்கிறது. அந்தச் சக்தியானது நமது மன உளைச்சல், பிரச்சினைகள் ஆகியவற்றை அகற்றி ஊக்கம், நம்பிக்கை, ஆற்றல் போன்றவற்றைக் கொடுக்கிறது.

ஆன்மீக வாழ்க்கையை முழுமையாக ஏற்று வாழ்ந்து வருபவர்கள் பிரார்த்தனையின் மூலம் மனதளவில் இளமையாகவும், வலிமையாகவும் விளங்குகிறார்கள்.

சுவாமி விவேகானந்தர் ஸ்ரீ ராமகிருஷ்ணரை ஓர் அமுதகலசமாக வர்ணிக்கிறார். அந்த அமுதம் எவற்றால் செய்யப்பட்டிருக்கிறது? அதில் வேத, வேதாந்தங்களின் சாரங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மேலும் ஸ்ரீமத் நாராயணனின் பத்து அவதாரங்களின் தத்துவங்களும் சேர்ந்துள்ளன. இவற்றுக்கு மேலாக பிரம்மா, விஷ்ணு, மகேசுவரர் ஆகியோரின் சக்திகளும் இணைந்துள்ளன.

அப்படிப்பட்ட அமுதத்தை நாம் தியானத்தின் மூலம் பருகினால் ஆன்மீக வாழ்வின் உன்னதத்தை அடைய முடியுமென்று சுவாமி விவேகானந்தர் உறுதியாகக் கூறுகிறார்.

ஆன்மீக வழியில் வாழ்வது எவ்வாறு என்ற முறையை ஸ்ரீ ராமகிருஷ்ணர் கீழ்க் கண்டவாறு கூறியுள்ளார்.

"நான் என் மனதில் பதினாறில் ஒரு பங்கை மட்டும் வெளியில் வைத்து உலக வாழ்வில் ஈடுபடுகிறேன். மீதி பதினைந்து பாகங்கள் தேவியின் பாத கமலத்தில் வைத்துள்ளேன். நீங்கள் ஒரு பாகத்தை இறைவன் திருவடியில் வைத்து, மீதி பதினைந்து பாகங்களை உலக வாழ்வில் ஈடுபடுத்தலாம்!"

மனதில் பதினாறிலொரு பங்கையாவது பகவானிடத்தில் செலுத்த வேண்டும். இறைவன்மீது அளவற்ற அன்பு வைத்தால் மனம் அவர் பாதக் கமலங்களில் சிறிது சிறிதாக லயிக்கும்.

அன்றாட வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களைக் கூர்ந்து கவனிப்பதன் மூலம் அவற்றின் உட்பொருளை உணர்ந்து கொள்ளலாம்.

வீட்டுக்கு இலட்சுமியானவள் பெண்.

உதாரணமாக, பால் கெட்டுப்போகாமலிருக்க நன்கு காய்ச்சுகிறோம். பிறகு உறையூட்டி தயிராக்குகிறோம். பாலினைவிட தயிரின் விலை இருமடங்கு அதிகம்.

அதேசமயம் பாலினைவிட தயிர் இரண்டு மடங்கு அதிக நாட்கள் கெடாமல் நீடிக்கிறது. தயிரைக் கடைந்தால் வெண்ணெய் கிடைக்கிறது. வெண்ணெய் தயிரைவிடப் பத்து மடங்கு விலை அதிகமானாலும், தயிரைவிடப் பத்து மடங்கு அதிக நாட்கள் நீடிக்கிறது.

வெண்ணெயைக் காய்ச்சினால் கிடைக்கும் நெய் வெண்ணெயை விடப் பல மடங்கு விலை அதிகம். ஆனால் நெய்யை பல மாதங்களுக்கு உபயோகப்படுத்தலாம்.

பக்தர்களாகிய நாம், பகவான் சோதிக்கும்போது அவர் நம்மைப் பாலாய்க் காய்ச்சிக் கொண்டிருக்கிறார், தயிராய் கடைந்து கொண்டிருக்கிறார், வெண்ணையாக்கிக் கசடை அகற்றிக் கொண்டிருக்கிறார் என்று எண்ணிக் கொள்ளவேண்டும்.

அப்போதுதான் பக்தனின் மதிப்பு பல மடங்காக அதிகரிக்கின்றது.

அந்தப் பாதச்சுவடுகள் எங்கே?

அவன் சிறு வயது முதலே இறைவனிடம் நம்பிக்கையுள்ளவனாக இருந்தான். இறந்த பின்பு சொர்க்கம் சென்றான்.

அவன் சொர்க்கத்தில் பல வரைபடங்களைக் கண்டான். ஒவ்வொரு படத்தின் கீழும் சொர்க்கத்தை அடைந்திருந்த ஒவ்வொருவரின் பெயர் எழுதப்பட்டிருந்தது.

அவைகளுள் தன்னுடைய பெயர் இருக்கிறதா என்று ஆவலுடன் தேடினான். ஓர் ஓவியத்தின் கீழ் அவன் பெயர் இருந்தது. அது ஒரு கடற்கரையின் சித்திரம்.

கடற்கரை மணலில் இரண்டு ஜோடி பாதச்சுவடுகள் தென்பட்டன. ஒன்று தன்னுடையது. மற்றொன்று இறைவனுடையது என்று அவனுக்குப் புரிந்தது.

அதைத் தொடர்ந்து நோக்கினான். சில இடங்களில் ஒரு ஜோடிப் பாதச்சுவடுகள் மட்டும் காணப்பட்டன. பல இடங்களில் இரண்டு ஜோடிப் பாதச்சுவடுகள். அவனுக்குப் புரியவில்லை. கூர்ந்து கவனித்தான்.

அவனுடைய 18, 19 வயதில் ஓவியத்தில் ஒருஜோடி பாதச்சுவடுகள் மட்டும் இருந்தன. அந்த வயதில் அவன் பரீட்சையில் தோல்வியடைந்தான். பலவிதமாகத் துன்பப் பட்டதை நினைவு கூர்ந்தான்.

19 வயதிற்கு மேல் இரண்டு ஜோடிப் பாதச்சுவடுகள். அடுத்து அவன் 32 வயதிலிருந்து 34 வயதுவரை நோய் வாய்ப்பட்டிருந்தான். அப்போதும் ஒருஜோடி பாதச்சுவடுகள்தான்.

உடனே அவன் “நான் கஷ்டப்படும்போது கடவுள் என்னை விட்டு எங்கோ போய் விடுகிறார். நான் மகிழ்ச்சியாக இருக்கும்போது மட்டும் அவர் என்னுடன் வருகிறார்” என்று அவன் ஒரு முடிவிற்கு வந்தான்.

இறைவனிடம் அவன் கோபம் கொண்டான். நேராக இறைவனிடம் சென்று “என் வாழ்நாள் முழுவதும் உங்கள் பக்தனாக இருந்திருக்கிறேன். ஆனால் துன்பம் வந்த போதெல்லாம் என்னைக் கைவிட்டு விட்டீர்களே” என்று புலம்பினான்.

அதற்கு இறைவன், “மகனே, உனக்கு அந்தப் பாதச்சுவடுகளின் அர்த்தத்தைச் சரியாகப் படிக்கத் தெரியவில்லை. நீ ஆனந்தமாய் இருக்கும்போது உன்னுடன் கைகோர்த்து

ஒருவன் சிரித்தமுகத்துடனே கெட்டவனாக இருப்பான்.

கூடச் செல்வது என் வழக்கம். அதனால் இரு ஜோடி பாதச்சுவடுகள் தென்படுகின்றன. நீ துன்பப்பட்ட போதெல்லாம் ஒரு ஜோடிப் பாதச்சுவடுகளை மட்டும் காண்கிறாய். அவை உன் பாதச்சுவடுகள் என்றா நினைக்கிறாய்? இல்லை, உன் துன்ப காலங்களில் நீ காணும் பாதச்சுவடுகள் என்னுடையவை. ஏனெனில் உன் துன்பங்களின்போது உன்னை என் தோளில் அல்லவா நான் சுமந்து செல்கிறேன்!" என்று விளக்கினார்.

ஒருமுறை ஸ்ரீ ராமகிருஷ்ணர் கேசவர் வீட்டிற்குச் சென்றிருந்தார். "இன்று ஜகன்மாதா என்னை உங்கள் வீட்டில் ஜிலேபி சாப்பிடச் சொல்லியுள்ளாள்" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கேசவரின் தாயாரிடம் கூறினார்.

கேசவரின் தாய்க்கு அளவற்ற மகிழ்ச்சி. ஜிலேபி அவர் வீட்டிலேயே இருந்தது. உடனே அதைக் கொண்டுவந்து சாப்பிடக் கொடுத்தார்.

அதன் பின்பு ஸ்ரீ ராமகிருஷ்ணர், "ஜகன்மாதா இன்று உங்கள் வீட்டில் ஐஸ்கிறீம் சாப்பிடச் சொல்லியிருக்கிறாள்" என்று கூறினார்.

கேசவரின் தாயார் திடுக்கிட்டார். ஏனெனில் வீட்டில் ஐஸ்கிறீம் இல்லை; அந்தப் பகுதியில் எங்கும் சுலபமாக ஐஸ்கிறீம் கிடைக்காது.

உடனே அவர் அம்பிகையிடம் மனமுருக வேண்டிக் கொண்டார். அந்தக் கணமே அதிசயமாகத் தெருவில் ஒருவன் ஐஸ்கிறீம் விற்றுக்கொண்டு சென்றான். சொல்லொணா ஆனந்தத்துடன் கேசவரின் தாய் ஓடிச்சென்று ஐஸ்கிறீம் வாங்கி ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு அளித்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணரும் சாப்பிட்டார்.

நம் வாழ்க்கையில் ஜிலேபி போன்ற சாதகமான சம்பவங்களும், ஐஸ்கிறீம் போன்ற பாதகமான சம்பவங்களும் மாறிமாறி ஏற்படுகின்றன. நாம் எந்தத் தருணத்திலும் பகவானை நம்பிக்கையுடன் பிடித்துக் கொண்டிருந்தால் சோதனைகள் சாதனைகளாக மாறுகின்றன.

சோதனைகளைக் கொடுப்பவனும் இறைவனே, அவைகளை நீக்குபவனும் அவனே.

ஆதலால் துன்பம் வரும்போது மட்டுமல்லாமல் எக்காலத்திலும் இறைவனின் சிந்தனையில் தொடர்ந்து ஈடுபட வேண்டும். பிரார்த்தனை, தியானம் இவற்றின்மூலம் நிச்சயமாக அந்த உன்னத நிலையை அடையலாம்.

ஒரு தேனீயிடம் ஒரு பறவை கேட்டது.
"ஓய்வில்லாத கடின உழைப்பின் மூலம் நீ தேனைத் தயாரிக்கிறாய். ஆனால் மனிதன் அந்தத் தேனை உன்னிடமிருந்து திருடி விடுகிறான்". அதற்காக நீ வருந்துவதில்லையா?. அதற்குத் தேனீ பதிலளித்தது. "இல்லவே இல்லை! ஏனென்றால் மனிதன் என்னிடமிருந்து தேனை மட்டும்தான் திருட முடியும். ஆனால் தேனை உண்டாக்கும் கலையை ஒருபோதும் அவன் என்னிடமிருந்து திருட முடியாது". என்ன ஒரு மகோன்னதமான மனப்பான்மை!.


அழகற்ற அகத்தைவிட அழகற்ற முகம்மேல்.

(தொடர்ச்சி...

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

## 10. குதூகல ரமணன்

அரச குலத்தைச் சேர்ந்த குமாரி பிரபாவதி ராஜேயின் பெற்றோர் ஆன்மிகத்தில் பற்று உடையவர்களாக இருந்ததால், சிறுவயது முதலே அதில் தானும் ஈடுபாடு கொண்டிருந்தாள். அனேக தத்துவங்களில் பழக்கமும், அனேக பாஷா ஞானமும் அடைந்தாள். தான் தேர்ந்தெடுத்த குரு பகவான் ரமணனின் பரிவையும் கவனத்தையும் ஈர்த்து, ஆச்ரமத் தருகில் சில காலம் தங்கியிருந்தாள். முனகாலா வேங்கடராமையாவிடமும், ஜெகதீச்வர சாஸ்திரியிடமும் பாடம் கற்றுக்கொண்டாள். முன்னவர் “கார்டியன்” ஆனதால் அவரை நாயனா என்று அன்புடன் அழைப்பாள். தன் குருவின் அருகில் இருப்பதற்காக, பெற்றோர், உறவினரை எல்லாம் விட்டு வந்திருக்கும் அவரது தேவை களை, லௌகீகமானவை உட்பட- பகவான் எப்படிக் கவனித்தது என்பது ருசிகரமான விஷயம்.



கல்யாணமே வேண்டாம் என்று சொல்லிக் கொண் டிருந்த பிரபாவதிக்கு, அவளுடைய உறவினர், கேரள ராஜ வம்சத்தைச் சேர்ந்த ஒருவருடன் திருமணம் நிச்சயித்தனர். கேரளத்தில் வரனின் வீட்டுக்குப் போக வேண்டி வந்ததும்,, உறவினர் யாரையும் உடன் வர அனுமதிக்காமல் தனியே போவதென அவள் நிச்சயித்தாள். அவளுக்குத் துணையாக குஞ்சு சுவாமியைப் போகும்படி பகவான் பணித்தது- அவரும் மலையாளி என்பதால் கேரளத்துக்குப் போக அவரே தகுதியானவர் என்பதால்- தன் குரு நாதனிடமிருந்து இத்தகைய கவனிப்பைப் பெற்ற பிரபாவதி பாக்கியசாலி அல்லவா?

கேரளத்தை அடைந்ததும் பிரபாவதியை உறவினரும் நண்பர்களும் சூழ்ந்துகொண்டு விட்டனர். இந்தக் குடும்பச் சூழ்நிலை குஞ்சு சுவாமிக்கு ஒத்துவராமல் போகவே, அவர் முன்காலா வேங்கட்ராமய்யாவுக்கு விஷயத்தை எழுதி பிரபாவதி அங்கு சில வாரங்கள் தங்கப் போவதால் தாம் கேரளத்திலுள்ள புண்ணிய ஸ்தலங்களுக்கு ஷேத்திராடனம் போக உத்தேசித்திருப்பதாக எழுதினார்.

மறு தபாலிலேயே வந்தது பதில். பகவானிடம் குஞ்சு சுவாமியின் கடிதத்தைக் காண்பித்ததில், “பிரபாவதியுடன் அல்லவா குஞ்சுஸ்வாமி இருக்க வேண்டும்” என்று அதிருப்தியுடன் சொன்னதாக முனகாலா வேங்கட ராமையா எழுதியிருந்தார். பின் என்ன குஞ்சுஸ்வாமி பிரபாவதியை விட்டு அங்குமிங்கும் அசையவில்லை. ஆச்ரமம் திரும்பும்வரை கூடவே இருந்தார். ஒரு பொறுப்பு ஏற்றால் எக்காரணத்தைக் கொண்டும் அதைக் கைவிடக் கூடாது. எப்பாடுபட்டேனும் அதை நிறைவேற்ற வேண்டும் என்பது பகவானின் அறிவுரை.

பிரபாவதி அளித்த மற்றொரு தகவல் என்னை மெய்சிலிர்க்க வைத்தது. திருமணத்துக்கு வெகுநாள் முன்பு, ஒரு ஜோடி புத்தகம் தாங்கிகளை பகவானுக்குச் சமர்ப்பித்துவிட்டு,

அவற்றை ஆபிஸுக்கோ அல்லது வேறு எவருக்கோ கொடுத்து விடக் கூடாது; பகவான் தானே உபயோகிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள். பகவானருகில் ஒரு சுழலும் புத்தக அலுமாரி இருந்தது. பகவான் அதிலிருந்து புத்தகங்களை எடுத்து உபயோகிக்கும். அலுமாரி மேலும் புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்தன. அதைப் பார்த்த பிரபாவதி அந்த சாதனங்களை அங்குதான் வைக்க வேண்டும் என்று அழுத்தமாகச் சொல்லியிருந்தாள். வருடங்கள் சென்றன. பகவானை விட்டு வெகு தூரத்தில் வசிக்கலானாள்.

பகவானின் சரீர யாத்திரையின் அந்திம நாட்கள் நெருங்கின. தரிசனத்திற்காக பிரபாவதி நீண்ட வரிசையில் நின்று கொண்டாள். மருத்துவ அறிவுரையைத் தூசெனத் தள்ளிய பகவான், அடியாருக்கு கடைசிவரை தரிசனம் அளிப்பதென்று உறுதியாக இருந்தது. பக்தர் ஒவ்வொருவரும் பகவானை ஒரு கணம் பார்த்துவிட்டு, அடுத்தவருக்கு வழிவிடவேண்டும். பிரபாவதியின் முறை வந்ததும், அவர் பகவான் முன் தடுமாறி நிற்க, பகவான் தன் கண்ணொளிப் பார்வையை அவர்மீது செலுத்திவிட்டு, உடனே அறையின் மறுபுறம் கண்களைத் திருப்பிப் பார்த்தது. பிரபாவதி புரிந்து கொள்ளவில்லை. அண்ணல் தன் வலது கரத்தை மிகச் சிரமப்பட்டு தூக்கி (இடது கையில் 'சார்கோமா' யமன் இருந்ததால் அசைக்க முடியாது) புத்தக அலுமாரியின் மேல் பக்கம் சுட்டிக் காண்பித்தது. அந்தப் புத்தகந் தாங்கிகள் பகவானால் அத்தனை வருடங்களாக உபயோகிக்கப்பட்டு அந்த அலுமாரியின் மேல் அழகாக வீற்றிருந்தன! உள்ளமற்றதின் கருணை வெள்ளமா இது? அடியாரின் மிகச்சிறிய ஆசையையும் நிறைவேற்றும் 'மன'ப்பான்மை, மனம் இருந்தால் வந்து விடுமோ? சாதாரண மனிதனுக்கு வருமா? அந்த அந்திம நிலையில் ஒவ்வொரு அசைவும் மலையாக இருக்க- கையைத் தூக்கி அலுமாரியைக் காண்பிக்கும் செயல், எல்லையற்ற அன்புக் கடலுக்கு மாத்திரமே சாத்தியமான ஒன்றல்லவா? எதற்காக ஒரு பக்தையின் மனம் மகிழ்வதற்காக! பிரபாவதி உடைந்து போய்விட்டாள். உடல் சிலிர்த்து, உள்ளம் பொங்கி, கண்மடை திறந்து, தேம்பித் தேம்பி அழலானாள்.

* * * * * * * * * *

எனக்கு சுமார் மூன்று வயதிருக்கும். நல்ல ஆரோக்கியமான கொழு கொழு குழந்தை. ஆச்ரமச் சமையலறை ஊழியருக்கெல்லாம் நான் மிகச் செல்லம். உணவு பரிமாறுவதைப் பார்க்க எனக்கு அதிக ஆர்வம். எல்லாம் பரிமாறி முடிந்ததும், பகவான், "சாப்பிடலாம்" என்பதைத் தெரிவிக்க தலையை அசைப்பதைப் பார்க்க எனக்கு சலிக்காத ஆவல்.

ஒருநாள் எனக்கு பகவானுக்கும் மற்றவருக்கும் பரிமாற வேண்டும் என்ற ஆசை பலமாக உண்டாகிவிட்டது. நானோ குட்டை (அப்பா என்னைக் குட்டையன் அல்லது குள்ளன் என்றே கூப்பிடுவார்). ஆச்ரமத்தில் பரிமாறும் பாத்திரங்களோ மிகப் பெரியவை. என்னால் அவற்றைத் தூக்கிப் பரிமாற முடியாது என்று எல்லோரும் ஆனமட்டும் சொல்லிப் பார்த்தார்கள். நான் அழுது, பரிமாறியே தீர்வேன் என்று அடம்பிடித்து ரகளை செய்தேன். சமையலறையில் பாட்டிமார்களும், மற்றவர்களும் என்னவெல்லாமோ சொல்லி சமாதானப்படுத்த முயன்றார்கள். ஊகூம்- என் ஆர்ப்பாட்டம் அதிகமானதுதான் பலன். இந்தச் சத்தத்தைக் கவனித்த பகவான், விஷயத்தைக் கேட்டறிந்ததும் "இவனிடம் ஒரு சின்னக் கிண்ணத்தில் கொஞ்சம் உப்பையும், ஒரு ஸ்பூனையும் கொடுங்கள். ஒவ்வொரு இலையிலும் கொஞ்சம் உப்பு வைக்கட்டும்" என்று ஒரு ஊழியரிடம் பணித்தது. என் அழுகை போன இடம் தெரியவில்லை. கையில்

கிண்ணத்துடன் நேரே பகவானிடம் சென்றேன். பகவான், கரண்டியில் எவ்வளவு உப்பு எடுக்க வேண்டும், இலையில் எங்கு, எப்படி வைக்கவேண்டும் என்று எளிமையாகவும், கச்சிதமாகவும் காண்பித்துக் கொடுத்தது. நானும் உடனே பகவான் இலையில் உப்பை வைத்தேன். சாதாரணமாக பகவானுக்குத்தான் கடைசியாகப் பரிமாறுவது வழக்கம். ஆனால் பகவான் இனிமையான புன்னகையுடன் மற்றவர்களுக்கெல்லாம் உப்பு பரிமாறச் சொல்லி அனுப்பியது. நானும் சந்தோஷத்துடன் எல்லோருக்கும் உப்பு வழங்கிவிட்டு, பெருமை பொங்க வெற்றி நடையுடன் சமையலறைக்குத் திரும்பினேன். எந்தத் தாயாவது, அல்லது குழந்தை நிபுணராவது, இவ்வளவு சீக்கிரமாக அழகாக இந்தச் சிக்கலைத் தீர்த்திருக்க முடியுமா?

(தொடரும்...

# மெய்ஞ்ஞானமே எம்மை வழிநடத்தும் அதுவே மகாசக்தியுமாகும்

எங்கள் சமயமானது உலகியற் பண்பாட்டிற்கு சிறந்த பல கலாச்சாரப் பண்பாடுகளை அபூர்வமான முறையில் எடுத்துக் கற்றுக்கொடுக்கின்றது. விஞ்ஞானத்திலும் பார்க்க மெய்ஞ்ஞானமே உயர்ந்தது. வாழ்க்கைக்கு எவ்வளவோ அனுபவ உண்மைகளை எடுத்துக் கூறுகின்றது என்பதை இந்து மதத்தைப்பற்றி நன்கு படித்தவர்கள், தெரிந்தவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். மக்களின் அன்றாட வாழ்வில் வைகறையில் எழுதல் முதல் இரவு நித்திரைக்குச் செல்லும்வரை இறைவன் வகுத்தவழியே நம்வாழ்வை வழிநடத்துகின்றது. நன்றுந் தீதும் பிறர் தரவாராது எல்லாமே அவன் செயல். கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்பதெல்லாம் எமது சமயம் காட்டும் நன்நெறிகள் ஆகும்.

எமது மானிட உடம்பே இறைவன் குடியிருக்கும் கோவில். உள்ளம் பெருங் கோவில், ஊன் உடம்பு ஆலயம் என்பார்கள். எனவேதான் நாம் ஒருவரை ஒருவர் காணும்போது கைகூப்பி வணங்கி வருகின்றோம். ஒருவரை ஒருவர் வணங்கும்போது எம்மிடம் உள்ள ஆணவம், சுயநலம், பொறாமை யாவுமே நீங்க வழியாகின்றது. இதன்மூலம் நல்வாழ்வு அமைய வாய்ப்பாகின்றது.

இன்றைய உலகில் நடக்கும் எதனையும் நாம் நன்கு சிந்தித்துப் பார்த்தால், மக்கள் இறையுணர்வைப் பற்றி மதியாது மனம் போன போக்கிற் சென்று துன்பங்கட்கு ஆளாவதாகவே தெரிகின்றது. எனவே எமக்கு அப்பாற்பட்ட மகாசக்தியை உள்ளன்புடன் மனத்திருத்தி எக்காரியத்தையும் செய்யும்போது எமது ஆத்மா சாந்தி பெறுகின்றது. வாழ்வில் ஒருவித நிறைவும், அமைதியும் ஏற்படுகின்றது. எனவே மெய்ஞ்ஞானமாகிய இயற்கை மகாசக்தியை என்றும் போற்றி வாழ்வோம்.

—நீர்வைமணி—

பணம் வருமுன் செலவுகளை உண்டாக்காதே.

# அன்னதானக் கந்தனும் சந்நிதியான் ஆச்சிரமமும்



Dr V. பாலகிருஷ்ணன் அவர்கள்

பல வருடங்களுக்கு முன்பு தொண்டைமானாறு செல்வச் சந்நிதியில் பல சமூகத்தினருக்கும் மட ஆலயங்கள் இருந்தன. அவை மூலம் தத்தம் சமூகத்திற்கேற்ப அன்னதானம் வழங்கி வந்தனர். இதனால் தான் செல்வச்சந்நிதி முருகனுக்கு அன்னதானக் கந்தன் என்று பெயர் வந்தது. பல மடங்கள் இருந்ததினால் சமூக அடிப்படையில் அன்னதானத்துக்கு குறைவில்லாமல் இருந்தது. பல மடங்களில் வறுமையில் உள்ளவர்கள் நோய் உள்ளவர்கள் வாழ்ந்து வந்தார்கள். இவை யாவும் நாட்டிலே ஏற்பட்ட கலவர இராணுவ நடவடிக்கையால் அழிந்து போயிற்று. இந்நிலையில் ஆனந்தா ஆச்சிரமத்தில் மயில்வாகன சுவாமியைக் குருவாகக் கொண்டு தொண்டாற்றிய மோகன தாஸ் மக்கள் பசியால் வாடுவதை உணர்ந்து ஆரம்பத்தில் முருகேசு சுவாமிகளின் உதவியுடன் தனக்கு உகந்த முறையில் அன்னம் சமைத்து பசியைப் போக்கினார். முருகேசு சுவாமி இறைபதம் அடைந்த பின்பு நாளடைவில் அது மோகனதாஸின் பக்திக்கு ஏற்ப சந்நிதிக் கந்தன் அவருக்கு அருள் பாலித்தார். இந்நிலையில் அன்னதானத் தைக் கஷ்டப்பட்டு நடத்தி வந்தார்.

சந்நிதியான் ஆச்சிரமம் என்ற பெயரில் பேரவை உதயமாக்கி, அன்னதானப் பணியை ஆரம்பித்தார். இவரின் முயற்சியை உணர்ந்த மக்கள் படிப்படியே அவருக்கு உதவ முன்வந்தார்கள். பல வருடங்களாக வேறு மடங்களில் அன்னதானம் இல்லாமையால் சந்நிதியான் ஆச்சிரமம் தனியாக தன் பணியைச் செய்து கொண்டிருந்தது. ஆரம்பத்தில் மோகனதாஸ் அவர்கள் கஷ்ட நிலையிலே அன்னதானப் பணியை செய்து கொண்டிருந்தார். இவரின் விடாமுயற்சி அவருக்கு நல்ல பயனைக் கொடுத்தது. ஆச்சிரமத்தின் பணியாக கோயிலிற்கு வரும் அடியார்களுக்கும் நோய்வாய்ப்பட்டவர்களுக்கும் வறுமையில் உள்ளவர்களுக்கும் அன்னதானம் வழங்கி வந்தார்.

சந்நிதியான் ஆச்சிரமத்தைத் தவிர வேறு எந்த மட ஆலயங்களும் அங்கு காணப்படவில்லை. இந்நிலையில் இவரின் சந்நிதியான் ஆச்சிரமம் பல மக்களின் ஆசியோடு பணியைச் செய்து கொண்டிருந்தது. பல மடங்களில் சாப்பிட்ட மக்கள் இப்போது ஒரே ஒரு ஆச்சிரமத்திலே சாப்பிடுவதென்றால் அதை நினைத்துப் பார்க்க முடியாது. சந்நிதி முருகன் படிப்படியே மோகன் சுவாமிக்கு அருளையும், வசதியையும் அள்ளிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அன்னதானக் கந்தன் என்ற பெயரை சந்நிதியான் ஆச்சிரமமே காப்பாற்றிக் கொண்டது. “விடாமுயற்சி வெற்றி தரும்” என்பது உண்மை என்பதை சந்நிதியான்

ஆச்சிரமம் புரியவைத்துள்ளது. இன்று ஓரிரு மடங்கள் தோன்றினாலும் சந்நிதியான் ஆச்சிர மத்தின் தொண்டு போற்றப்படவேண்டியதே.

ஆச்சிரமத்தில் மக்களுக்கு வயிறார வழங்கப்படும் உணவின் சுவையினாலும் ஆற்றிவரும் நற்பணிகளினாலும் மக்கள் மத்தியில் ஆச்சிரமம் நல்ல இடத்தைப் பெற்றுக் கொண்டது. நோயாளிகளுக்கு இலவச மருத்துவசேவை, ஆரம்பப் பாடசாலைகளுக்குப் பொருளுதவி, வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்கு மாதாந்த உதவி என மோகனதாஸ் சுவாமிகள் ஆற்றிவரும் சமூகநலன் கருதிய கொடுப்பனவுகள் சுவாமிகளைப் படிப்படியாக அவரது சேவையில் உயர்த்திக் கொண்டிருந்தாலும், "எல்லாமே முருகன் தருகின்றான் நான் அவன் கருவி மட்டுமே" என்பதுவே சுவாமிகளின் தாரக மந்திரமாக இன்றும் தொடர்ந்துகொண்டிருக்கின்றது.

தனிமையில் இருந்து அன்னதானப் பணியை நடாத்திய மோகன்சுவாமி அவர்கள் இன்று எல்லோராலும் பாராட்டும் அளவுக்கு முன்னேறியுள்ளார். "தானத்தில் சிறந்தது அன்னதானம்" என்பது எல்லோரும் அறிந்த உண்மை. சந்நிதியான் ஆச்சிரமம் என்றும் மேலோங்கி வளர சகல தெய்வங்களும் அருள்பாலிப்பாராக.



# தமிழினத்திற்கு ஏற்பட்ட சாபக்கேட்டினுள் இவை சில:

(தொடர்ச்சி..

திரு சிவ சண்முகவடிவேல் அவர்கள்

கோல் எழுத்துக் காலத்தில் தமிழில் 16 உயிர்களும் 35 மெய்களும் இருந்ததுபோலவே வட்ட எழுத்துக் காலத்திலும் மேலே சொன்ன 51 எழுத்துக்களும் இருந்தன. ஆரியாவர்த்தத்தில் கோல் எழுத்துக்களால் வழங்கிய மொழிகளுக்கு வடதமிழ்-வடமொழி என்றும் தக்கணத்தில் வட்டெழுத்துக்களால் வழங்கிய மொழிகளுக்குத் தென்தமிழ் தென்மொழி என்றும் வழக்குகள் ஏற்பட்டன.

பிறகு, பாரத காலத்துக்குச் சற்று முன்பின் தமிழுக்குச் சதுர எழுத்துக் காலம் ஆரம்பம் ஆயிற்று. சதுர எழுத்துக் காலத்திலே தான் தமிழுக்கு 12 உயிர்களும் 18 மெய்களும் ஆக அறிஞர்கள் வகுத்தார்கள். இக்காலத்திலேதான் துவராபதியினின்றும் வந்த உலோபா முத்திரை அகத்தியர் பேரகத்தியம் சிற்றகத்தியம் என்று இரண்டு இலக்கண நூல்களை வகுத்தார். பழந்தமிழ் மொழியினின்றும் வேறு பிரித்து செந்தமிழ் எனத் தமிழ் மொழிக்குப் பெயரிட்டார். தமிழ்மொழி மிகச் சீர்திருந்திய முறையில் ஆய்த எழுத்தைச் சேர்த்து 31 எழுத்துக்களுடன் வழங்கலாயிற்று.

இராமாயண காலத்தில் அயோத்தியிலும் கோசலத்திலும் கிட்கிந்தையிலும் இன்னும் வடநாட்டில் பல இடங்களிலும் தமிழ்மொழி பொதுமொழியாக இருந்ததென்று திருவாளர் திரு நாராயண அய்யங்கார் 1939ஆம் ஆண்டு செந்தமிழ் பத்திரிகையில் "வன்மீகரும் தமிழும்" என்ற கட்டுரையில் விளக்கியுள்ளார். ஆதலின் தமிழ்மொழி இராமாயண காலத்தில் வடபெருங் கல்லில் இருந்து தென்குமரியாறுவரை பரவியிருந்தது என்று அறியலாம்.

அல்லாமலும் அக்காலத்தில் தமிழ் மொழியானது கண்டங்களிலும் பரவி இருந்ததாக அறிகிறோம். தமிழ் மொழியின் இந்த நிலையைத் தான்;

தமிழ்மண் டலம்ஐந்தும் தாவிய ஞானம்
உமிழ்வது போல உலகம் திரிவார்
அவிழு மனமும்எம் மாதி அறிவும்
தமிழ்மண் டலம்ஐந்தும் தத்துவ மாமே.

என்று திருமூலர் கூறியுள்ளார்.

ஈண்டு மண்டலம் என்று திருமூலர் கூறியது ஆசியா- ஐரோப்பா- ஆபிரிக்கா- அமெரிக்கா- ஆஸ்திரேலியாக் கண்டங்களையே ஆகும். மண்டலம்= மண் +தலம் எனப் பிரிக்க.

சுத்த தத்துவத்தினின்று அசுத்த தத்துவமும் அசுத்த தத்துவத்தினின்றும் பிரகிருதி தத்துவமும் தோன்றுகிறபடியால் சுத்த தத்துவத்திலேயே முத்தமிழ் வேதம் தோன்றியதெனச் சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம் என்று திருமூலர் கூறியுள்ளார்.

இதனாலே அக்காலத்தில் இமயமுதல் குமரிவரை அங்கம்முதல் காந்தாரம் வரை வழங்கிய 18 மொழிகளும் தமிழினின்றுமே பிறந்தன என்பது வெள்ளிடைமலை.

உண்மையான அழகு இதயத்தூய்மையில் உள்ளது.

தமிழ்மொழியை "மதுரம் வாக்கியம்" (இனிய மொழி) தமிழ்மொழி என்றும் அதுதான் மனிதர் மொழி என்றும் வான்மீகர் இராமாயணத்தில் கூறுவதாகச் செந்தமிழ் பத்திராசிரியர் கூறுகிறார். (vide செந்தமிழ் vol 36 no 7) தமிழ் மானுஷ பாஷையென்று பொதுப்படக் கூறப்பட்டமையால் அக்காலத்தில் மானுடர் வாழும் இடம் எங்கும் தேச பாஷையாகத் தமிழ்மொழி நடைபெற்று இருந்ததென்று அறியத்தக்கதென்றும் பத்திராசிரியர் கூறுகின்றார்.

மேலும் செந்தமிழ் vol 36 no 8இல் பக்கம் 341இல் மானிடர்க்கும் பிறப்புரிமையாயுள்ள பாஷை ஒன்று இருக்க வேண்டுமன்றே! அது தமிழ்மொழி என்றும் பின்பு செயற்கையுள்ள பாஷை தேவபாஷை முதலிய பிறமொழிகள் என்றும் கொள்ளத் தகும் என்றும் கூறுகிறதால் ஐந்து கண்டங்களிலுமுள்ள மானிடர் எல்லாருக்கும் பிறப்புரிமையாயுள்ள மொழி தமிழ் மொழியேயாகும்.

ஆரியர்களுக்கு விந்திய மலைக்கு வடக்கே உள்ள நிலங்கள் முழுவதையும் விட்டு விட்டுத் தமிழர்கள் தெற்கே தக்கணத்திற்கு வந்து தம் இனத்தவருடன் கலந்து கொண்டார்கள். அக்காலத்திலே தான் தமிழுக்கு வட்டெழுத்துக் காலம் ஆரம்பமாயிற்று.

சிவப்பு இந்திய (Red indian) வம்சத்தவனாகிய இராவணனைத் தமிழ் நாட்டினின்றும் தொலைக்க தமிழ் அரசர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஆரிய அரசனாகிய தசரத இராமனையும் உதவிக்குச் சேர்த்துக் கொண்டு போரிட்டு வெற்றி அடைந்தார்கள். அன்று தொட்டு ஆரிய நாகரிகம் விந்திய மலைக்கு தெற்கே தமிழ் நாட்டில் பரவத்தொடங்கியது.

தற்காலம் கிரந்த எழுத்துக்களிலும் நாகரகத்திலும் உள்ள ஆகமங்கள் எல்லாம் தமிழ் ஆகமங்களின்றுமே மொழி பெயர்த்தவையும் வடமொழி கற்ற தமிழர் தமிழ் ஆகமங்களின் சாரங்களை வடமொழியாளர்க்கும் அறிவுறுத்துவான் கருதி எழுதப்பட்ட வையுமே தவிர வேறு இல்லை. இவ்வுண்மையைக் காமிகம் முதலிய ஆகமங்கள் பவுஷ்கரம் முதலிய உப ஆகமங்களுடைய முகவுரையிலிருந்து அறியலாகும்.

## ஞானச்சுடர் சந்தாதாரின் கவனத்திற்கு

**வணக்கம்! தாங்கள் காட்டிவரும் பேராதரவுக்கு மனமார்ந்த நன்றிகள்.**

**ஞானச்சுடரின் மலரின் தயாரிப்புச் செலவினங்களும், அஞ்சல் கட்டண உயர்வும் பல மடங்கு உயர்ந்துவிட்ட இவ்வேளையிலும், மாதந்தவறாது ஞானச்சுடரினை வெளிக்கொணர்வதில் நாம் மிக்க ஊக்கமாகவே உள்ளோம். இத்தகைய சூழ்நிலையில் நாம் உங்களிடம் எதிர்பார்ப்பது ஒன்றுதான்.**

**2014ஆம் ஆண்டுக்கான நுழை வாசலிலே நாம் நிற்கிறோம். உங்களுடைய வருடாந்த சந்தாப் பணத்தினைச் செலுத்தி தாங்கள் சந்தாப் பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளுமாறும், புதிய ஆண்டில் பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக தங்களது சரியான முகவரியைத் தபால் மூலமோ - தொலைபேசி மூலமோ தெரியப்படுத்துமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

**சந்நிதியான் ஆச்சிரம**
**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

# ஏகாதசி விரத மகிமை

திரு இராசையா ஸ்ரீதரன் அவர்கள்



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்திக்குரிய விரதங்களில் ஏகாதசி விரதம் தனித்துவமானது. இந்த விரதம் மிக்க மகிமையும் மகத்துவமும் நிறைந்த புனிதமான புண்ணிய விரதமாகும். ஒவ்வொரு மாதமும் வளர்பிறை, தேய்பிறைகளின் பதினோராம் நாள் ஏகாதசி எனப்படுகிறது.

இந்த ஏகாதசி விரதமானது கார்த்திகை மாதத்தில் வருகின்ற பூர்வபக்க ஏகாதசியை முதலாவதாகக் கொண்டு அனுட்டிக்கப்படுகின்றது. காத்தற் கடவுளாகிய ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தியானவர் இந்த மாதத்தில்த்தான் நித்திரையிலிருந்து எழுந்தருளுவதாகக் கூறப்படுகின்றது. இவர் ஆடிமாதம் முதல் கார்த்திகை ஈறாகவுள்ள ஐந்து மாதங்களில் நெடுந்துயில் கொள்ளுதலில் இவ்வைந்து மாதங்களிலும் வருகின்ற ஏகாதசிகள் மிகச்சிறப்பானவை.

இவ்விரதத்தை அனுட்டிக்க விரும்புவோர் முதல்நாள் ஒரு பொழுதுண்டு ஒரே மனத்தோடும் இறை தியானத்துடனும் பக்தியுடனும் துயில்கொண்டு மறுநாள் அதிகாலை சூரியோதயத்துக்கு முன் நித்திரை விட்டெழுந்து காலைக் கடன் கழிக்கவேண்டும். பின்பு புனித புண்ணிய நீராடி சந்தியாவந்தனம் முடித்து ஏதாவது ஒரு விஷ்ணு கோயிலுக்குச் சென்று வழிபாடியற்றுதல் வேண்டும்.

முடியுமாயின் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் நாமாவளிகளைப் பாடிக்கொண்டிருக்கலாம். ஏகாதசி முழுநாளும் நித்திரை கொள்ளாமல் இருக்க வேண்டும். பகல் முழுவதும் ஒன்றுமே சாப்பிடக்கூடாது. இரவு கண்விழித்து நான்கு ஜாமத்திலும் திருமாலை நினைந்து வந்தித்துச் சிந்தித்துச் சேவிக்க வேண்டும். அடுத்தநாள் துவாதசியன்று அதிகாலை வேளையில் மகாவிஷ்ணுவைத் தரிசித்து அவருடைய பாதங்களை

தீயோர் நட்பு பேயோர் ஆக்கும்.

வணங்கிய பின்பு துளசிதீர்த்தம் அருந்துதல் நல்லது. கூடுமானவரை சொந்த பந்தங்களுடன் உற்றார் உறவினர்களுடன் கலந்து திருமாலைக் கும்பிட்ட பின்பு அடியார்களுக்கு இயன்றவரை அன்னதானம் செய்து விரதகாரர் பாரணை பண்ணலாம்.

மாதம்மாதம் வரும் ஏகாதசிக்கு விரதமிருந்து நித்திரை விழிக்க முடியாதவர்கள் மார்கழியில் கூடுகின்ற சுவர்க்கவாயில் ஏகாதசியன்றாவது கண் விழித்துப் பெருமானை வணங்குதல் வேண்டும். அடுத்த நாள் துவாதசியன்று ஏழைகளுக்கு அன்னதானம் செய்தல் சிறந்தது. இந்த விரதமகிமை பற்றி ஓர் உண்மைக் கதை இருக்கிறது.

கோசல நாட்டை சூரியகுலத்து அரசனான ருக்மாங்கதன் ஆண்டு வந்தான். அவன் புராதன புராணங்கள் மூலமாக துளசி, வில்வம், வன்னி, பாதிரி போன்றவைகளால் இறைவனுக்கு அர்ச்சனை செய்பவர்கள் இறைவன் பாதார விந்தங்களையடைந்து பேரின்பப் பெருவாழ்வு வாழ்வர் என அறிந்து கொண்டான்.

உடனே அவன் மிகுந்த சிரமப்பட்டு ஒரு நந்தவனத்தை அமைத்தான். அதை மிகவும் கண்ணுங் கருத்துமாகப் பாதுகாத்து வந்தான். அங்கு கிடைக்கும் மலர்களை அந்தணர்கள் அடியார்கள் எடுத்துச் சென்று இறைவனுக்கு மாலை கட்டிக்கொடுத்து வழிபாட்டிலீடுபட்டுக் கொண்டு வந்தனர்.

இந்த நந்தவனத்தின் செழிப்பைக் கண்ட தேவலோகப் பெண்கள் ஒவ்வொரு நாளும் இந்திரன் செய்யும் பூசைக்காக இங்கே வந்து மலர்களைப் பறித்துச் சென்றனர். இதன் காரணமாக நந்தவனத்தில் மலர்கள் குறைந்து கொண்டே போயிற்று. மலர்கள் குறைவதைக் கண்ணுற்ற அந்தணர்களும் அடியார்களும் ருக்மாங்கதனிடம் முறையிட்டனர்.

அவன் ஆச்சரியமும் கவலையும் அடைந்தவனாய் நந்தவனத்துக்குக் காவல் போட்டான். அப்படியிருந்தும் பூக்கள் குறைந்து கொண்டுதான் இருந்தது. உடனே ருக்மாங்கதன் பூக்கள் எப்படிக் குறைகிறது என்பதைக் கண்டுபிடிக்குமாறு ஆட்களை நியமித்தான்.

மூன்று நாட்களின் பின்னர் காவலர்கள் பூந்தோட்டத்திலே தவம் செய்துகொண்டிருந்த ஒரு முனிவரைப் பிடித்து வந்து அரசன் முன்னே நிறுத்தினர். அதனால் ருக்மாங்கதன் முனிவரிடம் மன்னிப்புக் கேட்டான். "முனி சிரேஷ்டரே! எனது அரச காவலர்கள் செய்த பிழையைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்" என்று காலடியில் வீழ்ந்து வணங்கினான்.

"முனிவரே! பூந்தோட்டத்தில் தினமும் மலர்கள் குறைந்து போவதைக் கண்டு பிடித்துச் சொல்ல வேண்டும்" என்று பணிந்தான். அதைக் கேட்ட முனிசிரேஷ்டர் தனது ஞானதிருஷ்டியினால் விஷயத்தை அறிந்து, "அரசே! இந்திரனுடைய பூசைக்காக தேவலோகக் கன்னியர்கள் தினமும் இங்கே வந்து மலர்களைப் பறித்துச் செல்கின்றனர்" என்று கூறினார். அதைக் கேட்ட ருக்மாங்கதன், "தேவரீர் அவர்களைக் கண்டுகொள்ள ஓர் உபாயம் கூறுங்கள்" என்றான். முனிவரோ, "ருக்மாங்கதா! இதற்கு ஒரு நல்ல வழி இருக்கிறது. பூந்தோட்டத்திலே கொம்மடிச் செடியை நட்டு வளர்க்க வேண்டும். தேவலோகப் பெண்கள் பூப்பறிக்கும்போது அவர்களது பாதத்தில் பட்டால் அவர்கள் தேவ தத்துவத்தை இழந்து மீண்டும் தேவலோகம் செல்ல முடியாது நம்மிடம் அகப்பட்டுக் கொள்வார்கள்" என்று சொன்னார்.

தர்மம் கொடுப்போரைத் தடுத்து நிற்காதே.

உடனே ருக்மாங்கதன் தன்னுடைய நந்தவனத்திலே கொம்மடிச் செடியை உண்டாக்கி வளர்த்து வந்தான். ஒருநாள் அதிகாலையிலே தேவலோகப் பெண்கள் பூப்பறிக்க வந்தவேளை ஒருத்தி கொம்மடிச் செடியிலே சிக்கிக் கொண்டாள்.

இதையறிந்த ருக்மாங்கதன் நந்தவனத்துக்கு வந்து விசாரணையை ஆரம்பித்தான். அப்பொழுது, செடியில் சிக்கிக்கொண்ட அந்தத் தேவலோகப் பெண் "அரசே! இந்திரன் செய்யும் பூசைக்காக நாம் இங்கே வந்து மலர்கள் பறித்துச் செல்வது வழக்கம். இன்றும் இங்கே மலர்பறிக்கும் பொருட்டு வந்தோம். தற்செயலாகக் கொம்மடிச் செடியிலே என் கால் பட்டமையால் நான் தேவ தத்துவத்தை இழந்து விட்டேன். மற்றவர்கள் சென்று விட்டார்கள். நான் மட்டும் அகப்பட்டுக் கொண்டேன்" என்று கவலையோடு கூறி நின்றாள்.

அதைக் கேட்ட ருக்மாங்கதன், "எப்படி நீ இதிலிருந்து மீளப் போகிறாய். வேறு மார்க்கம் ஏதும் உண்டா?" என்று விசாரித்தான். அதற்கு அவள், "ஏகாதசி விரதம் நோற்பவர்கள் அவ்விரதத்தின் ஒருநாள் பலனை எனக்கு அளிப்பார்களேயானால் நான் இதிலிருந்து விடுபட முடியும்" என்றாள்.

உடனே அரசன் தன்னுடைய வேலையாட்களைக் கூப்பிட்டு ஏகாதசி விரதமிருக்கும் ஒருவரை அழைத்து வருமாறு கட்டளையிட்டான். அவர்களும் எல்லா இடங்களிலும் தேடியும் ஏகாதசி விரதம் இருப்பவர் அகப்படவில்லை.

இந்த விடயத்தை அறிந்த அந்தத் தேவலோகக் கன்னிகை ருக்மாங்கதனைப் பார்த்து, "அரசே! உங்களை இளம் வயதிலே வளர்த்தவராகிய செவிலித்தாயை இங்கே வரவழையுங்கள்" என்று விநயத்துடன் கேட்டு நின்றாள். அரசனும் அப்படியே செய்தான். செவிலித்தாய் வந்தவுடன் அந்தத் தேவலோகப் பெண்ணானவள், "தாயே! உங்களிடம் தான் ஏகாதசி விரத பலன் இருக்கிறது. அதில் பாதியை எனக்குக் கொடுங்கள். அவ்வாறு கொடுத்தால்த்தான் நான் பிழைக்க முடியும்" என்று பணிந்து வேண்டி நின்றாள். ஆனால் அந்தச் செவிலித் தாயோ, "பெண்ணே! நான் ஒருபோதும் ஏகாதசி விரதம் அனுட்டிக்க வில்லையே" என்றாள். அதற்கு அப்பெண்ணோ, "அம்மணி! பழைய காலத்திலே முன்பொருநாள் அரசனின் தந்தை உன்னைக் கோபித்தான். அது உன்னுடைய மனத்தை மிகவும் வாட்டியது. அதனால் அன்று முழுவதும் உணவே அருந்தாமல் பட்டினியாக இருந்துவிட்டு மறுநாள் காலை போசனம் செய்தாயே. மறந்துவிட்டாயா? தாயே! அன்று நீ உணவின்றிப் பட்டினியாய் இருந்த நாள் ஏகாதசிப் புண்ணிய புனித நன்னாளாகும். ஆதலால் அந்த விரத பலன் உன்னிடம் இருக்கிறது. தயைகூர்ந்து அதில் பாதியை எனக்குத் தரல்வேண்டும்" என்று கூறிக் கண்ணீரும் கம்பலையுமாக நின்றாள்.

அதுகேட்ட செவிலித்தாய் மிகவும் மகிழ்ச்சியடைந்தவளாய், "அடி பெண்ணே! இந்தா அந்த விரத பலன் முழுவதையுமே நீ எடுத்துக்கொள்!" என்று சொல்லிக் கொண்டே தன்னுடைய ஏகாதசி விரத பலன் முழுவதையுமே அத்தேவ கன்னிகைக்குத் தத்தம் செய்து கொடுத்தார்.

அந்த வகையில் அந்த ஏகாதசி விரத பலனைப் பெற்ற தேவகன்னியானவள் தன்னுடைய தேவதத்துவத்தை மீண்டும் அடையப்பெற்று ஆனந்தப் பரவசமுடனே தேவலோகம் சென்றடைந்தாள்.

செருக்கைப்போல் தீமை எதுவும் இல்லை.

ருக்மாங்கதன் இதைக் கேள்விப்பட்டு ஆச்சரியமடைந்தான். உடனே தனது நாட்டு மக்கள் அனைவரையும் ஏகாதசி விரதத்தை அனுட்டிக்குமாறு கட்டளையிட்டான். புத்திபூர்வமாகவேனும் அபுத்திபூர்வமாகவேனும் இவ்விரதத்தை அனுட்டித்தால் நற்பலன் கிட்டும்.

ஒரு வருடத்தில் 24 ஏகாதசி வந்தாலும் மாசி மாதத்து வளர்பிறை ஏகாதசியை முறைப்படி அனுட்டித்தால் முழுப்பலனும் கிடைக்கும் என்பது நம்பிக்கை. ஆதலால் இந்த ஏகாதசி விரதத்தை சரியான முறைப்படி அனுட்டித்து வறுமை, பிணி நீங்கப்பெற்று மங்களகரமான சுபீட்சமான இனிய நல்வாழ்க்கைக்கு நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வோமாக.

# வாழ்த்துகின்றோம்



இவ்வருடத்திய அரச இலக்கிய விழாவில், மூத்த எழுத்தாளர் திரு க. நடேசு (தெணியான்) அவர்கட்கு "சாகித்ய ரத்னா" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மொழி ரீதியாக அறிஞர்கள் கௌரவிக்கப்படும் இவ் விழாவில் இந்த வருடம் மூத்த தமிழ் எழுத்தாளர் தமிழ் மொழி ரீதியில் கௌரவிக்கப்பட்டுள்ளமை எழுத்துலகிற்குக் கிடைத்த பெரும்பேறாகும்.

வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட தெணியான் அவர்கள் நூற்றுக்கணக்கான பல தமிழ்ச் சிறுகதைகளையும், பல தமிழ் நாவல்களையும் எழுதியுள்ளமையும், ஆசிரியர் மற்றும் அதிபராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர் என்பதுவும் குறிப்பிட வேண்டியதாகும்.

ஆசிரியராகவும் அதிபராகவும் நீண்ட காலம் பணிபுரிந்துவரும் திரு ஆ. சிவநாதன் அவர்கள் சிறந்த அதிபருக்கான "பிரதீபா பிரபா" விருதினை பெற்றுள்ளமை குறித்து அவரை நிறைமனதோடு வாழ்த்துகின்றோம். கோவில்களிலும், பாடசாலைகளிலும் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றிவரும் திரு ஆ. சிவநாதன் அவர்கள் பல்வேறு இடங்களிலும் புத்தக வெளியீட்டு வேளைகளில் அவர் ஆற்றிவரும் உரைகள்மூலம் **"ஒரு சிறந்த விமர்சகர்"** என்பதையும் நிலைநாட்டி வருகிறார்.



சந்நிதியான் ஆச்சிரமத்துடன் எப்போதும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருக்கும் இவர்கள் ஆச்சிரமத்தினால் வெளியிடப்படும் "ஞானச்சுடர்" மலருக்கான மதிப்பீட்டுரைகளை வருடம் தவறாமல் வழங்கித் தம் சீரிய பங்களிப்பினை நல்கிவரும் இருவரையும் சைவ கலை பண்பாட்டுப் பேரவையினராகிய நாம் உள்ளன்போடு வாழ்த்துகின்றோம்.

(தொடர்ச்சி...

# திருமந்திரக் கதைகள்

திரு கே.வி. குணசேகரம் அவர்கள்

## 12. யாருங் கூடஇரார்.

"நாட்டுக்கு நாயகன் நம்மூர்த் தலைமகன்
காட்டுக்குச் சிவிகை யொன்றேறிக் கடைமுறை
நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறைகொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே"

நாட்டின் தலைவனான அரசன், முன்பு யானைகளிலும் குதிரைகளிலும் ஏறிச் செல்லும் அவனை இப்பொழுது சிவிகை என்னும் பாடையில் ஆட்கள் சுமந்து செல்கின்றனர். முன்பு அவனது புகழைப் பறை சாற்றும் மங்களப் பேரிகைகள் இசைக்கப்பட்டன. இப்பொழுது அமங்கலப் பறை ஒலிக்கிறது. இனி அவனைக் காண மாட்டோம் என்று நினைத்த அவ்வூர் மக்கள் சிவிகையின் பின் செல்கிறார்கள். இது தான் நாட்டின் தலைவனானாலும் சரி மக்களானாலும் சரி இறுதியில் செல்லும் முறையாகும்.

கரிகாலன் பலமுள்ள அரசர்களைக் கூடப் பயப்படுத்தும் அரசன். அவனது பெயரைக் கேட்டாற் சிற்றரசர்களும், பேரரசர்களும், தீயவர்களும் நடுநடுங்குவார்கள். அவனுடன் பகையேற்படாது நடந்துகொள்வார்கள். அவன் தனது பலத்தை வெளிப்படுத்த அடிக்கடி பெரும் விழாக்கள் கொண்டாடுவான். அவ்விழாக்களில் அயல்நாட்டு அரசர்கள் எல்லோரும் கலந்துகொள்வார்கள். அவனுக்குப் பெறுமதி மிக்க பரிசில்கள் பலவற்றைக் கொண்டுவந்து கொடுப்பார்கள். யார் அவனுக்குப் பெரும் பரிசு கொடுத்தது என்று பின் தமக்குள் தாம் விவாதிப்பார்கள்.

அவனுக்கு ஒரே ஒரு மகள். அவளைத் திருமணம் செய்ய பல நாட்டினது அரசர்கள் போட்டி போட்டனர். அதனால் அவர்களுக்கிடையில் பெரும் போர் கூட ஏற்பட்டது. பல அரசர்கள் புலவர்களையும், அறிஞர்களையும் தூதாக அனுப்பிப் பெண் கேட்டனர். அவன் பெரும் மன்னனான வளவை நாட்டரசனுக்கு தனது மகளைத் திருமணம் செய்து வைத்தான். வளவை நாடு பெருந்தேசம். அத்துடன் வளங்கள் பலவும் கொண்டது. கரிகாலன் வளவை நாட்டரசனுக்குப் பெண் கொடுத்ததால் அவனது பலம் இரண்டு மடங்காக அதிகரித்தது.

ஒருமுறை அவன் தனது பலத்தை வெளிப்படுத்த பெரியதொரு படை அணிவகுப்பு நடத்தினான். அயல்நாட்டரசர்கள் எல்லோரும் வந்திருந்தனர். புரோகிதர் "மாலை நான்கு மணிக்குத்தான் சுபநேரம் உள்ளது. அந்நேரம் படை அணிவகுப்பை தொடங்குவதுதான் நல்லது" என்றார்.

ஆனால் கரிகாலன் புரோகிதரின் சொல்லைக் கேளாமல் காலை எட்டு மணிக்கே விழாவைத் தொடங்கினான். புரோகிதர் வந்து, "காலையில் தொடங்கினால் துன்பங்கள் பல உண்டாகும்" என்றார். அதைக் கரிகாலன் கேட்கவில்லை. "புரோகிதரே, போர் செய்வதானால் தான் நல்ல நேரம் பார்க்க வேண்டும். சுபநேரத்தில் போர் ஆரம்பிப்பது வெற்றிக்காக அல்ல. வீரமரணமடையும் போர் வீரர்கள் சொர்க்கத்தை அடைவதற்காக. இது கண்காட்சிப் பயிற்சி. எனது பலத்தைக் காட்சிப்படுத்துகிறேன். இதற்குச் சுபநேரம் பார்க்கத் தேவையில்லை" என்றான்.

கரிகாலன் பெரும்பாலும் மற்றவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதில்லை. அன்று அவன் திடீரென்று இறந்துவிட்டான். முதலமைச்சரும், புரோகிதரும் அவனது ஈமக்கிரிகைகள் செய்வதற்கான நேரத்தைக் குறிப்பிட்டனர். அவர்களது யோசனைகளை ஆட்சேபிக்க யாரும் இருக்கவில்லை. அதனால் புரோகிதர் தனது செயல்களின் மகிமையைக் காட்டச் சோதிடத்தில் இல்லாத பல நிகழ்வுகளைக் குறிப்பிட்டார்.

பிரேத ஊர்வலம் ஆரம்பமானது. பாடையில் கரிகாலனது உடலைத் தூக்கி வைத்தார்கள். நான்கு பேர் பாடையைத் தூக்கினார்கள். அமங்கல வாத்தியங்கள் இசைக்கப்பட்டன. நெய்தற் பறை கர்ண கடூரமாக ஒலித்தது. பாடையின் பின்னே மக்கள் சென்றனர். முன்பு அவன் அப்பாதையால் வீதிஉலாச் சென்றால் நூற்றுக்கணக்கான யானைகளும் குதிரைகளும் முன்னே செல்லும். மங்கள வாத்தியங்கள் முழங்கும். ஆடல் மகளிர்கள் விதம் விதமாகத் தம்மை அலங்கரித்து அரசனுக்கு முன் நடனமாடிச் செல்வார்கள். வீதிகள் மகர தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். சந்திகள் தோறும் மேடைகள் அமைத்து கலைநிகழ்ச்சிகள் நடைபெறும். கலைஞர்கள் தம் திறமையை வெளிப்படுத்தி அரசனது நன்மதிப்பையும் பரிசையும் பெறுவார்கள். நகர் இந்திரலோகம் போல் அலங்கரிக்கப்பட்டிருக்கும். கோயில்களில் பூசைகள் நடைபெறும். மடங்களில் உணவு வழங்கப்படும். அரசன் அடிக்கடி நகர்வலம் வரவேண்டும் என்று மக்கள் விரும்புவர். வீதிக்கு வீதி அரசனை வரவேற்பதில் போட்டியிருக்கும். எந்த வீதி அழகாக அலங்கரிக்கப்பட்டது? எந்த வீதியில் தரமான கலைநிகழ்வு நடைபெற்றது என அரச ஊழியர்கள் ஆய்வு செய்வர்.

ஆனால் அரசன் உடல் அன்று ஊர்வலமாகப் பாடையிற் சென்றபோது இவை எதுவும் நடைபெறவில்லை.


"இதுதான் நிச்சயமானது. சமரசமான இடம் சுடுகாடு. அதில் அரசனும் ஆண்டியும் சமம்" என்றார் புரோகிதர்.

அரசன் ஊரில் தங்கினால் படைவீரரும், ஊர்ப் பிரமுகர்களும், மக்களும் அவனோடு கூட இருப்பர். ஆனால் அன்று எவரும் இருக்கவில்லை.

(தொடரும்...

# விபூதியின் மகிமை

காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள்



வீபூதி என்பது மேலான ஐஸ்வரியமாகும். சிவஸ்வருபமான பேரானந்த நிலையாம். இது பசுவாகிற ஜீவன்களின் மலமான அஞ்ஞான கர்ம நாசத்திற் சித்திப்பதாம். கோமய பிண்டங்கள் ஜீவர்களாம். கோமயமென்பது ஜீவர்களின் மலமாம். இதை சிவஞான அக்னியில் இடுவது ஸோஹம் பாவனையாகிற யோக நிஷ்டையாம். இந்நிஷ்டையால் ஜீவனிடத்திலுள்ள உபாதிகள் நீங்கிப் பரசிவத்தோடு இரண்டறக் கலத்தலாகிய பரமைஸ்வர்ய வடிவம் வீபூதியாகிய நித்யானந்த நிலை உண்டாகிறது. அன்றும் மாயாகாரிய பிரபஞ்ச வடிவ நாமருபங்களை அகண்டாகார விருத்தி வடிவ தீயால் எரித்து மிஞ்சிய சுத்த சிவ வடிவ ஸ்வருபமே வீபூதியாகும்.

## சிவாலய வழிபாடுகள்

1. காலையில் நீராடி தூய ஆடையணிந்து சமயச் சின்னங்கள் அணிந்து செல்லுதல் வேண்டும்.
2. கோபுர வாயிலுள் செல்லுமுன் கை, கால்களை கழுவிக்கொண்டு தலைமேல் இரு கைகளையும் கூப்பி கோபுரத்தை வணங்கி உட்செல்ல வேண்டும்.
3. ஐந்தெழுத்து பஞ்சாட்சரத்தை மனதில் ஓத வேண்டும்.
4. முதலில் கொடிமரத்துக்குப் பக்கமாக விழுந்து வணங்க வேண்டும். பின் முதலில் விநாயகரை வணங்கி தலையில் குட்டிக்கொண்டு தோப்புக்கரணம் போட வேண்டும். பின் திருவீதி வலம் வந்து ஏனைய பரிவார மூர்த்திகளை வணங்கி வழிபாடு செய்வதே சிறந்தது.

சிவ பக்தர்கள் தரிக்கும் சிவ சின்னங்கள் வீபூதி, உருத்திராக்கம். திருவெண்ணீறு ஆன்மாக்களை ரக்ஷித்து காப்பதால் இரட்சை எனவும், தீவினைகளை நீறு படுத்துவதால் திருநீறு எனவும், அழியாத செல்வத்தைக் கொடுப்பதால் வீபூதி எனவும், ஆன்மாக்களிடம் உள்ள மல மாசைக் கழுவுவதால் சாரமெனவும், அறியாமையை அழித்து ஞானத்தைத் தருவதால் பசிதமெனவும் பெயர்பெறும்.

நீடலுறுந்தீ வினை யனைத்து
நீற்றிட லானி றென்றும்
வீடில் வெருக்கை தருவினால்
வீபூதி யென்று முயிர்தோறுங்
கூடுமல மாசினை கழுவுங் குணத்தாற்
சாரமென்று மட

மிகவும் பெரிய தொழிற்சாலை மனம்.

மோட வளர் சோதியைத் தரலாற்
பசித மென்று முரைப்பாரால்

என பேரூர் புராணம் வீபூதியின் சிறப்பினை உரைக்கின்றது.

வீபூதியானது கற்பமெனவும், அநுகற்பமெனவும் உபகற்பமெனவும் மூன்றுவிதப்படும். கன்று ஈன்ற பத்து நாளைக்குள் பட்டு ஆசௌசம் நீங்காதும், இரண்டு கன்றுகள் ஈன்றதும் முதிர்ந்த கன்றுடையதும், நோய்வாய்ப்பட்டதும், மலட்டுத் தன்மை உள்ளதும், கிழத்தன்மை உள்ளதும், கற்பமுற்றதும், கன்று இறந்ததும், வால், காது, கொம்பு இவைகள் பின்னமானதும், மலத்தைத் தின்பதுமான பசுக்கள் வீபூதிக்கு ஏற்றதல்ல.

மற்றும் செம்மை, வெண்மை நிறங்களும் அழகும் நற்குணங்களும் அமைந்தனவாய் சரீரம் புஷ்டியாய் பங்குனிமாத நெற்கதிர்களை மேய்ந்த பசுக்கள் வீபூதிக்கு நல்லவைகள். அவைகளின் சாணத்தை அஷ்டமி, சதுர்த்தி, பௌர்ணமி, அமாவாசை முதலிய திதிகளில் ஏதாவது ஒரு திதியில் பசுமாட்டின் சாணம் பூமியில் விழாமல் தாம்பிர இலையில் சத்ஜோயாத மந்திரத்தைச் சொல்லி ஏந்தி வாமதேவ மந்திரத்தைச் சொல்லி பஞ்சகவ்யம்விட்டு அகோர மந்திரத்தால் பிசைந்து, தற்புருஷ மந்திரத்தால் கையால் உருட்டி ஹோமம் செய்த அக்னியில் நெல்பதருடன் வைத்து ஈசான மந்திரத்தை சொல்லி எடுப்பது கற்பமாம். அவ்விதம் எடுத்த வீபூதியை ஒரு கோடி வஸ்திரத்தால் (துணியால்) வடிகட்டி புதுப் பாத்திரத்தில் நிரப்பி காயத்திரி மந்திரம் சொல்லி, மலர் சாத்தி பூஜித்து வெள்ளை வஸ்திரத்தினால் வேடு கட்டி வைக்க வேண்டும்.

சித்திரை மாதத்தில் காட்டிற்குச் சென்று அங்கு கிடைக்கும் சாணத்தை எடுத்துவந்து இடித்து கோசலம் வார்த்து பிசைந்து உருட்டி முன் சொல்லிய மந்திரங்களின்படி சொல்லி விளைய வைப்பது அனுகற்பம்.

பெரிய காடுகளில் தீப்பற்றி எரிந்து கிடக்கும் சாம்பலை பஞ்சகவ்யம் வார்த்து பிசைந்து உருட்டி பஞ்சபிரம்ம மந்திரங்களால் ஹோமாக்கினியாய் விளைவித்த வீபூதி உபகற்பமெனப்படும்.

மேல் சொன்னவைகளை மந்திரங்கள் சொல்லாமல் உண்டாக்குவது அகர்ப்பமென்ப தாகும்.

கருநிற வீபூதி வியாதியை உண்டாக்கும். செந்நிற வீபூதி கீர்த்தியையும், புகைநிற வீபூதி ஆயுளையும், பொன்நிற வீபூதி போகமோக்ஷத்தையும் கொடுக்கும். வெண்ணிற வீபூதி எல்லா நன்மைகளையும் தரும்.

இத்துணை பெருமை வாய்ந்த வீபூதி தாரணமானது சூரிய பூஜையில் தரிக்கப்படுவது (உத்தூளனம்) சந்தியா காலங்களில் தரிக்கப்படுவது (திரிபுண்டரம்) என இருவகைப்படும். சிவபூஜா காலங்களில் வீபூதி, உருத்திராக்ஷம் தரிக்காமல் செய்வது சாம்பலில் வார்த்த ஹோமத்தால் உண்டாகும் நிஷ்பலனாகும். முறையோடு மேற்சொன்னபடி வீபூதி தரித்துக் கொள்பவர்கள் சகல நன்மைகளும் ஆரோக்ய திடகாத்திரமாக இருப்பார்கள்.

**நிலையான நிலையற்ற பொருள்களைப்பற்றி எப்போதும் ஆராய்ச்சிசெய். உன் மனத்தைக் கவருகின்ற புறப்பொருள்கள் எல்லாம் அழியும் தன்மையுடையன என்பதை அறிய முயல்க. உன் கவனத்தை ஆண்டவனிடம் திருப்புக.**

பொறுமையே நீடித்த பிரார்த்தனையாகிறது.

# வட இந்திய தல யாத்திரை

-செ. மோகனதாஸ் சுவாமிகள்-

எமது மனம் தூய்மையான சிந்தனையுடன் விளங்க வேண்டுமானால் இறைசிந்தனை அவசியம். அதனை உருவாக்குவதற்கு நாம் ஆலயங்களை நாடிச்சென்று அங்கே இடம்பெறும் பூசை வழிபாடுகளில் கலந்து கொள்வதின்மூலம் அதனை அடையலாம். இதற்கு வழிகாட்டியாக அமைந்தவர்கள் எம்மால் போற்றப்படும் தேவார முதலிகளாக விளங்கும் நாயன்மார்களாகும். அவர்கள் காலத்துக்குக் காலம் ஊர்ஊராகச் சென்று அந்தந்த இடங்களில் உள்ள இறைவனைத் தொழுது மக்களின் இடர்களைக் களைந்ததோடு மக்கள் மனதில் இறைசிந்தனையை மேம்படுத்தினார்கள். அதனடிப்படையில் இன்றும்



பலர் இவ்வகையான நடைமுறையைச் செயற்படுத்தி வருகின்றார்கள். இவ்வகையான யாத்திரைமூலம் அடியேன் அடைந்த அனுபவத்தை வாசகர்களாகிய நீங்களும் அனுபவிப் பதற்காகவே யான் சுடரில் எழுதுகின்றேன்.

கடந்த காலங்களில் என்னால் மேற்கொள்ளப்பட்ட வட இந்திய தலயாத்திரை பற்றி நாம் ஞானச்சுடரில் மாதாமாதம் தொடராக வெளியிட்டிருந்தோம். பின்பு அதனைத் தனித் தொகுப்பாகவும் சந்நிதியான் ஆச்சிரமத்தினால் வெளியிட்டிருந்தோம். அச்செயற் பாட்டினை பலரும் வரவேற்றிருந்தார்கள்.

இதற்கமைவாக எம்மால் இவ்வருடம் கடந்த ஆனிமாதம் வட இந்திய யாத்திரையை ஆரம்பிக்கும் செயற்பாட்டில் இருந்தபொழுது இவ்வகையான தலயாத்திரைகளுக்கு முகவராகச் செயற்பட்டுவரும் திரு ஸ்ரீரெங்கநாதன் அவர்கள் எம்மோடு ஆலோசித்தபோது எனது மனதில் உதித்த எண்ணத்தை அவரோடு பகிர்ந்து கொண்டேன். வருடாவருடம் இவ்வகையான தலயாத்திரைகளை மேற்கொள்ளும்போது நாம் ஏற்கனவே தரிசித்த தலங்களுக்குப் போகாமல் நாங்கள் தரிசிக்காத தலங்களுக்குப் போகவேண்டும் என்று கூறியதோடு இம்முறை கேதாரநாத், பத்ரிநாத் போவதைத் தவிர்த்துவிட்டு அதற்குப் பதிலாக குஜராத் மாநிலத்திலுள்ள அகமதாபாத்தில் கடலால் சூழப்பட்டுள்ள பஞ்சலிங்க தரிசனம் செய்ய வேண்டும். அத்தலம் பற்றி ஏற்கனவே ஒரு பத்திரிகை வாயிலாக அறிந் திருந்தேன். அதனை இம்முறை சென்று பார்ப்பதற்குரிய ஒழுங்கினை மேற்கொண்டால் நானும் வருகின்றேன் என்று கூறியபோது திரு ஸ்ரீரெங்கநாதன் தானும் அத்தலம் பற்றிக் கேள்விப்பட்டுள்ளேன். இதுவரை நானும் போகவில்லை. இவ்விடயம் சம்பந்தமாக இந்தியாவில் எமது யாத்திரைகளுக்கு வழிகாட்டியாக வரும் திரு முத்துக்குமார் என்பவருடன் தொடர்பு கொண்டு போவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்வோம் என்று கூறியதுடன் நாம் போவதற் குரிய செயற்பாட்டை ஆரம்பித்து அதற்குரிய தினத்தையும் தீர்மானித்துக் கொண்டோம். அதனடிப்படையில் 06.06.2013 வியாழக்கிழமை கொழும்பில் இருந்து எமது தலயாத்திரையை ஆரம்பித்தோம். வாசகர்களாகிய நீங்களும் எம்மோடு பயணம் செய்ய வாருங்கள்.

**காலம்: 05.06.2013 புதன்கிழமை.**

மதியம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் எமது பூசை வழிபாடுகளை முடித்துக்கொண்டு பிற்பகல் 2.00 மணியளவில் ஆச்சிரமத்திற்குரிய வாகனத்தில் வவுனியாவை மாலை 5.00 மணியளவில் அடைந்தேன். வவுனியாவில் இருந்து இரவு 10.00 மணியளவில்த்தான் கொழும்பு போவதற்குரிய புகையிரதம். ஆகையால் வவுனியாவில் வசிக்கும் திரு திருமதி பவானி தர்மலிங்கம் அவர்களது இல்லத்தில் தங்கி இரவு உணவை முடித்துக்கொண்டு 9.30 மணியளவில் புகையிரத நிலையத்தை அடைந்தேன். அதேசமயம் திரு ஸ்ரீரெங்கநாதன் எம்மோடு தொடர்பை ஏற்படுத்தி வவுனியாவில் இருந்து எமது யாத்திரையில் இணைந்து கொள்ளும் திரு கணபதீஸ்வரக் குருக்களையும் கூட்டிக்கொண்டு வருமாறு என்னைக் கேட்டிருந்தார்கள். அதற்கமைவாக புகையிரத பிரயாணத்திற்கு வசதியாக ஆசன முன்பதிவை மேற்கொண்டு அவருடன் எனது பிரயாணத்தை ஆரம்பித்தேன்.

**காலம்: 06.06.2013 வியாழக்கிழமை**

அன்று அதிகாலை 5.00 மணியளவில் எமது புகையிரதம் கொழும்பை அடைந்தது. எம்மை வரவேற்கவும் எம்மோடு யாத்திரையில் இணைந்துகொள்ளவும் இருந்த திரு கார்த்தி கேயன் அவர்கள் புகையிரத நிலையத்தில் வந்து எங்களை வெள்ளவத்தையில் உள்ள தமது இல்லத்திற்குக் கூட்டிச் சென்றார். அன்று பிற்பகல் 4.00 மணியளவில்த்தான் எமது விமானப் பயணம். ஆகையால் அன்று பகல் அவருடைய வீட்டில் தங்கிநின்று அவருடன் நாம் இருவருமாக யாத்திரையில் பங்குபற்றுவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டோம்.

ஒவ்வொரு முறையும் நான் கொழும்பு செல்லும் காலங்களிலெல்லாம் கொட்டாஞ் சேனையிலுள்ள எமது பேரவையின் செயற்பாட்டிற்கு ஆதரவு நல்குபவராகவும், பேரவை

உறுப்பினராகவும் செயற்படும் திரு நாகலிங்கம் வீட்டில்த்தான் தங்குவது வழக்கம். இம்முறை கார்த்திகேயன் எம்மோடு வருவதற்கு இருந்தமையால் அவரது இல்லத்தில் தங்கவேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டது. ஆனாலும் நான் நாகலிங்கம் வீட்டில் இருக்கும் காலங்களில் வீட்டிற்கு அருகில் இருக்கும் விநாயகர் ஆலயத்திற்கும் அம்மன் ஆலயத்திற்கும் செல்வது எனது வழமையான செயற்பாடு. ஆனால் இம்முறை கார்த்திகேயன் வீட்டில் இருந்தமையால் நாகலிங்கத்தோடு தொடர்பை ஏற்படுத்தி எமது யாத்திரை சம்பந்தமாகவும், ஆலய தரிசனத்திற்காகவும் எப்படியும் வருவேன் என்று கூறியதற்கிணங்க நாகலிங்கம் என்னை எதிர்பார்ப்பதாகக் கூறி இருந்தார்.

அதற்கமைவாக திரு ஸ்ரீரெங்கநாதனால் ஒழுங்கு செய்யப்பட்ட முச்சக்கர வாகனத்தில் அவரது இல்லத்திற்கு ஒருமுறை வரும்படி வற்புறுத்தியதன்பேரில் அவரது வீட்டிற்கும் சென்றுவிட்டு அப்படியே கொட்டாஞ்சேனை சென்று திரு நாகலிங்கம் அவர்களையும் சந்தித்துவிட்டுப் பக்கத்தில் உள்ள ஆலயங்களில் தரிசனத்தையும் மேற்கொள்ளலாம் என்னும் எண்ணத்தோடு அச்செயற்பாட்டில் ஈடுபட்டேன். அத்துடன் 12.30 மணியளவில் விமான நிலையத்தை அடையவேண்டிய காரணத்தால் எமது பிரயாண ஒழுங்குகளையும் அவசர அவசரமாக மேற்கொண்டோம். அவ்வகையில் திரு ஸ்ரீரெங்கநாதன் ஒழுங்குசெய்த வண்டியில் அவரது இல்லத்திற்கும் சென்றுவிட்டு அருகிலுள்ள ஆலயங்களுக்கும் சென்றேன். ஆனாலும் விமானப் பயணத்தின் அவசரம் காரணமாக சரியான முறையில் எனது வழமையான வழிபாட்டிலிருந்து விலகிச் செல்வதற்கமைவாக கூடிய விரைவில் எனது வழிபாட்டை முடித்துக்கொண்டு திரு கார்த்திகேயன் வீட்டை அடைந்து ஒழுங்கு செய்யப்பட்ட வாகனத்தில் விமான நிலையத்தை அடைந்தோம். ஆனாலும் ஆலயத்தில் என்னால் மேற்கொள்ளப்படும் ஒழுங்கான வழிபாட்டை செய்யமுடியாதிருந்தமை ஒரு பெருங் குறையாகவே என் மனதை உறுத்திக்கொண்டு இருந்தது. இப்போது எம்மோடு மேலும் ஒன்பது பேர் இணைந்து கொண்டனர்.

எமது குழுவினர் சரியாக 1.00 மணியளவில் விமான நிலையத்தை அடைந்தோம். நான் அவசர அவசரமாக ஆலயத்தில் வழிபாட்டை முடித்ததன் காரணமோ தெரியவில்லை அன்று பிற்பகல் 4.00 மணிக்குப் புறப்படவேண்டிய விமானம் இரவு 7.30 மணியளவில்தான் புறப்பட்டது. அப்போது என்மனம் எனக்குக் கூறியது. "வழமையாக நீ செய்யும் வழிபாட்டிலிருந்து தவறியதற்கான தண்டனைதான் இது. ஆறுதலாக ஆலய வழிபாட்டை மேற்கொண்டிருந்தால் இந்நிலை உனக்கு ஏற்பட்டிராது." அதுவும் உண்மை என்றுதான் எனக்குத் தோன்றியது. நாம் இறைவழிபாடு மேற்கொள்ளும்போது அவசரம் காட்டாது ஆறுதலாக இறைவனோடு எமது மனதை ஒன்றச் செய்வதன்மூலம் கிடைக்கும் ஆனந்தம் மிகப்பெரியது. இதனை அனுபவ வாயிலாக நான் பலமுறை அடைந்துள்ளேன்.

இரவு 7.30 மணிக்கு புறப்பட்ட விமானம் எவ்வித இடர்பாடும் அற்றநிலையில் சென்னை விமான நிலையத்தை அடைந்து, இரவு 9.00 மணியளவில் எமக்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வாகனத்தில் ஸ்ரீரெங்கநாதன் உட்பட எழும்பூரில் உள்ள வி.எஸ் விடுதியில் தங்கினோம். தமிழ்நாட்டிலிருந்து எமது யாத்திரையில் இணைந்து கொள்வதற்காக வந்திருந்த திரு ஆறுமுகானந்தன், தனது வீட்டிலேயே தயார்செய்து கொண்டு வந்திருந்த அன்றைய இரவு உணவை நாங்கள் அனைவரும் பகிர்ந்து உண்டோம். அத்துடன் அன்றைய பொழுது கழிந்தது.

(தொடரும்...




## நாய் கேட்ட வரம்

ஸ்ரீ ராமராஜ்யத்தில் நீண்டகாலமாகவே ராஜ்ய பரிபாலனம் எந்தவிதக் குறைபாடுமின்றி சீரும் சிறப்புமாக நடந்து வந்தது.

அன்றாடம் கூடும் சபா மண்டபம் எந்த வழக்குமின்றி உன்னத நிலையிலேயே இருந்தது. அன்றொருநாள் ஸ்ரீராமர் வழக்கம்போல் சிம்மாசனத்தில் வீற்றிருந்தார். சபையில் வசிஷ்டர் உட்பட மகரிஷிகள் பலர் அமர்ந்திருந்தார்கள்.



அப்போது திடீரென்று அந்த மண்டபத்திற்குள் ஒரு நாய் தன் தலையில் ரத்தம் சொட்டச் சொட்ட ஓடி வந்து நின்றது. இந்தக் காட்சியை அங்கிருந்தவர்கள் வியப்போடு பார்த்தார்கள்.

அந்த நாய், ஸ்ரீ ராமரையும் சபையோரையும் வணங்கிவிட்டுப் பேச ஆரம்பித்தது."ஹே பிரபு! ராமச் சந்திரமூர்த்தி!! 'சர்வார்த்தசித்தி' என்ற ஒரு பிரம்மசாரிப் பிராமணன், நிரபராதியான என்னை மண்டையில் தடியால் அடித்து உடைத்துவிட்டான். இது நியாயமா ராமப்பிரபு? இதை நீங்கள் விசாரணை செய்து நீதி வழங்க வேண்டும்!" என்று சொல்லிப் புலம்பியது.

நாய் கூறிய வழக்கைக் கேட்டதும் ஸ்ரீராமர் ஒரு நிமிடம் கண்ணைமூடி யோசித்தார். பிறகு அடிபட்ட நாய் கூறிய குற்றச்சாட்டை விசாரிக்க, நாயின் மண்டையிலடித்த அந்த பிரம்மசாரியைத் தமது நியாய சபைக்கு அழைத்து வரும்படி காவலர்களிடம் உத்தரவிட்டார்..

சிறிது நேரத்திற்குள் காவலாளிகள் அந்தப் பிரம்மச்சாரியைக் கொண்டுவந்து நியாய சபையில் நிறுத்தினார்கள்.

வந்த பிரம்மசாரியிடம் ஸ்ரீராமர், "எதற்காக நாயை மண்டையில் ரத்தம் வரும்படி அடித்தாய்?" என்று விசாரணை செய்தார்.

அதற்கு அந்த பிரம்மசாரி ஸ்ரீராமரையும், மற்றவர்களையும் கரம் குவித்து வணங்கிய பின்பு பேச ஆரம்பித்தான்.

"ஹே பிரபு! நான் பிட்சை எடுத்து வாழ்ந்து வரும் ஓர் ஏழை. எல்லா சாஸ்திரங்களையும் நன்கு கற்றவன். "வேதத்தில் சொல்லியபடியே நாள்தோறும் அன்றைக்குத் தேவையான ஆகாரத்திற்கு பிட்சை எடுக்கிறேன்.

"கற்ற சாஸ்திர வித்தையைப் பிறருக்கு நான் எந்தவித பலனையும் எதிர்பாராமல் கற்றுத் தருகிறேன். இப்படிப்பட்ட நான் மிகுந்த பசியோடு வீடு வீடாகச் சென்று பிட்சை எடுத்துக் கொண்டிருந்தேன். அப்போது இந்த நாய் விடாமல் குரைத்துக்கொண்டே குறுக்கிட்டு என்னை பிட்சையே எடுக்கவிடாமல் செய்தது. சற்று ஆத்திரம் அடைந்த நான் அதை விரட்டினேன். அப்படியும் அது மேன்மேலும் என்னையே தொடர்ந்து வந்தது. ஆதலால் கோபமடைந்த நான் அதை மண்டையில் அடித்துவிட்டேன். நான் செய்தது தவறுதான். பிரபு! இதற்காகத் தாங்கள் என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்கத் தயாராக இருக்கிறேன்" என்று சொல்லி தலைவணங்கி நின்றான்.

உடனே ஸ்ரீராமர் சபையில் வீற்றிருந்த வசிஷ்டரிடம், "முனிவரே! செய்த குற்றத்தை ஒப்புக்கொண்ட இந்தப் பிரம்மசாரிக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?" என்று வினவினார்.

அதற்கு வசிஷ்டர், "பிரபு! இதற்கு தாங்களே நியாயம் வழங்க பிரார்த்திக்கிறோம்!" என்றார்.

இதற்குள் ஸ்ரீராமரும் ஏதோ யோசித்துக் கொண்டிருந்தபோதே வழக்குத் தொடுத்த அந்த நாயானது ஸ்ரீராமரிடம், "பிரபு! ஒரு சிறு வேண்டுகோள்; இந்த வழக்கில் அந்தப் பிரம்மசாரிக்கு ஒரு கோவிலை நிர்வாகம் செய்யும் அதிகாரத்தை தண்டனையாக அளிக்கும்படி வேண்டுகிறேன்!" என்று கூறியது.

நாய் கூறியதைக் கேட்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்.

உடனே ஸ்ரீராமரும் அடிபட்ட அந்த நாய் கூறியபடியே அந்த பிரம்மசாரிக்கு ஒரு கோவிலை நிர்வாகம் செய்யும் அதிகாரம் வழங்கும்படி உத்தரவிட்டார்.

ஒரு சாதார்ண நாய் கேட்டபடியே ஸ்ரீராமரும் அதே தண்டனையை பிரம்மசாரிக்கு அளித்தது பற்றி அங்கிருந்தவர்கள் மேலும் வியப்படைந்தார்கள்.

ஸ்ரீராமர் தீர்ப்பு வழங்கியதுமே அந்த பிரம்மசாரி சகல விருதுகளுடன் ஒரு கோவிலின் நிர்வாக அதிகாரியாக பல்லக்கில் பட்டணப் பிரவேசம் செய்யப் புறப்பட்டான்.

ஊரில் பொறாமைக்காரர்கள் சிலர், பிரம்மசாரிக்கு கிடைத்த மிகவும் உயர்ந்த பதவியைப் பற்றி ஏளனமாகப் பேசி வெம்பினார்கள்.

"குற்றம் சாட்டப்பட்டு விசாரணைக்காக வந்த குற்றவாளிக்கு இப்படிப்பட்ட உயர்ந்த பதவியையா தருவது? இது என்ன அநியாயம்?" என்று சிலர் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

அவர்களில் சிலர் ஸ்ரீராமரிடமே நேரில் கூட்டமாகச் சென்று, "பிரபு! குற்றவாளியே தான் செய்தது தவறுதான் என்று ஒப்புக்கொண்டான்; அதற்கேற்ற தண்டனையை அளிக்கும் படியும் கேட்டான். இந்த நிலையில் அவனுக்குத் தாங்களோ ஓர் அற்பப் பிராணி நாய் கூறியபடியே உயர்ந்த பதவியைத் தருவது நியாயமா? தர்மமா?" என்று பல பக்கங்களிலிருந்தும் கேட்டார்கள்.

"இதற்கு ஸ்ரீராமர் என்னதான் பதில் சொல்லப் போகிறார்? பார்ப்போமே!" என்று மிக்க மமதையோடு அவர்கள் இருந்தார்கள்.

இதற்கு ஸ்ரீராமர் பதில் சொல்வதற்குள் முதலில் அவரிடம் புகார் கொடுத்த அதே நாய் ஓடிவந்து, "பிரபு! வந்தவர்கள் தங்களிடம் முறையிட்ட புகாரை நானும் கேட்டேன். இதற்குத் தாங்கள் பதில் கூறுவதற்கு முன்பு இதற்கும் நானே எனக்குத் தெரிந்த பதிலைச் சொல்ல விரும்புகிறேன். அனுமதி தருவீர்களா?" என்று கேட்டது.

ஸ்ரீராமரும் புன்னகை தவழ தலை அசைத்து நாய்க்கு அனுமதி வழங்கினார். நாய் சபையோர்களை வணங்கிவிட்டு பேச ஆரம்பித்தது.

"சபையோர்களே! முற்பிறவியில் நானும் உயர்ந்த குலத்தில் பிறந்து சகல சாஸ்திரங்களையும் பயின்றேன். சாஸ்திரங்கள் கூறும்வழியில் சரியாக நடந்து வந்ததால், ஒரு கோவில் நிர்வாகத்தை பயபக்தியோடும், நேர்மையோடும் நடத்திவந்தேன்.

ஒரு சமயம் கோவில் நிர்வாகத்தில் எனக்குத் தெரியாமல் ஒரு சிறு அபசாரம் நடந்துவிட்டது. அதன் காரணமாகவே நான் இந்தப் பிறவியில் ஒரு நாயாகப் பிறந்து, இப்போது தண்டனையை அனுபவிக்கிறேன். ஆனால் நான் அப்போதே அந்தக் கோவில் நிர்வாகத்தில் மிகுந்த கவனம் செலுத்தியிருந்தால் நான் மிகவும் உன்னத நிலையை அடைந்திருப்பேன். அதில் தவறிவிட்டேன்.

ராமராஜ்யத்தில் தவறு செய்பவர்களே கிடையாது. ஒருவேளை தப்பித் தவறி எவரேனும் எப்போதாவது பிழை செய்துவிட்டாலும்கூட, மனச்சாட்சிக்கு பயந்து தாங்கள் செய்த தவற்றை ஒப்புக்கொண்டு அதற்குத் தண்டனை பெறவும் தயாராக இருப்பார்கள்.

"என்னால் குற்றம் சாட்டப்பட்ட இந்த பிரம்மசாரி இப்போது தனக்குக் கிடைத்த அதிகாரத்தை மிகவும் நேர்மையோடு பயன்படுத்தி உலக நன்மைக்குப் பாடுபடுவான்.

பிரம்மசரிய விரதத்துடன் உஞ்சவிருத்தியெடுத்து, தான் எடுத்திருக்கும் பிறவியைச் சீராகக் கடைப்பிடிக்கும் இவன் இனி அடையப் போகும் பலன்களை என்னால் அளவிட்டுச் சொல்லமுடியாது.

உலகில் எடுத்த பிறவியைத் தூய்மைப்படுத்தும் வழி இறைவனைத் தொழுவதே! ஆலய நிர்வாகம் நேர்மையுடன் நடந்தால்த்தான் நாடும், மக்களும் செழிப்பாக இருப்பார்கள். அதனால்த்தான் இந்த பிரம்மசாரிக்கு கோவிலை நிர்வாகம் செய்யும் பொறுப்பைத் தண்டனையாகத் தரும்படி கேட்டுக்கொண்டேன்" என்று கூறியது.

ஸ்ரீ ராமபிரான் புன்சிரிப்புடன் அந்த நாயையும், பிரம்மசாரியையும் ஆசீர்வதித்துக் கொண்டே, "நீங்கள் வந்த காரியம் முடிந்து விட்டதா?" என்று வினாவினார்.

அந்த நாயும் பிரம்மசாரியும், "ஹே பிரபு! உலக மக்களுக்கு நீதி புகட்டுவதற்காகவே தேவர்களாகிய நாங்கள் இருவரும் இந்த உருவத்தில் உங்களிடம் வந்தோம். இனி நாங்கள் கோவில் காரியங்கள் நேர்மையுடன் நடக்கிறதா என்பதை அறியச் செல்கிறோம். எங்களை ஆசீர்வதித்து அனுப்புங்கள்!" என்று கூறியதும் ஸ்ரீ ராமபிரானும் அவர்களை ஆசீர்வதித்தார்.


உடனே நாயும் பிரம்மசாரியும் இரண்டு கீரிப்பிள்ளைகளாக உருமாறி அந்த அரண்மனையை விட்டு வேகமாக வெளியேறி மறைந்தார்கள்.

இந்தக் காட்சியைப் பார்த்த அங்கிருந்த அனைவரும் வியப்போடு ஸ்ரீ ராமரை வணங்கினார்கள்.

இது ஒரு கர்ண பரம்பரைக் கதையாகும்.

(ஆதாரம்: 'சுதேசமித்திரன் வார இதழ், அக்டோபர்- 1886)

# மணிவிழாக் கண்ட பெருந்தகை



திரு ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள் தான் வாழும் காலத்தில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் அதிபராகவும், தென்மராட்சி ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளராகவும் கடமை யாற்றி நன் மாணவர்களை உருவாக்கியதோடு அவர்களின் சமூக வாழ்வியலையும் நெறிப் படுத்திய ஓர் ஆசிரியராவார்.

தனக்கென வகுத்த கடமைகளில் இருந்து தவறாமல் எமது ஆச்சிரம செயற்பாடு களுக்கும், ஞானச்சுடர் சஞ்சிகை வெளியீட்டிற் கும் தன்னாலான பங்களிப்பை நல்கும் பெரும் பண்பாளன். இவரைக் கௌரவிக்கும் முக மாக நடைபெற்ற விழாவினை ஏற்பாடு செய்த கல்வியாளர் சமூகத்தோடு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை யினரும் சந்நிதி வேலவனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

சண்டையிடும்போது சத்தியம் அடிபட்டுப்போகிறது.

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| வி. தில்லையம்பலம் | இணுவில் | 5000. 00 |
| வேலுப்பிள்ளையம்மா ஞாபகார்த்தமாக தவமணிதேவி | மட்டக்களப்பு | 1000. 00 |
| தம்பிராசா சரஸ்வதி ஞாபகார்த்தமாக சிவனேஸ்வரி | மட்டக்களப்பு | 500. 00 |
| சி. சிவகாந்தன் | கொழும்பு- 6 | 1000. 00 |
| திருமதி சந்திரப்பிரகாசம் ஆத்தியடி | பருத்தித்துறை (மருத்துவ பணிக்காக) | 10000. 00 |
| இளையதம்பி நினைவாக துரைசிங்கம் (இளை. G.S) | ஆவரங்கால் | 2000. 00 |
| க. நடேசன் (தெணியான்) | கரணவாய் வடக்கு வல்வெட்டித்துறை | 2000. 00 |
| திருமதி பா. இந்துமதி | கரணவாய் தெற்கு 1மூடை அரிசி | 1000. 00 |
| ஏ. தில்லையம்பலம் | கரணவாய் தெற்கு | 1000. 00 |
| அபிராமி தங்கேஸ்வரன் | கொழும்பு | 2500. 00 |
| வைஸ்ணவி நகைப்பூங்கா | நெல்லியடி | 1000. 00 |
| சி. கிருபாகரன் | அச்சுவேலி (லண்டன்) | 10000. 00 |
| நா. சிவசிதம்பரம் | கொக்குவில் கிழக்கு | 4000. 00 |
| சந்திரப்பிரகாசம் ராகவேந்தன் | பருத்தித்துறை (கல்விப்பணிக்காக) | 3000. 00 |
| கு. ரத்தினேஸ்வரி | மானிப்பாய் | 2000. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| கந்தசாமி வேங்கை | கொழும்பு- 6 | 10000. 00 |
| N. பரமலிங்கம் | கல்வியங்காடு | 5000. 00 |
| சி. சகுந்தலாதேவி | மல்லாகம் | 500. 00 |
| அ. அம்மாப்பிள்ளை | சிறுப்பிட்டி | 1000. 00 |
| க. வைரமுத்து | புளியம்பொக்கனை | 2000. 00 |
| வே. ஐயம்பெருமாள் | வவுனியா | 2000. 00 |
| சுகிர்தலிங்கம் சிவலிங்கம் | பருத்தித்துறை | 10000. 00 |
| V. குமரகுரு | வவுனியா | 1000. 00 |
| மு. சுதாகரக்குருக்கள் | ஸ்ரேசன்ரோட் சுன்னாகம் | 2000. 00 |
| திரு செல்வரத்தினம் குடும்பம் | சுன்னாகம் | 1000. 00 |
| திரு நாகேஸ்வரன் | தம்பாலை | 1000. 00 |
| தேவராஜா ராஜகுமாரன் | கரணவாய் | 5000. 00 |
| இளையகுட்டி நவநீதராசா | நாவலடி | 10000. 00 |

நேர்மையானவர்களிடம்தான் அதிக பணிவு இருக்கும்.

| | | |
|---|---|---|
| திரு சண்முகம் | அவுஸ்திரேலியா | 36556. 00 |
| வைதேகி சிவகுமார்<br>மிதுலா சிவகுமார் | நெல்லியடி | 5000. 00 |
| வீ. பத்மசீலன் | கனடா | 10000. 00 |
| வீரசிங்கம் சிவகுமார் | அச்சுவேலி | 5000. 00 |
| ஸ்ரீதரன் அபிலஷா | பிரான்ஸ் | 10000. 00 |
| தில்லைநாயகம் ஜான்சிராணி | ஏழாலை | 2040. 00 |
| செ. சோமசுந்தரம் J.P ஊடாக டாலினி பௌவ்விகா | கனடா | 10000. 00 |
| வர்ஷினி | கனடா | 10000. 00 |
| செ. அரியானந்தம் | தாவடி | 1000. 00 |
| செ. சூரியகுமார் | இன்பர்சிட்டி | 1000. 00 |
| ஜெயகணேசா ஸ்ரோர்ஸ் | பருத்தித்துறை | 1மூடை சீனி |
| ஈசன் கிஷானி<br>ஈசன் பிரவீனா | சண்டிலிப்பாய் | 5000. 00 |
| இ. பராசக்தி | அச்சுவேலி | 6000. 00 |
| திருமதி ரஞ்சினிதேவி | ஜேர்மன் | 17780. 00 |
| திரு பரணிரூபன் குடும்பம் பிறவுண்றோட் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| அ. குலேந்திரன் | கனடா | 24000. 00 |
| சுகிதா கிருஷ்ணமேனன் வளலாய் | அச்சுவேலி | 50000. 00 |
| சி. தணிகாசலம் | பத்தமேனி | 1000. 00 |
| சற்குணராஜா கலைச்செல்வி | நோர்வே | 4000. 00 |
| து. நடராசா | கனடா | 5000. 00 |
| வசந்தரூபி குலசேகரம் | கனடா | 5000. 00 |
| S. திருமாவளவன் | நல்லூர் | 6000. 00 |
| கந்தசாமி பூரணம் | புலோலி தெற்கு | 5000. 00 |
| திரு குணேஸ்வரன் | சுன்னாகம் தெற்கு | 2மூடை அரிசி |
| திரு துளசிதாசன் குடும்பம் | துன்னாலை | 10000. 00 |

(தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **நவம்பர்** | 03 | **ஐப்பசி** | 17 | ஞாயிறு | **மெய்கண்டதேவர்** |
| **நவம்பர்** | 05 | **ஐப்பசி** | 19 | செவ்வாய் | **பூசலார்** |
| **நவம்பர்** | 07 | **ஐப்பசி** | 21 | வியாழன் | **ஐயடிகள் காடவர்கோன்** |
| **நவம்பர்** | 15 | **ஐப்பசி** | 29 | வெள்ளி | **திருமூலர்** |
| **நவம்பர்** | 24 | **கார்த்.** | 08 | ஞாயிறு | **ஆறுமுகநாவலர்** |
| **நவம்பர்** | 27 | **கார்த்.** | 11 | புதன் | **மெய்ப்பொருள் நாயனார்** |

முட்டாள்களின் முடிவே அவநம்பிக்கை.

# படங்கள் தரும் பதிவுகள்



அறுபத்துமூவர் குருபூசை நிகழ்வுகள்




பிரமம் ஒன்றே உண்மையானது.



சிறப்புப்பிரதி பெறுதல்




அளவுகடந்த பற்று மாயை எனப்படும்.



சிறப்புப்பிரதி பெற்றவர்களில் சிலர்



மதுவும் மாதுவும் தீமையின் அடிப்படை.



சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டுவரும் சமூகப் பணிகளின் வரிசையில், கெருடாவில் இ.த.க. பாடசாலை மாணவர்களின் வசதிக்காக ஒரு தொகைப் பணம் வழங்கப்படுவதை மேற்படத்திலும், முதியோர் தினத்தை முன்னிட்டு மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கு உடுபுடவை பொதி வழங்கப்படுவதைக் கீழ்ப்படத்திலும் காணலாம்.



தியானம் என்பது ஆத்ம நிஷ்டையே.

# “காளமேகம்” பாடல்கள் (தொடர்ச்சி...)



**குறமகளை மணந்தான்:**

முருகப்பெருமான் குறக்குலக் கொடியான வள்ளியை மணந்தான் அல்லவா! அதனால், பலரும் வருத்தம் அடைந்தார்கள் என்று சொல்வது போலக் கடவுளரின் தன்மைகளை அமைத்துப் பாடிய செய்யுள் இது.

மருகிருக்கும் வேளூரின் வயித்திமகன் குறமகளை
-மணந்தானென்றே
உருகியர னஞ்சுண்டா னுமையவளுந் தவம்புரிந்தா
-ளுயர்மான்மேனி
கருகிமிக மண்டிற்றான் கமலன்முக நாலானான்
-கடவுளோர்கள்
இருவிழியு மிமையாம லிரவுபக லுறங்காம லிருக்கின்றாரே

மருக்கொழுந்து போன்ற வாசனைச் செடிகளுடன் விளங்குகின்ற புள்ளிருக்கு வேளூரிடத்தே கோயில் கொண்டிருக்கும் வைத்தீஸ்வரனின் திருமகன், குறவனின் மகளைச் சென்று மணந்து கொண்டான். அதனை அறிந்ததும், அவன் தகப்பனான வைத்தியநாதன் நஞ்சைக் குடித்துவிட்டான். தாயாகிய உமையோ தவஞ்செய்யலானாள். உயர்ந்த மாமனான திருமாலோ தன்திருமேனி கருநிறம்பெற வருந்திப் பெரிதும் மண்ணைத் தின்னத் தொடங்கினான். பிரம்மனோ முகத்தைத் தொங்கவிட்டவனானான். மற்றைய கடவுள்களோ கண்கள் இமையாதவராகி இரவுபகல் கவலையுற்று உறங்காமல் இருக்கிறார்கள்.

இப்படி உறவினர்கள் தம்முயிரை மாய்த்துக்கொள்ளக் கருதினார்கள் என்பது அவர்களின் சிறப்புக்களாதலையும் உய்த்தறிக.

**எப்படி வந்தது?**

காளமேகம், அண்ணாமலையின் அருணாசலப் பெருமானை வழிபட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது சிறுத்தொண்டர் கதை அவர் நினைவிலே எழுந்தது. சிறுத்தொண்டர் தம் மகனையே அறுத்துச் சமைத்துப் பரிமாறி நின்றபோது, பெருமான் “சீராளா” என்று அழைக்க, அவன் ஓடிவந்து நின்றதையும் நினைத்துக் கொண்டார். “எப்படி வரமுடியும்” என்று கேட்பதுபோல, அந்தத் திருவிளையாடலைப் போற்றுகிறார்.

சட்டியிலே பாதியந்தச் சட்டுவத்தி லேபாதி
இட்டகலத் திற்பாதி இட்டிருக்கத் - திட்டமுடன்
ஆடவந்த சோணேசர் அன்றழைத்த போதுபிள்ளை
ஓடிவந்த தெவ்வா றுரை?

சிவனடியாராக வந்த இச்சிவபெருமானுக்குச் சிறுத்தொண்டர் படைத்த பிள்ளைக் கறியானது, சட்டியிலே பாதி- சட்டியிற் பாதியாயும்; அச் சட்டுவத்திலே பாதி- அந்தச்

மனிதனின் குற்றங்கள் நாவிலிருந்தே பிறக்கின்றது.

சட்டியிலிருக்கும் சட்டுவத்திலே ஒரு பாதியாகவும்; இட்டகலத்தில் பாதியிட்டிருக்க- படைத்த உண்கலத்திலே இன்னொரு பாதியாகவும் இட்டிருக்கவும்; திட்டமுடன் ஆடவந்த சோணேசர்- உறுதியுடன் திருவிளையாடல் நிகழ்த்தவே வந்திருந்த அந்தச் சோணேசரான சிவபெருமான்; அன்று அழைத்தபோது பிள்ளை ஓடி வந்தது எவ்வாறு உரை- அன்று அறுக்கப்பட்ட பிள்ளையை "வருக" என்று அழைத்தபோது, அந்தப் பிள்ளையும் ஓடி வந்தது எவ்வாறு? அதனை எமக்கும் சொல்லுவாயாக!

**ஆலங்குடியான்:**

"ஆலங்குடி" ஒரு சிவத்தலம். இந்தத் தலத்துப் பெருமானை "ஆலங்குடியான்" என்பார்கள். அது, "நஞ்சை உண்ணாதவன்" என்றும் பொருள் தரும் அல்லவா! அதனை வைத்துப் பாடுகிறார் கவிஞர்.

ஆலங் குடியானை யாலால முண்டானை
ஆலங் குடியானென் றார்சொன்னார் - ஆலங்
குடியானே யாயிற் குவலயத்தோ ரெல்லாம்
மடியாரோ மண்மீதி லே.

திருவாலங்குடியிலே திருக்கோயில் கொண்டிருக்கின்ற எம்பெருமானை, ஆலகால நஞ்சினை உண்ட அருளாளனை, நஞ்சினைக் குடியாதவன் என்று சொன்னவர்கள் யார்? அவன் அன்று அந்த ஆலகால விஷத்தைக் குடியாதிருந்தான் என்றால், உலகத்தாரெல்லாம் மண்மேல் மடிந்து வீழ்ந்திருக்க மாட்டார்களோ?

"ஆலங்குடி" என்ற சொல் முதலில் ஆலங்குடி என்ற ஊரினையும், "ஆலங்குடியான்" என அடுத்து வருவது நஞ்சினை உண்ணாதவன் என்பதனையும், "ஆலங்குடியானேயாயின்" என்பது நஞ்சினை உண்ணாதிருந்தானேயாயின் என அவன் உலகுக்கு அருளிய கருணைச் சிறப்பையும் காட்டுதல் காண்க.

**ஊர் காணார்....**

அந்த நாளிலே, சிவபெருமான் பாற்கடலிலே எழுந்த நஞ்சினை உண்டு உலகினைக் காத்தனர். அவர் நஞ்சினை உண்ணாமல் இருந்திருந்தால் என்ன நிகழ்ந்திருக்கும்? இதற்கு விடை கூறுகிறார் கவிஞர்.

கடுக்கை முடியானே காலைமுடித் தான்போற்
கடுக்கைமுடி யானாகிற் காணார் - கடுக்கை
உரலடிமீ துற்றானும் உம்பர்களும் மற்றும்
உரலடிமீ துற்றானும் ஊர்.

கொன்றையைத் திருமுடியிலே அணிந்துள்ள சிவபெருமானே முன் காலனை உதைத்து அழித்தான். அதுபோலவே, அவனே நஞ்சினையும் குடித்தான். அப்படி அவன் குடியானாகில், வேதனும், வெள்ளை யானையின்மீது அமர்வோனான இந்திரனும், தேவர்களும், மற்றும் உரலிலே கட்டுண்டு மத்தினாலே அடிபட்ட திருமாலும் ஆகிய இவர்கள் யாவருமே தங்கள் தங்கள் ஊரைச் சென்று காணமுடியாதவராகி அழிந்திருப்பார்களே!

தன் அன்பனைக் காத்தற்பொருட்டாக எமனை உதைத்த பெருமானே, மீளவும் தேவரைக் காக்கும் பொருட்டாக நஞ்சினையும் உண்டான் என்க. இதனால் அவனே முத்தேவரிற் சிறந்தவன் என்பதும் அறிக.

**ஏன் எரித்தீர்?**

திருவிடை மருதூர்ச் சிவபெருமானைக் குறித்துப் பாடியது இது. பெருமான் மன்மதனை எரித்த செயலைக் குறித்து நிந்திப்பதுபோல அமைந்தது.

கண்ண னிடுங்கரியும் காட்டுசிறுத் தொண்டரன்பிற்
பண்ணுசிறு வன்கறியும் பற்றாதோ - தண்ணோடு
மட்டியையுஞ் சோலை மருதீச ரேபன்றிக்
குட்டியையேன் தீய்த்தீர் குறித்து!

தண்மையுடனே தேனும் பொருந்தியிருக்கும் சோலையினையுடைய மருதூரிற் கோயில் கொண்டிருக்கும் பெருமானே! காட்டிடத்தே கண்ணப்ப நாயனார் படைத்த ஊன்கறியும், சிறுத்தொண்டர் அன்பினாலே செய்தளித்த சிறுவனுடைய கறியும் உமக்குப் போதாதோ? நீ பன்றிக் குட்டியையும் ஏனய்யா சுட்டீர்?

"பன்றிக்குட்டிக் கறிக்கு ஆசைப்பட்டு நீர் ஏனய்யா சுடுகிறீர்" என்று கேட்பதுபோலப் பெருமானைக் கேட்கிறார் கவிஞர். "பன்றி" என்றது பன்றியவதாரம் எடுத்த திருமாலையும், "பன்றிக்குட்டி" என்றது மால் மருகனான மன்மதனையும், "தீய்த்தீர்" என்பது மன்மதனை எரித்ததையும் குறிப்பதாம்.

**பொய்யிலா மெய்யர்;**

திருத்துருத்திப் பெருமானைத் தரிசிக்கச் சென்ற கவிஞர், பெருமானின் ஆபரணமாகிய பாம்பினைக் குறிப்பிட்டு இவ்வாறு பாடுகிறார்.

காலையிலும் வேலை கடையக் கயிறாகும்
மாலையிலும் பூமுடித்து வாழுமே - சோலைசெறி
செய்யிலா ரம்பயிலும் செந்துருத்தி மாநகர்வாழ்
பொய்யில்லா மெய்யரிடும் பூண்.

சோலைகள் செறிந்துள்ள வயல்களிடத்தே முத்துக்கள் விளைகின்ற "செந்துருத்தி" என்னும் இப்பெரிய திருநகரிடத்தே கோயில் கொண்டிருக்கும் பொய்யில்லா மெய்யராகிய பெருமான் அணிந்து கொண்டிருக்கும் ஆபரணமும் ஓர் ஆபரணமாமோ? அது காற்றையே உண்ணும். பாற்கடலைக் கடைவதற்கு மத்துக் கயிறாகவும் விளங்கும். திருமால் உண்ணுகின்ற உலகத்தினை முடிமேற் சுமந்தும் அது வாழ்ந்திருக்கின்றதாகுமோ?

கால் + அயில்= காலையிலும்= காற்றை உண்ணும். வேலை- கடல். மால் + அயிலும் = மாலையிலும்; பூ + முடித்து= பூமுடித்து, பூ - பூமி; முடித்து- முடி மேலாகக் கொண்டது, பொய்யில்லா மெய்யர்- நித்தியமான மெய்த் திருமேனியை உடையவர் சிவபிரான்.

(தொடரும்...

# ஊழ்வினை ஒழிய

செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள்

"என் செயலால் ஆவது யாதொன்றுமில்லை பிறப்பதற்கு
முன் செய்த தீவினைதான் இங்ஙனம் வந்தது"

இது பட்டினத்தடிகளின் புலம்பல். முன்செய்த வினையை பழவினை, ஊழ்வினை, பிராரத்துவ வினை எனச் சொல்வர். நடக்கும்போது நமது நிழல் எம்மைத் தொடர்ந்து வருவதுபோல் நாம் செய்த கர்ம வினைகளும் பிறவிகள் தோறும் தொடர்ந்து வரும்.

ஆன்மாவை அநாதியாகவே மும்மலங்களும் (ஆணவம், கன்மம், மாயை) பற்றியுள்ளன. ஆன்மா ஐம்புலன்களின் வழிச்சென்று மாயையுள் மயங்கி கன்மங்களைச் (நல்வினை, தீவினை) செய்கின்றது. நாம் வாழும் உடம்பு கள்ளப்புலக்குரம்பை. அது நல்வினை, தீவினை இரண்டையும் செய்யும். ஊழ்வினை நாம் முற்பிறவியில் தேடிய சம்பாத்தியம். அது இப்பிறவிக்கு வித்து. வித்து மரமாகி காயாகி பழமாகி பின் வித்தாகிறது. அதேபோன்று வினைகளும் பிறவிகளும் தொடர்கின்றன. பிராரத்துவம், ஆகாமியம், சஞ்சிதமென வினைகள் மூன்று. பிராரத்துவம் முன்பு செய்தவை. ஆகாமியம் முற்பிறவியில் அனுபவித்ததில் எஞ்சியதும் இப்பிறவியில் செய்வதும் அடங்கும். இப்பிறவியில் செய்தவற்றுள் எஞ்சியுள்ள சஞ்சிதம் மறுபிறவியிலும் தொடரும். வினைப்பயன் முடியும்வரை பிறவிகள் தொடர்ந்து வரும். பிறவி ஒரு பெருங்கடல்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவனடி சேரா தார்"

வினைகள் நல்லதாயின் நல்லபிறப்புக் கிட்டும். தீவினையாயின் பிறவி தொடரும். "தாம் தாம் செய்த வினையைத் தாமே அனுபவிப்பர். ஔவையார் சொல்கிறார்.

"புண்ணியமாம் பாவம்போம் போனநாள் செய்தஅவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள் - எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை எச்சமயத்தோர் சொல்லும்
தீதொழிய நன்மை செயல்"

"தீங்குவந் தடையுமாறும் நன்மைதான் சேருமாறும்
தாங்கள் செய் வினையினாலே தத்தமக்காகும் - அல்லால்
ஆங்கவை பிறரால் வாரா அமுதம்நஞ் சிரண்டினுக்கும்
ஓங்கிய சுவையின் பேதம் உதவினார் சிலருமுண்டோ"

எனக் கந்தபுராணம் சொல்கிறது.

இவ்வுலகில் நாம் நாலுவகையான மனிதர்களைக் காண்கிறோம். ஒருவன் சகல சம்பத்துடன் மனைவி, மக்கள் சுற்றத்துடன் தான தருமங்கள் செய்து சுகபோக வாழ்வு வாழ்கிறான். சிலர் வசதியற்றவர்களாயிருந்தும் அன்றாடத் தேவைகள் யார்மூலமேனும் கிடைக்கப்பெற்று கவலையின்றி வாழ்கிறார்கள். யாவும் சிவன் செயல் முட்ட முட்ட பஞ்சமே ஆனாலும் யாவும் பாரம் அவனுக்கே என்ற எண்ணம் அவர்களுக்கு. மூன்றாவது வகையினர்

தானம் என்பது பிரதிபலன் கருதாத கொடை.

அன்றாட கஞ்சிக்கு வழியில்லை; இருக்க வீடில்லை; மனைவி மக்கள் ஆதரவில்லை யாசகம் செய்தோ, கூலிவேலை செய்தோ கூழ் கஞ்சியென்றோ சாப்பிட்டு படுத்தெழும்பு கின்றனர். நாலாம் வகையினரிடம் நிறையப் பணம் கையிருப்பிலும் வங்கியிலும்; கும்பியில் தேங்காய்; கூடையில் நெல்; பெட்டியில் புடவை; உண்பதுமில்லை; உடுப்பதும் இல்லை; ஏழைக் கென்று ஈவதுமில்லை; பாடுபட்டுத் தேடியவைகளை தான் அனுபவியாமல் யாரையோ அனுபவிக்கவிட்டு மரணிக்கின்றான். ஏன்? அவரவர் பூர்வத்தில் செய்துகொண்ட கர்மவினைப் பயனே.

அன்னசத்திரம், ஆதுலர்க்குச்சாலை, ஆலயம் அமைத்தல், கோவில்பூசை முட்டின்றி நடக்கச் செய்தல், அந்தணர் ஓம்புதல், பசித்தோர்க்கு அன்னமிடல், பசுவுக்கு புல்லும் தண்ணீரும் தரல், ஊர்நடுவே கிணறு குளம் தோண்டல், ஏழைச் சிறுவர்க்கு கல்வியை ஊக்குவித்தல், கன்னிப் பெண்களை வாழ வைத்தல் இவை போன்றவை புண்ணிய செயல்கள்.

மனதில் அன்பு, ஈவு, இரக்கம் அற்றவன் ஏழைகட்கு இரங்கான்; பஞ்சமா பாதகங்கள் செய்ய அஞ்சான், பிறன் மனையாளை பெண்டாள விரும்புவான். கன்னியரின் கற்பைச் சூறையாடல், வஞ்சகமாக பிறர்பொருளை அபகரித்தல், பெற்றோர், பெரியோர், குருவை நிந்தித்தல், சிவனையும் சிவசின்னங்களையும் இகழ்தல் யாவும் பாவகாரியங்களே. இன்று நம் நாட்டில் நடப்பவை என்ன? சிந்திப்போம்.

சுகபோக வாழ்வு, சுவர்க்கம்; கஷ்டங்கள், துன்ப துயரங்கள் நரகவாழ்வு; அவரவர் வினைப்பயனுக்கு ஏற்றவாறு பிறவிகள் தொடரும். ஒரு பிறவியிலிருந்து மறுபிறவிக்கு போகும்போதுதான் செய்த வினைப்பயனைத் தவிர வேறு எதையும் எடுத்துப்போவதில்லை.

அத்தமும் வாழ்வும் அகத்துமட்டில் விழி யம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே; விம்மி விம்மியிரு
கைத்தல மேல்வைத் தழுமைந் தரும்சுடு காடுமட்டே
பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே.'

செல்வம், செல்வத்தாலான வாழ்க்கை, மனைவி, அன்பு ஆசைகாட்டி வளர்த்த பிள்ளைகள் யாவரும் சுடுகாட்டளவில் நின்றுவிட உயிர் தான் செய்த பாவ வினைகளுடன் இயமனைப் பின்தொடரும். வினைகட்கு ஏற்ப பிறவிகள் தொடரும். எல்லாப் பிறப்பும் பிறந்து முடிய இளைப்பு உண்டாகும். "மீட்டிங்கு வந்து வினைப்பிறவி அடையாமல் வீடுபேறடையும். இனி, இந்த ஊழ்வினை ஒழிய நாம் என்ன செய்ய வேண்டும்? நம்மிடமுள்ள கெட்ட குணங்களை நீக்குவோம். கெட்ட குணங்கள் எவை?

| | | | |
|---|---|---|---|
| காமம் - | பற்று, பாசம், மோகம் | மாத்சர்யம்- | மனதில் பொறாமை (பகைக்கு வித்து) |
| குரோதம்- | கோபம் | டம்பம்- | வீண்பெருமை |
| லோபம் - | பேராசை | அகந்தை- | நான் என்ற அகங்காரம் |
| மதம் - | வெறி | முக்குணங்கள்- | சாத்வீகம், தாமஸம், இராஜதம். |


சாத்வீகம்- விருப்பு வெறுப்பின்றி கர்மம் செய்தல், தாமஸம்- அற்பபுத்தி. இராஜதம்- அகங்காரத்தோடு செய்யும் கர்மம். இவை அகல உண்மைப் பொருளை மூடிநிற்கும் அஞ்ஞானம் அகலும். கடவுளை அறியும் பேறறிவு உண்டாகும். மனம் தெளிவடையும். பிறர் வருந்தும்படியான செயல்களைச் செய்யாது. ஆகவே ஊழ்வினைகள் ஒழிய வேண்டுமாயின் மனதை இறை தியானம், குரு உபதேசம், சத்சங்கம், கூட்டுப்பிரார்த்தனை, உபந்நியாசங்களைப் பின்பற்றவேண்டும்.

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

திரு கவிமணி அன்னைதாசன் அவர்கள்

சித்திரவேலாயுத புட்கரணி தீர்த்தத்தில் கை கால் அலம்ப நாம் புறப்பட்ட வேளை, "அங்கே நீராடுவதற்காக ஒதுக்கப்பட்ட பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இறங்காதீர்கள். இங்கே முதலைகளின் நடமாட்டம் அதிகமுள்ளது" என ஒரு அடியவர் விடுத்த எச்சரிக்கை நம்மை அதிரவைத்தது. புதிய இடம்; ஒரே இருட்டு; நீராட ஒதுக்கப்பட்ட சரியான இடம் எது என்பதைக் கண்டுபிடிக்க முடியாத நிலைமை; ஆகிய இத்தனையும் சேர்ந்து நம்மைப்



பயமுறுத்தியது. "உந்த இருட்டுக்கை பேசாமல் இருங்கோ" என்று சிலர் முணுமுணுப்பதும் நம் காதில் விழுகிறது. நாம் வந்தநேரம் பார்த்தா மின்னொளி மறைந்து போகவேண்டும்? இப்படியென்றால் ஒரு ஜெனரேட்டரையே ஒழுங்குபடுத்தி வைத்திருக்கலாமே" என அவசரப் பேர்வழிகள் தமக்கே உரிய பாணியில் செய்யும் விமர்சனங்களும் நம் காதுகளில் வந்து விழுகின்றன.

கதிர்காம யாத்திரை ஆரம்பிக்க நாள் குறிக்கு முன்னரே, அடியவர்களின் வசதி கருதி பல முன்னேற்பாடுகளை ஆச்சிரமத்து சுவாமிகள் செய்து முடித்திருந்த விடயம்

குற்றத்தை மறைத்தல் கோழைத்தனம்.

பலருக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை. அந்தவகையில் வெருகல் சித்திர வேலாயுத சுவாமி திருக்கோவிலிலேயே இரவு தங்கக்கூடிய வகையில் இரவு உணவும், தங்குமிட வசதியும் செய்யப்பட்டிருந்தன.

கோவில் நிர்வாக சபையைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர் திரு அ. குகராசா அவர்களும் அவரது துணைவியாரும், இன்னொரு செயற்குழு உறுப்பினரான இராசரெத்தினம் சச்சிதானந்தம் குடும்பத்தினரும் எமது வருகையை எதிர்பார்த்து ஆலய சூழலில் காத்திருந்தனர். அன்பாக வரவேற்ற அவர்களுடன் ஆச்சிரம சுவாமிகள் உரையாடிக் கொண்டிருந்தார். திரு குகராசாவும் துணைவியாரும் தம் கைகளில் வைத்திருந்த தற்காலிக வெளிச்சம் சுவாமிகளுடனான உரையாடல்களுக்கும், ஏனைய அடியவர்களுக்கும் பேருதவியாக இருந்தது.

நான் தேவையில்லாமல் எதிலுந் தலையிடும் பழக்கம் இல்லாததனால் அவர்களது உரையாடலில் மூக்கை நுழைக்க விரும்பவில்லை. சற்றுத் தள்ளியே இருந்தேன். சிறு சிறு கூட்டங்களாகக் கூடியிருந்தவர்களின் விமர்சனங்கள், "என்னதான் படித்துப் பட்டம் பெற்றிருந்தாலும் இன்றும் மனிதம் வளரவில்லை" என்பது சில மனிதரின் செயற்பாடுகளில் இருந்து என்னால் உணரமுடிந்தது.

"எம்மால் முடிந்தவரை ஒழுங்குகளைச் செய்துள்ளோம். அதோ! முருகன் ஆலயம்; இதுதான் நீங்கள் தங்கவேண்டிய இடம்" என ஒவ்வொன்றையும் மிகுந்த அக்கறையுடன் நமக்குத் தெளிவு படுத்தினர் அந்தத் தம்பதியினர். இதற்கிடையில் சிலர் தங்கள் தங்கள் கரங்களில் உள்ள Pentorch, Cell Torch, Torch ஆகியவற்றின் உதவியுடன் நடமாடினர். சிலர் ஏற்கனவே நான் குறிப்பிட்டபடி ஆற்றங்கரைக்கும் சென்றிருந்தனர். சொற்ப நேரத்தில் மின் விளக்குகள் ஒளிர்ந்தன. அந்த மின்னொளியில் முருகன் திருக்கோவிலோடு கூடிய அற்புதமான ஆற்றங்கரை இயற்கையழகு கண்ணுக்குத் தெரிந்தது.

மலைநாட்டில் உதித்து ஓடிவரும் மகாவலிகங்கை, இந்த சித்திர வேலாயுதனின் திருவூரான வெருகல் அருகாகவே ஓடி திருமலைக் கடலில் சங்கமிக்கிறது. "அடியார்களே! வெளிச்சம் வந்துவிட்டது. கை, கால்கள் அலம்பி விட்டு வாருங்கள். அதோ! கம்பி வலைகள் போடப்பட்ட பாதுகாப்புப் பகுதி தெளிவாகத் தெரிகிறது. இனி முதலைகள் பயம் வேண்டாம். அதோ! அந்த மண்டபத்திற்கு வாருங்கள்" என ஓர் அன்புக்கட்டளை பிறந்தது.


ஆம்! அப்பொழுதுதான் அவரைப் பார்த்தேன். எடுப்பான தோற்றம், வயதின் முதிர்ச்சி, பெரிய பதவி; இருந்தும் அவர் ஓடியாடிப் பணிகள் செய்து கொண்டிருந்தமை பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. நான் மெல்ல அந்தப் பெரியவரை அணுகி "ஐயா தாங்கள்.... ஆம் ஐயா, நான் இப்பகுதிக் கல்வி வலயத்தில் ஆசிரிய ஆலோசகராக இருந்து இளைப்பாறியவன். இப்போது முருகனுக்குப் பணிசெய்யும் வாய்ப்பைப் பெற்றுள்ளேன். இவர் என் துணைவியார். இருவரும் சமூகசேவை உத்தியோகத்தர். அவர் இப்போதும் பணியில் உள்ளார்.

"எமது வீடு ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. அங்கு இன்னும் முழுமையாக மக்கள் வந்து சேரவில்லை. முருகன் மின் ஒளியினை நிறுத்தியதுதான் சற்றே நெருடலாக உள்ளது. சுவாமிகள் வேண்டுகோளுக்கு இணங்க ஏதோ முடிந்தவரை ஏற்பாடுகளைச்

செய்துள்ளோம். குறைகள் இருந்தால்.....” எனக் கூறி முடித்தார் திரு குகராசா. “ஐயா! உங்கள் பணியின் பாங்கினை நாம் நன்கு உணருகிறோம். நானும் ஓர் ஓய்வுநிலை அதிபர்தான். எம்மில் எத்தனை பேருக்கு இத்தகைய வாய்ப்புகள் கிட்டுகின்றது. உங்கள் சேவையின் பெருமையை உணர்த்தவே மின் ஒளியை நிறுத்தி முருகன் திருவிளையாடல் புரிந்திருக்கிறான்” எனக் கூறியபடி கை, கால் அலம்ப நானும் ஆற்றங்கரை சென்றேன்.

ஒருவாறு அனைவரும் சுவாமி தரிசனத்திற்கு ஆயத்தமாகி, ஆலய முகப்பிற்குச் செல்ல இரவு 9.00 மணியாகிவிட்டது. கற்பூர தீபமேற்றி வழிபட்டு வெளியே வந்தோம். அனைவரும் களைப்புத்தீர அருமையான தேநீர் வழங்கப்பட்டது. இரவு 9.30க்கு தாமரை இலையில் பிட்டும், அசல் சோயாமீற் கலந்த சாம்பார் குழம்பும் தயிரும் இரவுணவாக வழங்கப்பட்டது. அந்தக் கல்வி அதிகாரியும் துணைவியாரும் அவரது உறவினர்களும் சூழநின்று பரிமாறிய இரவு உணவின் சுவை சொல்லவே தேவையில்லை; அருமையாக இருந்தது. வழமையாக 8.00 மணிக்கே இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொள்ளும் எம்போன்றவர்களுக்கு இரவு உணவு 9.30க்கு கிடைத்த போதும் அது தேவாமிர்தம் போலிருந்ததால் அனைவரும் ஒரு பிடி பிடித்தனர். எந்தக் குறைவுமில்லாமல் “போதும் போதும்” எனும் அளவிற்கு உணவும் உபசரிப்பும் இருந்தது. உபசரித்தபின் அனைவருக்கும் பந்திப்பாய், பாய், பெட்சீற் என்பன வழங்கப்பட்டன. பெண்கள் ஒருபுறமாகவும், வயோதிபர் ஒரு புறமாகவும், இளம்பெண்கள் ஒரு புறமாகவும் தமது படுக்கைகளைத் தயார் செய்து கொண்டிருந்தனர். இளம்பெண்கள் படுத்திருந்த பக்கத்தில் இருந்து நீண்ட நேரம் பேச்சொலி கேட்டுக்கொண்டிருந்ததையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஆனால்....

(தொடரும்...



(தொடர்ச்சி...

# சைவத் திருக்கோயிற் கிரியைநெறி

உயர்திரு கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள்

## காமியக் கிரியைகள்

வழிபாடு நிஷ்காமியமாக அமைவதே சிறப்பு. பலனெதையும் அவாவாது கடமையுணர்ச்சியுடன் செய்யப்படும் வழிபாடு நிஷ்காமிய வழிபாடு ஆகும். பலனை அவாவியே ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நிகழ்த்துவது மானிடரான எமது இயல்பு. உயர்நிலை எய்திய ஒரு சிலர் மட்டுமே செய்பவற்றைப் பலன் கருதாது செய்பவர்கள். எனவே பலன் அவாவிக் கிரியைகள் நிகழ்த்தும் பெரும்பாலோர்க்கு உரியவாறும் கிரியைகளை ஆகமங்கள் விதித்துள்ளன. இது கிரியை விளக்கத்தின் இறுதியில் அவைதரும் பலன்களை ஆகமங் கூறுவதிலிருந்து நாம் உணர முடிகிறது. பல நிலைப்பட்ட மக்களுக்கு அவரவர் நிலைக்கேற்ப வழிகாட்டும் உகந்த நூல்களல்லவா ஆகமங்கள்.

கிணறு தோண்டுதல், குளம் வெட்டுதல், தேவாலயங்களைக் கட்டுவித்தல், அன்னதானம் செய்தல் முதலிய நற்செயல்கள் பெரும்பலனை அளிக்கும் என நூல்கள் கூறுகின்றன. தேவர்களுக்கு அவிசொரிந்து வீரர்களான மக்களையும், பசுக்களையும், பெருஞ் செல்வத்தினையும் பலனாக எதிர்பார்த்து வேட்கும் சூழ்நிலை வேதகாலம் முதல் விளங்கக் காண்கிறோம். ஆகமங்களிலேயும் கிரியைகளை விரித்துக் கூறுமிடங்கள் பலவற்றில் கிரியைகள் அடைப்பிக்கும் பலவித பயன்கள் ஈற்றில் கூறப்பட்டுள்ளன.

நித்தியக் கிரியைகளும், நைமித்திகக் கிரியைகளும் இவ்வாறு பலனை அவாவிச் செய்யின் காமியக் கிரியைகளாகும். குறிக்கோளைக் கொண்டு நித்தியார்ச்சனை செய்வித்தல் காமியத்தின் பாற்படும் நித்தியக் கிரியையாகும். விசேட தினங்களில் இவ்வாறு நிகழ்த்தும் அருச்சனையும் காமியத்தின் பாற்படும் நைமித்திகமாகும். இவ்வாறு நூல்கள் வகுத்துக் கூறாவிடத்தும் இவ்வுண்மையினை நாம் ஊகித்தறிய முடிகிறது. அலங்காரம், நிவேதனம், தீபாராதனை, உற்சவம் ஆகிய கிரியைகள் அனைத்தும் பலனை அவாவிச் செய்யப்படுகின்ற கிரியைகளாகவும் அமையலாம். இவற்றுள் ஸ்நபனாபிஷேகம், அஷ்டத்தரசதகலசாபிஷேகம், சஹஸ்ரகலசாபிஷேகம், உருத்திராபிஷேகம், சங்காபிஷேகம் முதலிய அபிஷேகங்களும், விசேட திருவிழாக்களும் குறிப்பிடத்தக்கன.

குறிக்கோளொன்றினை மனதிற் கொண்டு, அது நிறைவேறும்வரை காத்திருந்து, அது நிறைவேறியதும் முன்னரே சங்கற்பித்துக் கொண்டவாறு தாம் கருதிய அபிஷேகம், திருவிழா முதலியவற்றைச் செய்விக்கும் வழக்கம் நம் நாட்டில் பெரிதும் பயின்று வருகின்றது.

கிரியைகளை பலனை நோக்கமாகக் கொண்டு செய்யுமிடத்தும், நாம் அவனருளாலே அவன்தாள் வணங்கும் தன்மையினர் என்பதனை நன்குணர்ந்து, கிரியைகளை நிகழ்த்தி முடிக்கும்போது நாம் பெறவிருக்கும் பலன்களனைத்தையும் சிவார்ப்பணமாக அவனிடம் சமர்ப்பித்தல் எமக்குப் பெரும் மனச்சாந்தியையும் பேருய்வையும் அடைவிக்கும்.

கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

## பூர்வாங்கக் கிரியைகள்

பெருங் கிரியைகளின் உறுப்புக்களாகப் பெரும்பாலும் அவற்றின் தொடக்கத்தில் இடம்பெறுஞ் சிறுகிரியைகள் சில உள. இவை அடிக்கடி நிகழ்வதனால் இவற்றைப் பற்றிச் சிறிது அறிதல் அவசியம். இவை முன்னர் கூறப்பட்ட நித்தியக் கிரியைகளிலும், இனிக் கூறவிருக்கும் கிரியைகளிலும் குறிப்பிடப்பட்டிருப்பது நோக்கற்பாலது. இவற்றைப் பற்றிய சுருக்கமான விபரங்கள் பின்வருமாறு.

**சங்கற்பம்:**

இது பெருங் கிரியைகளுக்குத் தொடக்கமான உறுப்பாக விளங்குவது. தர்ப்பையாலமைந்த பவித்திரத்தை வலது கை மோதிர விரலில் தரித்து, அமர்ந்திருக்கும் ஆசனம் தர்ப்பையால் அமையாதிருப்பின் தர்ப்பைகளை ஆசனமாகக் காலின்கீழ் இட்டு, சில தர்ப்பைகளை வேறாக எடுத்து அதே மோதிர விரலில் மடித்து, கைக்கு வெளியே இருக்குமாறு வைத்து, வலது தொடையின்மீது விரித்து வைக்கப்பட்ட இடக்கையின்மேல் மூடியிருக்கும் வலது கையை தர்ப்பை வெளியே இருக்கும்வண்ணம் வைத்து, நிகழ்த்த இருக்கும் கிரியையினைக் குறிப்பிட்டு "இதனை நிறைவேற்றப் போகிறேன்" எனச் செவ்வனே நினைந்து மனதில் உறுதிகொள்ளும் கிரியையாகும். இவ்வாறு உள்ளத்தில் நினைந்து உறுதிப்படுத்தும் வேளை தொடக்கத்தில் கணேசனை நினைந்து உரிய மந்திரங் கூறித் தலையிற் குட்டித் தியானித்துச் சங்கற்பிப்பது முறையாகும். இறைவனருளை முன்னிட்டு இன்ன இடத்தில், இன்ன வேளையில் இன்ன நோக்குடன் இன்ன கிரியை நிகழ்த்தப் போகின்றேன் எனக் கிரியை நிகழும் இடம், வருஷம், மாதம், திகதி, கிழமை, நக்ஷத்திரம், யோகம், கரணம், இலக்கினம் முதலியவற்றைக் கூறும் வகையாக சங்கற்பம் எப்போதும் அமைந்திருக்கும்.

**விக்கிநேசுவர பூசை:**

சந்தனத்தினாலும், கூர்ச்சத்திலாயினும், அல்லது மஞ்சளாலோ, கோமயத்தினாலோ பிடித்துருவாக்கப்பட்ட பிள்ளையார் உருவத்திலாயினும் விக்கிநேசுவரனை உரிய மந்திரம் கூறி ஆவாகித்து ஆசனம், பாத்தியம், அர்க்கியம், ஆசமநீயம், வஸ்திரம், பூணூல், சந்தனம் முதலிய உபசாரங்களைக் கொடுத்து அவர் திருநாமங்களைக் கூறி மலர்களால் அருச்சித்து சாவதானமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மஞ்சள் பூசிய தேங்காயைக் கையிலெடுத்து "இடையூறு அகல வேண்டும்" எனச் சிவன் மைந்தனை இரந்து வேண்டி இரு நேர் பாதிகளாகப் பிளந்து உடைத்தல் வேண்டும். "விக்கிநேசுவரனே, பெருந்தலைவனே, உலகில் உள்ளோர் அனைவராலும் ஏத்தி வழிபடப்படுபவரே, என்னால் தொடங்கப்பட்டுள்ள இக்காரியம் இடையூறு நிகழாது இனிதே நிறைவேறும் வண்ணம் தங்களைப் பிரார்த்திக்கிறேன்" என வழிபடுதல் இப்பூசையின் இறுதியானதும் முக்கியமானதுமான அம்சமாகும். வைதிகக் கிரியைகளில் விக்கிநேசுவரனை ஆவாகித்துப் பூசித்த பின்னரே சங்கற்பம் மூலமாகத் தம் விருப்பத்தைக் குறிப்பிட்டுத் தெரிவிப்பர். சங்கற்பம் முடிந்ததும் விநாயகரைப் போகவிடுப்பர்.

**புண்ணியாகவாசனம்:**

தண்டிலம் கற்பித்து, கும்பம் ஒன்று வைத்து, அதில் வருணனை ஆவாகித்து, ஆசனம் முதல் அருச்சனை ஈறாக உபசாரங்கள் நிகழ்த்தி, பழங்களையும் தாம்பூலத்தையும் நிவேதித்து, கற்பூர நீராஞ்சனம் செய்தபின் புண்ணியாக ஜபத்திற்காக இருத்துவிக்குகளை நியமித்து, புண்ணியாக ஜெபம் நிகழ்த்தி, வருணா கும்பத்தை அபிமந்தரித்து, புண்ணியாக ஜெபம் நிறைவேறியதும் வருணனை அங்கிருந்து போகும்படி விடுத்து கும்பநீரினால் பெருங் கிரியை நிகழும் இடங்கள் எங்ஙணும் புரோக்ஷித்தல் வேண்டும். இது திரவியசுத்தி, தவசுத்தி முதலிய பல சுத்திகளை நிகழ்த்துவிக்கும் கிரியையாகும்.

**பஞ்சகவ்யபூசை:**

தண்டிலத்தில் ஒன்பது பதங்கள் கீறி நடுவில் உள்ள சிவதத்துவகோஷ்டத்தை அருச்சித்து, அதில் சுப்பிரதிஷ்டபாத்திரத்தில் பாலையும், கிழக்கில் உள்ள சதாசிவதத்துவ கோஷ்டத்தை அருச்சித்து சுசாந்த பாத்திரத்தில் தயிரையும், தெற்கில் வித்யாதத்துவ கோஷ்டத்தில் தேஜோவத் பாத்திரத்தில் நெய்யையும், வடக்கில் புருஷதத்துவ கோஷ்டத்தில் ரத்நோதக பாத்திரத்தில் கோமூத்திரத்தையும், ஈசானத்தில் பிரகிருதிதத்துவ கோஷ்டத்தில் அவ்யக்த பாத்திரத்தில் தர்ப்பை தோய்ந்த நீராகிய குசோதகத்தையும் உரிய மந்திரங்களால் நிரப்பி, அருச்சித்து, எல்லாவற்றையும் கோமயம் முதலாகக் குசோதகம்வரை படிப்படியாகச் சேர்த்து ஒன்றாக்குதல் வேண்டும்.

அக்கினியில் பிருதுவிதத்துவ கோஷ்டத்தில் வியக்தபாத்திரத்தில் அரிசிமாவையும், நிருருதியில் அப்தத்துவ கோஷ்டத்தில் சூர்யபாத்திரத்தில் நெல்லிமாவையும், வாயுதிக்கில் வாயுதத்துவ கோஷ்டத்தில் அவ்யக்த பாத்திரத்தில் மஞ்சள் மாவையும் உரிய மந்திரங்களால் நிரப்பி அருச்சித்தலும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு நிகழும் பஞ்சகவ்ய பூசை அபிஷேகத்துக்கு உரிய அங்கமாக இது விளங்குவதைக் காட்டும்.

**பஞ்சாமிருதபூசை:**

ஒன்பது கோஷ்டங்கள் வகுத்து அதில் பாத்திரங்களை வைத்து, அருச்சித்து நடுவில் தேனையும், தெற்கில் தயிரையும், வடக்கில் சர்க்கரையையும், மேற்கில் நெய்யையும், ஈசானத்தில் கந்தோதகத்தினையும், அக்கினிதிக்கில் வாழைப்பழத்தையும், தெற்கில் பலாப்பழத்தையும், வாயு திக்கில் மாம்பழத்தையும் உரிய மந்திரங்கள் கூறி நிரப்பி அருச்சித்தல் வேண்டும். இங்கு இரசபஞ்சாமிருதம், பழபஞ்சாமிருதம் ஆகிய இரண்டும் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் ஒன்றினை மட்டுங் கொள்ளும் மரபும் உண்டு.

**கண்டாபூசை:**

கண்டா என்பது மணி எனப் பொருள்படும். கோவில்களில் பெரியமணி, சிறுமணி, கொத்துமணி முதலிய பலவகை மணிகள் அவ்வவற்றிற்குரிய காலங்களில் அடிக்கப்படும். கிரியை நிகழும்வேளை மணிக்குச் செய்யப்படும் பூசை இன்றியமையாதது. மணிஓசை

கிரியை நிகழும் இடத்திற்குத் தேவர்களை அழைத்து வருவது. மணி இனியநாதம் வாய்க்கப் பெற்று அமைதல் அவசியம். இடையூறுகளை அகற்றும் ஆற்றல் மணி ஓசைக்கு உண்டு என நூல்கள் கூறுகின்றன.

மணியை சந்தனம், அக்ஷதை, மாலை முதலியவற்றால் அலங்கரித்து மலர்களால் அருச்சித்து உரிய மந்திரங்கூறி மும்முறை அடிப்பது கண்டாபூசையின் முக்கிய அம்சமாகும். "தேவர்களின் வருகைக்காகவும், அரக்கர்கள் இங்கிருந்து அகன்று ஓடுவதற்காகவும் மணியை அடிக்கிறேன்" என்ற வேண்டுகோளுடன் கண்டாபூசையின் பொழுது மணி ஒலிக்கப்படுகின்றது.

(தொடரும்...

# மணிமணியாகப் பாடிவைத்த மாணிக்கவாசகர்



கல்வி கேள்வியில் சிறந்து விளங்கினார்
கற்றவர் பலரும் பாராட் டினார்கள்
நல்ல புலமை கண்ட வேந்தன்
நாடித் தமது அமைச்சர் ஆக்கினான்
எல்லை இல்லா இறைவனில் அன்பு
எதிலும் நாட்டம் இன்றி வாழ்ந்தார்
தில்லைச் சிவனின் நினைப்பே யன்றிச்
செய்யும் செயலோ எதுவும் இல்லை

குதிரைகள் வாங்கச் சென்ற அடிகள்
குருவைக் கண்டு ஞானம் பெற்றார்
சதியென அரசன் சினந்து கொண்டு
சடுதி யாக ஓலை அனுப்பினான்
பதிலுக் காக சிவனும் குறித்த
பரிகள் வருமென நாளும் குறித்தார்
குதிரைகள் வந்து சேர்ந்தன அன்று
கூடி நரிகள் ஆயின அந்தோ

- வ. யோகானந்தசிவம் -

நாவலர் பக்கம்: (தொடர்ச்சி...

# சைவ சமய வினா விடை

-ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் -

## ௯. சிவலிங்கவியல்

201. சிவலிங்கம் எத்தனை வகைப்படும்?

பரார்த்த லிங்கம், இட்ட லிங்கம் என இருவகைப்படும்.

202. பரார்த்த லிங்கமாவது யாது?

சிவபெருமான் சங்கார காலம் வரையும் சாந்நித்தியராய் இருந்து ஆன்மாக்களுக்கு அநுக்கிரகிக்கும் போது அது இலிங்கமாம். இது, தாவரலிங்கம் எனவும் பெயர் பெறும். சாந்நித்யம் அண்மை, அடுத்தல், வெளிப்படுத்தல். தாவரம் எனினும், ஸ்திரம் எனினும், நிலையியற் பொருள் எனினும் பொருந்தும்.

203. பரார்த்த லிங்கம் எத்தனை வகைப்படும்?

சுயம்புலிங்கம், காண லிங்கம், தைவிக லிங்கம், ஆரிட லிங்கம், மானுட லிங்கம் என ஐவகைப்படும். இவைகளுள்ளே, சுயம்பு லிங்கம் தானே தோன்றியது. காண லிங்கம் விநாயகர், சுப்பிரமணியர் முதலிய கணர்களாலே தாபிக்கப்பட்டது. தைவித லிங்கம் விட்டுணு முதலிய தேவர்களாலே தாபிக்கப்பட்டது. ஆரிட லிங்கம் இருடிகளால் தாபிக்கப்பட்டது. மானுட லிங்கம் மனிதரால் தாபிக்கப்பட்டது.

204. இவ்வகை இலிங்கங்களும் ஏற்றக்குறைவு உடையனவா?

ஆம்; மானுட லிங்கத்தின் உயர்ந்தது ஆரிடர் இலிங்கம்; அதனின் உயர்ந்தது தைவிக லிங்கம்; அதனின் உயர்ந்தது காண லிங்கம்; அதனின் உயர்ந்தது சுயம்பு லிங்கம்.

205. பரார்த்த லிங்கப் பிரதிட்டை, பரார்த்த பூஜை, உற்சவம் முதலியவை செய்தற்கு அதிகாரிகள் யாவர்?

ஆதி சைவர்களுக்குள்ளே, சமய தீக்ஷை, விசேஷதீக்ஷை, நிருவாணதீக்ஷை, ஆசாரியா அபிஷேகம் என்னும் நான்கும் பெற்றவர்களாய்ச் சைவாகமங்களிலே மகாபாண்டித்திய முடையவர்களாய் உள்ளவர்கள்.

206. திருக்கோயிலுள் இருக்கும் சிவலிங்கம் முதலிய திருமேனிகள் எல்லாராலும் வழிபடற்பாலனவா?

ஆம்; சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கத்தாராலும் வழிபடற்பாலனவே ஆகும்; ஆயினும், அவ்வழிபாடு அவரவர் கருத்து வகையால் வேறுபடும்; அவருக்குச் சிவபெருமான் அருள் செய்யும் முறைமையும் வேறுபடும்.

207. சிவலிங்கம் முதலிய திருமேனிகளைச் சரியையாளர்கள் எக்கருத்துப் பற்றி வழிபடுவார்கள்? அவர்களுக்குச் சிவபெருமான் எப்படி நின்று அருள் செய்வர்?

சரியையாளர்கள் பகுத்தறிதல் இல்லாது சிவலிங்கம் முதலிய சிவமெனக் கண்டு வழிபடுவார்கள்; அவர்களுக்குச் சிவபெருமான் அங்கே வெளிப்படாது நின்று அருள் செய்வர்.

208. கிரியையாளர்கள் எக்கருத்துப் பற்றி வழிபடுவார்கள்? அவர்களுக்குச் சிவபெருமான் எப்படி நின்று அருள் செய்வர்?

கிரியையாளர்கள் அருவப் பொருளாகிய சிவபிரான் ஈசானம் முதலிய மந்திரங்களினாலே சிவலிங்க முதலிய திருவுருக்கொண்டார் என்று தெளிந்து, மந்திர நியாசத்தினால் வழிபடுவார்கள்; அவர்களுக்குச் சிவபெருமான், கடைந்தபொழுது தோன்றும் அக்கினிபோல, அவ்வவ் மந்திரங்களினாலும் அவ்வவர் விரும்பிய வடிவமாய், அவ்வத் திருமேனிகளில் அவ்வப்பொழுது தோன்றி நின்று, அருள் செய்வர்.

209. யோகிகள் எக்கருத்துப் பற்றி வழிபடுவார்கள்?

யோகிகள், தம் இருதயமெங்கும் இருக்கும் சிவபெருமான் இந்தத் திருமேனியிலும் இருந்து பூசை கொண்டருளுவர் என்று தெளிந்து, சாத்திய மந்திரங்களினால் வழிபடுவார்கள். அவர்களுக்குச் சிவபெருமான், கறந்தபொழுது தோன்றும் பால்போல, அந்தந்த மந்திரங்களினால் அவ்வவர் விரும்பிய வடிவமாய், அவ்வத் திருமேனிகளில் அவ்வப்பொழுது தோன்றி நின்று அருள் செய்வர்.

210. ஞானிகள் எக்கருத்து பற்றி வழிபடுவார்கள்? அவர்களுக்குச் சிவபெருமான் எப்படி நின்று அருள் செய்வார்?

ஞானிகள் மேலே சொல்லப்பட்ட முத்திறத்தாரும்போல ஓரிடமாகக் குறியாது, அன்பு மந்திரத்தால் அங்கே வழிபடுவார்கள். அவர்களுக்குச் சிவபெருமான், கன்றை நினைந்த தலையீற்றுப் பசுவின் முலைப்பால் போலக் கருணை மிகுதியால் அவ்வன்பே தாமாகி, எப்பொழுதும் வெளிப்பட்டு நின்று அங்கே அருள் செய்வர்.

211. சிவபெருமானுடைய திருவுருவம் சிவசக்தி வடிவம் என்று முன் சொல்லப்பட்டது அன்றோ: இங்கே அவர் திருவுருவம் மந்திர வடிவம் என்றது என்னை?

சிவபெருமானுக்கு வாச்சிய மந்திரமாகிய சிவசத்தியே உண்மை வடிவம்; அச்சிவசத்தி, கரியினிடத்தே அக்கினிபோல வாசக மந்திரத்தினிடத்தே நின்று சாதகருக்குப் பயன் கொடுக்கும். ஆதலினாலே, சிவபெருமானுக்குச் சிவசத்தியினால், வாசக மந்திரத்தோடு சம்பந்தம் உண்டு. அச்சம்பந்தம் பற்றி வாசக மந்திரம் சிவபெருமானுக்கு உபசார வடிவமாம்.

212. மந்திர நியாசம் என்றது என்ன?

வாச்சிய மந்திரங்களாகிய சிவசத்தி பேதங்களை உள்ளத்திலே சிந்தித்து, அவைகளை அறிவிக்கும் வாசக மந்திரங்களை உபசரித்துச் சிவபெருமானுக்கு உபசார வடிவத்தை அம்மந்திரங்களினாலே சிரமுதலாக அமைத்தலாம். (நியாசித்தல்- வைத்தல், பதித்தல்)

(தொடரும்...

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# சிக்கல்

—வல்வையூர் அப்பாண்ணா—

**"சிக்கல்" பெயர் வந்த கதை:**

விண்ணுலகில் வாழும் காமதேனு எனும் தெய்வப்பசு, விண்ணும் மண்ணும் கடுமையான பஞ்சத்தைச் சந்திக்க நேர்ந்தபோது, பசி தாங்கமுடியாமல் ஒருமுறை மாமிசம் புசிக்க நேர்ந்தது. இதனால், இறைவன் காமதேனுவைப் புலியாகும்படி சாபமிட்டார். பயந்து நடுநடுங்கிய காமதேனு சாபவிமோசனம் கேட்டு இரந்து நின்றது. மல்லிகாரண்யமாக விளங்கும் (மல்லிகைக் காடாக) சிக்கல் வனத்திலே போய் தவமிருக்குமாறு இறைவன் பணித்தான். சிக்கல் வனத்திலே நீங்கா இறைபக்தியுடன் மூழ்கித் தேய்ந்து நின்ற காரணத்தால் அதன் புலி உருவம் மாறிப் பழையபடி காமதேனுவாக சிக்கல் வனத்தில் சுற்றித் திரிந்தது. நாளடைவில் அங்கே ஒரு சிவலிங்கம் இருக்கக் கண்டு, லிங்கத்தின்மீது தினமும் பால் சொரிந்து அபிஷேகித்து வந்தது. லிங்கத்தின்மீது சொரியப்பட்ட பால் வழிந்தோடி ஒரு குளமாகத் தேங்கி, நாளடைவில் அக்குளம் பசுவெண்ணெய்க் குளமாகக் காட்சி தந்தது. காமதேனுவைத் தேடி வந்த வசிட்டர் காமதேனுவையும் கண்டதுடன், வெண்ணெய்க் குளத்து வெண்ணெய்யைத் திரட்டி லிங்கமாக்கி சிவபூசையையும் முடித்துக் கொண்டார். பூசை முடிந்ததும் ஏனைய பூசைப் பொருட்களுடன் லிங்கத்தையும் இடம் மாற்ற எண்ணிய வசிட்டரின் கைகளில் வெண்ணெய் லிங்கம் அகப்படாமல் அப்படியே பூமியில் சிக்கிக் கொண்டதால். இந்த இடம் "சிக்கல்" என்றாயிற்று. இந்த விபரக் குறிப்பு மிகத் தெளிவாக பெரியதொரு விளம்பரப் பலகையில் எழுதப்பட்டுள்ளது.

**வெண்ணெய்ப்பிரான்:**

சிக்கல்பிரான் மூலவர் "நவநீதேஸ்வரர்". மூலவரின் மறுபெயர் "வெண்ணெய்ப்பிரான்". திருஞானசம்பந்தர் சிக்கல்மீது பாடிய பதினொரு பாடல்கள் கொண்ட பதிகத்தில் ஒவ்வொரு பாடலிலும் "வெண்ணெய் பிரான்" என்று குறிப்பிட்டதுடன், மூன்றாவது பாடலில் இறைவி பெயரையும் சேர்த்திருப்பதிலிருந்து வெண்ணெய்ப்பிரானின் பெருமையும் சிக்கல் கோவிலின் முக்கியத்துவமும் புரிகிறது.

நீல நெய்தல் நில விம்மலருஞ்சுனை நீடிய
சேலுமா லுங்கழனிவ்வளம் மல்கிய சிக்கலுள்
வேல வெண் கண்ணியினாளை யொர்பாகன் வெண்ணெய்ப்பிரான்
பால வண்ணன் கழ லேத்த நம் பாவம் மறையுமே.

-சம்பந்தர்-

தியாகத்திலும் பார்க்க பணிவு மிகவும் பெரியது.

அருணகிரிநாதர் இத்தலத்து முருகப்பெருமானாகிய சிங்காரவேலவர்மீது இரண்டு திருப்புகழ் பாடியுள்ளார். ஒரு திருப்புகழின் ஈற்றடியை இங்கே தந்திருக்கிறேன்.

"..................................

செம்மனத்தர் மிகுந்த மாதவர்

நன்மை பெற்ற உளத்திலே மலர்

செல்வ சிக்கல் நகர்க்குள் மேவிய பெருமாளே"

### கோச்செங்கட் சோழன்:

சிலந்தி + யானை= சிவலிங்க பூசை கதை அனைவரும் அறிந்ததே. திருச்சி திருவானைக்கா கோவிலின் பிரதான கோபுர வாசலின் உள்ளே சுதைச் சிற்பமாக இந்தக் கதை தெளிவாக்கப்பட்டுள்ளது. சிலந்தியானது மறுபிறவியில் கோச்செங்கட் சோழனாகப் பிறந்தபோதிலும் பூர்வ ஜென்மத்தில் யானையோடு இருந்த பகையுணர்ச்சி குறையாமல் மறு ஜென்மத்திலும் தொடர்ந்ததால், யானை எளிதில் கோவிலினுள் நுழையாதவாறு தான் கட்டுவித்த எழுபது கோவில்களையும் அமைத்தான். இந்த வகையில் அந்தக் கோவில்கள் படியேறும் மாடக் கோவில்களாகவோ (உ.ம்: திருநல்லூர்), அல்லது இறங்கு படிகளுடன் கருவறையின் வாசல் சிறியதாக- பக்கவாட்டாக அமைந்ததாகவோ (உ.ம்: திருவானைக்கா) இருப்பதைக் காணலாம். சிக்கல் திருக்கோவிலும் கோச்செங்கட் சோழனால் கட்டப்பட்ட மாடக் கோவிலேயாகும்.

### சிக்கலின் பெருமையும் தொன்மையும்:

மேற்குறித்த தரவுகளுடன் இதனை அவதானியுங்கள்.

1. கோச்செங்கட் சோழன் நான்காம் நூற்றாண்டினன் என்று கருதப்படுகிறது.
2. திருஞானசம்பந்தர் ஏழாம் நூற்றாண்டினர் என்று கருதப்படுகிறது.
3. அருணகிரிநாதர் பதினைந்தாம் நூற்றாண்டினர் என்று கருதப்படுகிறது.

ஆகவே, கோச்செங்கட் சோழன் எழுப்பிய சிக்கல் மாடக்கோவில், திருஞானசம்பந்தர், அருணகிரிநாதர் ஆகிய இருவராலும் (பல நூற்றாண்டு இடைப்பட்ட) வெவ்வேறு காலங்களில் பாடப்பெற்ற ஸ்தலமாகவும் இருத்தலினால் இக்கோயிலின் தொன்மையும் பெருமையும் இன்றும் அப்படியே புதுப்பொலிவுடன் விளங்குவதைக் கண்டு இன்புறலாம்.

### அமைவிடம்:

திருவாரூர் நாகபட்டினம் சாலையில், வேளாங்கண்ணிக்கு பிரிகின்ற சந்திப்புக்கு 5 கி.மீ முன்பாக நமது வலது கைப்புறமாக வீதி ஓரத்திலேயே வரும் "சிக்கல் சிங்கார வேலன் சந்நிதி" என்று எழுதப்பட்ட வளைவினூடாக உள்ளே போகிறோம். அழகிய ஏழு நிலைக் கோபுர வாசலுடன் தொடர்பான வடக்கு+ கிழக்கு+ தெற்கு மூன்று பக்க வீதிகளும் நீண்ட மண்டபங்களாகக் காணப்படுவதனால் கோபுரத்தின் கொள்ளை அழகு கண்ணுக்குத் தெரியவில்லை. கோபுர வாசலில் வலதும் இடதுமாக அமர்ந்திருக்கும் கணபதியையும் பழனி ஆண்டவரையும் வணங்கி அனுமதிபெற்று உள்ளே நுழைகிறோம்.

**உட்பிரகாரம்:**

சிக்கல் கோவில் இரண்டு பிரகாரங்களைக் கொண்டது. ஒன்று மாடக் கோவிலைச் சுற்றியுள்ள பிரகாரம். மற்றையது: வழமையான பரிவார மூர்த்தங்களை தரிசித்துவரும் பிரகாரம். எமது வசதிக்காக முதலாவதை மேற்பிரகாரம் என்றும், மற்றையதை உட்பிரகாரம் என்றழைப்போம். கோபுரவாசல் தாண்டி உள்ளே வந்ததும் நேராக மைய மண்டபத்தினுள் காலை வைக்கிறோம். இடது கைப்புறமாக சூரியனும் வலது கைப்புறமாக சந்திரனும் சிறிய சந்நிதிகளில் உள்ளனர். உட்பிரகாரத் தென்சுற்றில் அறுபத்துமூவரும் ஒரே வரிசையில் உள்ளனர். இம்மூர்த்தங்கள் அறுபத்து மூன்றினதும் குருபூசை தினங்களுடன் அவரவர்கள் வாழ்ந்த நூற்றாண்டுகளும் குறிக்கப்பட்டிருந்தமை ஒரு சிறப்பான அம்சமாகத் தெரிந்தது. இந்தத் தென்பிரகாரத்தின் மேல்விதானத்தினை நிமிர்ந்து பார்த்தால் முருகன் திருவிளை யாடல்கள் அனைத்தையும் அழகிய ஓவியமாக வரைந்துள்ளார்கள். நிமிர்ந்தபடியே முழுவதையும் பார்த்து முடிக்க கழுத்து வலிக்கிறது.

இந்த உட்பிரகாரத்தின் தென் சுற்றிலேயே தனித் தனிச் சந்நிதியில் காக வாகனத்தில் சனி பகவானும், அழகிய திருக்கோலத்தில் தெட்சணாமூர்த்தியும் அமர்ந்து அருள்பாலிக் கின்றனர். காமதேனு, வசிட்டர் உள்ளிட்ட சப்தரிசிகள் இறைவனைப் பூசித்து நிற்கும் புடைச் சிற்பம் ஒன்று சனிபகவானுக்கும் அருகே உள்ள ஸ்தல விருட்சமான மல்லிகைக்கும் இடையே அழகாகக் காட்சி தருகிறது. தென்மேற்கு மூலையில் உள்ள தனிச் சந்நிதியில் உள்ளேயும், வெளியேயுமாக இரு விநாயகர்கள் உள்ளனர். வடமேற்கு மூலையில் மகாலெட்சுமி சந்நிதி உண்டு. வடக்குச் சுற்றில் (கட்டு மலையின் கீழ்ப்பகுதியில்) துர்க்கை அமர்ந்துள்ளார். அருகிலேயே வழமையான இடத்தில் சண்டிகேஸ்வரர் சந்நிதி உள்ளது. வடகிழக்கு மூலையில் பைரவரும், அதற்கு முன்பாக சற்றுத்தள்ளி நவக்கிரகங்களும் காணப்படுகின்றன. பைரவருக்கு அருகிலேயே வேல்நெடுங்கண்ணி அம்பாள் சந்நிதி காணப்படுகிறது.

**வேல்நெடுங்கண்ணி:**

இத்தலத்திற்குப் பெருமை சேர்க்கும் தேவியின் சந்நிதி வட உட்பிரகாரத்தில் இருக்கிறது. தேவியின் திருப்பெயர் "சத்தியதாட்சி" என்பது. அம்பிகையின் கண்கள் வேலை ஒத்த கூர்மைகொண்ட நீண்ட கண்களாக இருத்தலினால் அம்பிகை "வேல்நெடுங்கண்ணி" எனப் பெயர்பெற்று விளங்குகிறாள். அம்பிகைக்கு நான்கு கரங்கள். வலது திருக்கரங்களில் மேற்கரம் ஜெபமாலை கொண்டும் கீழ்க்கரம் அபயஹஸ்தமாகவும் உள்ளது. இடது திருக்கரங்களில் மேற்கரத்தில் தாமரை மலரும், மற்றையது தொடையில் அமர்ந்தபடியும் உள்ளது. இப்பெருமாட்டியேதான் தன் இளைய குமாரன் சிங்காரவேலனுக்கு ஞானசக்தி வேலினைக் கொடுத்து அசுரர்களை அழிக்க அனுப்பி வைத்தவள்.

தாயின் அரவணைப்பில் இருக்கும் சேய்போல அருள்மிகு பாலசிங்காரவேலவர் அம்பாள் சந்நிதியில் உட்திருவாயிலின் வலப்புறமாகவும், சுக்கிரவார அம்பாளின் எழுந்தருளும் மூர்த்தம் இடப்புறமாகவும் உள்ளன.

**மாடக்கோயில்:**

உட்பிரகார வலத்தினை நிறைவு செய்து மீண்டும் "மைய மண்டபம்" வந்து, இரண்டு வரிசைகளில் உள்ள நந்தி - பலிபீடம் - தம்பம் ஆகியவற்றைச் சுற்றி மாடக் கோவிலுக்குப் படியேறும் (12 படிகள்) படிக்கட்டருகே, ஒரு பக்கமாக "சுந்தர கணபதி" என்னும் பெயருக்கு ஏற்றபடி அழகே உருவாகி அன்பர்களுக்கு அருள் பாலிக்கும் விநாயகர் முன்பு வந்து நிற்கிறோம். கோவிலில் பல்வேறு விநாயகர்கள் ஆங்காங்கே அமர்ந்திருந்தபோதும் சுந்தர கணபதிக்கு தனி மவுசு உண்டு. படியேறி மேலே வந்ததும், நம்மை வரவேற்கக் காத்திருப்பவர் போல நேர் தரிசனம் தருபவர் "ஸ்ரீ சோமஸ்கந்தர்". அம்மையும் அப்பனும் அருகிருக்க இருவரின் இடையே பாலமுருகனாக ஒப்பற்ற திருக்கோலத்தில் "சோமாஸ்கந்தர்" அமர்ந்துள்ளார். நடுவே உள்ள பாலமுருகன் நடனமிடும் பாணியில் இருப்பது குறிப்பிட வேண்டியது.

அடுத்து அருள்மிகு நவநீதேசுவரர் (வெண்ணெய்ப் பெருமான்) சிவலிங்க வடிவம் தாங்கி இக் கோவிலின் கருவறையில் அழகுற வீற்றிருக்கிறார். கேட்டதைத் தரும் காமதேனுவின் வெண்ணெயில் உருவாகி, வசிட்டரால் ஸ்தாபிக்கப்பெற்ற மூலமூர்த்தி இவர். காமதேனு, வசிட்டர், முசுகுந்தர், கோச்செங்கட் சோழன், திருஞானசம்பந்தர் ஆகியோர் தரிசித்து அருள்பெற்றுள்ளனர். அடுத்து, குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயின் குமிண் சிரிப்புமாக ஆனந்த தாண்டவமாடும் நடராஜ மூர்த்தியின் வலது பக்கம் மாணிக்க வாசகரும் இடது பக்கம் சிவகாமி அம்மையும் இவரது ஆடல்கண்டு ஆனந்திக்கின்றனர். அருகே, இத்தலத்திற்குத் தனிப்பெருமை சேர்க்கும் "சிங்கார வேலவர் சந்நிதி" உள்ளது. அழகும் இளமையும் பொருந்திய தோற்றப்பொலிவுடன் முருகன் கையில் வேலாயுதம் தாங்கி சேவற்கொடியோனாக வள்ளி - தெய்வானை சகிதம் மாமயில் வண்ணனாகக் காட்சி தருகிறார். பெருமானின் திருவடியின்கீழ் வெள்ளிமயில் ஒன்று உள்ளது. தந்தை வெண்ணெய்பிரான் மூலமூர்த்தியாக வீற்றிருந்தபோதும் சிக்கலில், தனயன் சிங்கார வேலனுக்கே முக்கியத்துவமும் முதல் மரியாதையும் கிடைக்கிறது.

கீழே மைய மண்டபத்தில் இரண்டு வரிசைகளில் நந்தி பலிபீடம் தம்பம் ஆகியவற்றைப் பார்த்தோமல்லவா. அதில் ஒரு வரிசை மூலவர் நவநீதேசுவரர் முன்பாகவும், மற்ற வரிசை சிங்கார வேலவர் சந்நிதி முன்பாகவும் இருப்பதை இப்போ அவதானிக்க முடிகிறது. மாடக் கோவிலின் ஒடுங்கிய மேற்புறத்தை வலம்வர விரும்பின் நான்கு மூர்த்தங்களையும் சேர்த்தே வலம்வரவேண்டும். தெட்சணாமூர்த்தி, லிங்கோற்பவர், துர்க்கை ஆகியோர் முறையே தெற்கு - மேற்கு - வடக்குப் பக்கங்களில் உள்ள சிறு மாடங்களில் வீற்றிருக்கின்றனர்.

**வியர்க்கும் அதிசயம்:**

"சிக்கலில் வேல் வாங்கி செந்தூரில் சம்ஹாரம்" என்னும் முதுமொழி நினைவுக்கு வருகிறது. கந்தசஷ்டி காலத்தில் சிங்கார வேலவனுக்குப் பத்து நாட்கள் பெருவிழா நடைபெறுகிறது. ஐந்தாம் நாள் தேர்த்திருவிழா முடிந்தபின், அம்பிகையிடமிருந்து ஞானவேல் வாங்கும் விழா நடைபெறுகிறது. வேல் வாங்கிய பின் தன் இருப்பிடம் நோக்கி விரைந்து செல்லும் சிங்கார வேலவனின் கன்னங்களில் வியர்வைத் துளிகள் ஏற்பட்டு வழிந்தோடும்

ஆற்று மண்ணுக்கு வேற்றுமண் உரம்.

அதிசயம் ஒவ்வொரு ஆண்டும் நிகழ்கிறது. இதனைக் காண மக்கள் கூட்டம் அலைமோதும். இந்தக் கூட்ட நெரிசலில் நெரிபட்டு மிதிபட்டுக் கண்குளிரப் பார்த்து அனுபவித்த அன்பரொருவர் மயிர்கூச்செறியும் இந்தச் சம்பவத்தினை உறுதி செய்தார். இதனைக் காணும் வாய்ப்பு நமக்குக் கிட்டவில்லை.

நவநீதேசுவர சுவாமிக்கு சித்திரை மாதத்தில் பத்து நாட்களுக்கான பெருவிழா தனியாக நடைபெறுகிறது.

**கோலவாமனப் பெருமாள்:**

மீண்டும் ஒருமுறை உட்பிரகாரத்தின் வடசுற்றுக்கு வாருங்கள். வடபிரகாரத்தின் நடுப்பகுதியில் உள்ள சிறிய கதவினூடாக வெளியே வந்தால் நாம் நேராக கிழக்கு நோக்கிய கோலவாமனப் பெருமாள் சந்நிதிக்கு வந்துவிடுகிறோம். ஸ்ரீதேவி, பூதேவி ஆகிய நாச்சியார்களை அருகே கொண்டு நின்ற திருக்கோலத்தில் பெருமான் அருள் பாலிக்கின்றார். கோலவாமனருக்கு எதிரே வெளி மண்டபத்தில் கருடாழ்வாரும், அவரை அடுத்து பரமபத நாதனும் உள்ளனர். இந்த இரண்டும் சுதை வடிவங்களாக இருந்த போதிலும் எழில் வண்ணமுடையதாக அமைந்துள்ளது. கோமளவல்லித் தாயார் கோலவாமனப் பெருமாளின் தேவியாவர். இவரது தனிக்கோயில் பெருமான் கோயிலின் பின்புறத்தே சற்றே பக்கவாட்டில் இருக்கிறது. பெருமாளை வணங்கியவுடன் தாயாரையும் வணங்கி வரவேண்டும் என்பதே முறை. சற்றே தள்ளி "ஸ்ரீ வரத ஆஞ்சநேயர்" வீற்றிருக்கிறார். ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி விழா இங்கே வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்தச் சந்நிதிகளின் சுற்றுச் சுவர்களில் ஸ்ரீ கிருஸ்ண பரமாத்மாவின் அவதாரங்கள் அத்தனையையும் வண்ண ஓவியமாக- மிகப் பெரியதாக அழகுற வரைந்துள்ளார்கள். இந்தச் சந்நிதிகள் அத்தனையையும் உள்ளடக்கிய தரைப்பகுதி வெகு சுத்தமாக வைக்கப்பட்டிருப்பது ஒரு சாதனையே. கோலவாமனப் பெருமாள் சந்நிதிக்கு நேராக மூன்று நிலைமாடக் கோபுரமும் திருக்கதவும் காணப்படுகிறது. பெருமாள் புறப்பாடு உள்ள வேளைகள் தவிர ஏனைய நேரங்களில் பொதுவாக இக்கதவுகள் பூட்டப்பட்டேயுள்ளன.

**சிக்கல் - பொரவச்சேரி ஆறுமுகன்:**

சிக்கல் முருகன் கோவிலுக்கு சரி நேராக உள்ள சீரற்ற ஒரு பாதையினூடாக 1 கி.மீ தூரம் பயணித்தால் வருவது பொரவச்சேரி என்னும் சிற்றூர். முத்தரசு சோழன் என்பான், சிலை செய்வதில் வல்லவனான "சில்ப முனிவன்" எனும் சிற்பியை அமர்த்தி ஆறுமுகனின் சிலையினை வடிக்கப் பணித்தான். சிற்பியும் தன் திறமை அனைத்தையும் காண்பித்து மயில்மீதமர்ந்துள்ள ஆறுமுகனின் திருமூர்த்தத்தை வடித்துக் கொடுத்தான். அற்புதமான அந்தச் சிலையின் அழகில் மயங்கிய மன்னன், "இது போன்றதொரு சிலையை சிற்பி இனிமேல் செய்யவே கூடாது" எனச் சுயநலமாகச் சிந்தித்து சிற்பியின் வலது கைப் பெருவிரலை வெட்டி விட்டான். கட்டை விரலை இழந்த சிற்பி "எட்டுக்குடி" சென்று, இதே போன்றதொரு ஆறுமுகன் திருவுருவை ஆக்கிக்கொடுத்தான். இதை அறிந்த முத்தரசு சோழன் கடுங்கோபங்கொண்டு சிற்பியின் கண்களைப் பறித்துக் குருடாக்கி விட்டான். கட்டை விரலுமின்றி, கண்களுமின்றி இருந்தபோதும் உறுதி குலையாமல்

அயலூரான "எண்கண்" வந்து தனது சிறிய மகளின் உதவியோடு மீண்டும் ஆறுமுகனின் சிலையை உருவாக்கினான். சிலையின் கண்கள் திறக்க வேண்டிய நல்ல நேரம் நெருங்கியது. தனது பிஞ்சுக் கரங்களால் முருகனின் கண்கள் திறக்கவேண்டிய இடத்தைத் தொட்டுக் காண்பிக்கிறாள் மகள். மகளின் கைவிரல்கள் மீது உளி பட்டு பீறிட்டுப் பாய்ந்த இரத்தம் சிற்பியின் கண்களிலும் பட்டுத் தெறித்தது. ஆறுமுகனின் திருவருட் கடாட்சத்தினால் கண்களையும் கட்டைவிரலையும் மீளப்பெற்றான் சிற்பி. உளிபட்ட மகளின் கைகள் காயமெதுவுமின்றி மீண்டது. இந்த, ஆறுமுகனின் மூன்றாவது திருவுருவமே "எண்கண்" திருக்கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

எண்கண் திருக்கோவிலானது திருவாரூர் - நாகபட்டினம் பாதையிலேயே சிக்கலுக்கு இன்னும் 5 கி.மீ முன்பாக நெடுஞ்சாலையிலேயே உள்ளது.

முதலில் வடிக்கப்பட்ட (1) சிக்கல்- பொரவச்சேரி (2) எட்டுக்குடி மூர்த்தங்களைவிட "எண்கண்" முருகன் அளவில் சற்றே சிறியது என்பதைத் தவிர வடிவ அமைப்பில் வேறுபாடு எதுவுமில்லை. எண்கண் திருக்கோவிலிலேயே முருகன் திருவுருவை ஆகக் கிட்டிய தூரத்தில் நின்று ஆறுமுகனைத் தரிசிக்கும் பாக்கியம் கிட்டியமையாலும், மயிலின் கால் நகம் முதல்- திருவாசியின் உச்சிவரை அர்ச்சகரின் தீபஒளி தெளிவாகப் பட்டதனாலும் ஆறுமுகனின் அழகிய சொரூபத்தை அள்ளிப் பருக முடிந்தது.

## அழகன் - முருகன்:

ஆறுமுகன் தனியாக மயில்வாகனத்தில் அமர்ந்தகோலத்தில் காட்சி அளிக்கிறார். மூலவரின் இரு புறத்திலும் வள்ளி தெய்வானை தனியாக உள்ளனர். முன்புறம் மூன்று, பின்புறம் மூன்று என அழகிய ஆறுமுகங்கள். பன்னிரு கரங்கள் தனித்தனியாக இடைவெளியுடன் காணப்படுகின்றன. பத்துக் கரங்களில் வலது பக்கம் சக்திவேல், அம்பு, கத்தி, சக்கரம், பாசம். இடது பக்கம் சூலம், வில், கேடயம், சேவற்கொடி, அங்குசம் ஆகிய ஆயுதங்கள். மற்ற இரு கரங்களில் ஒன்று அபயம் அளிக்கும் கரம். மற்றையது அம்பராத் தூளியிலிருந்து இரண்டு விரல்களால் அம்பை உருவுவதுபோல் தத்ரூபமாகவும்; அதற்கு ஏற்றாற்போல எதிர்ப்புறம் வில்லும் இயல்பாய் உள்ளது. கரங்களில் உள்ள விரல்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாக இடைவெளியுடன் காணப்படுகிறது. மயில் ஒரு காலைத் தூக்கி, ஒரு காலை ஊன்றி ஓடுவதுபோன்று அமைக்கப்பட்டிருக்கிறது. மயில் கால்களின் நகங்கள் பூமியைப் பற்றி இருக்கும்போது ஏற்படும் நகங்களின் அழுத்தத்தைக்கூட சிற்பத்தில் காணலாம். முழுமூர்த்தியின் எடை முழுவதையும் ஊன்றியிருக்கும் மயிலின் ஒற்றைக் கால் தாங்கி இருப்பதே இந்தச் சிற்பத்தின் சிறப்பம்சமாகும்.

## ஒரு குறிப்பு:

சிக்கல் முருகன் கோவிலுக்கும் மேலே தந்துள்ள விபரத்திற்கும் என்ன தொடர்பு எனக் கேட்கிறீர்களா? சிக்கலில் உள்ள ஆறுமுகனே சில்பா சிற்பி முதலாவதாக வடித்த "ஆறுமுகன்" என நம்மைப்போன்று மற்றவர்களும் கருதிவிடக்கூடாது என்பதற்காகவே மேலே உள்ள சிற்பியின் கதையைத் தந்திருக்கிறேன். சிக்கல்- பொரவச்சேரியில் உள்ள ஆறுமுகனே சில்பா சிற்பி முதலில் வடித்த "ஆறுமுகன்" ஆகும்.

# கார்த்திகைமாத வாராந்த நிகழ்வுகள்

**01.11.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "திருக்கைவேல் போற்றி போற்றி"

வழங்குபவர் :-செந்தமிழ் அறிஞன் சிவ. உமாசுதன் அவர்கள்

---

**08.11.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

**15.11.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

இறுவெட்டு வெளியீடு

---

**22.11.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

கலைநிகழ்வுகள்

வழங்குபவர்கள்:- காரைநகர்

கிழவன்காடு கலாமன்ற மாணவர்கள்

---

**29.11.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

## ஞானச்சுடர் கார்த்திகைமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு ச. நவரத்தினராசவேல் அவர்கள்

[இளை. அதிபர்]

மதிப்பீட்டுரை :- திரு செ. பரமேஸ்வரன் அவர்கள்

[அதிபர்]

191ஆவது மலர்

பதிவு இல. QD/25/NEWS/2013

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

